Not for sale

மார்ச் - ஏப்ரல் 2009

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# நினைவுக்கூறுதலை நடைமுறைப் படுத்துதல்

சீஷர்களுடைய கால்களைக் கழுவுதல் • நித்தியத்திற்கான தேவனுடைய நோக்கம்

இயேசுவின் பலியின் ஐக்கியம் • கலைமானின் தாகம்

துணிக்கையை தொய்த்தல் • யார் பெரியவன் ? • இயேசுவின் கடைசிப் பிரசங்கம்

கெத்சமனே நோக்கிய நடை பயணம்

நினைவுக்கூறுதலை நடைமுறைப் படுத்துதல்

# ஆதியிலே



"...ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை...." - யோவான் 15 :13

2009, ஏப்ரல் 7-ம் தேதி அன்று, சூரியன் அஸ்தமித்த பின்பு, உலகம் முழுவதும் உள்ள வேதமாணவர்கள் இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நினைவுக்கூறக் கூடிவருவார்கள். இது அப்பம் பிட்கவும் அவர் நினைவாக பாத்திரத்தை பானம்பண்ணவும் (1கொரிந்தியர் 11:24,25)அவர் விடுத்த எளிமையான வேண்டுகோளுக்கிணங்க தொடரப்படுகிறது. அவருடைய மரணத்தை நினைவுக்கூறுதல் மற்றும் விசுவாசிகளுக்கான ஞானஸ்நானம் ஆகிய இரண்டு சடங்குகள் மாத்திரமே இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றுபவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

ஹெரால்டின் இம்மாத பிரதியில், நினைவுக்கூறுதலில் காணப்படுகிறதும், அனுதின வாழ்க்கையில் நாம் நடைமுறை படுத்தவேண்டிய படிப்பினைகளைக் குறித்து ஆராய்கிறோம். ஒருவரும் நினையாத மிகச் சிறிய ஊழியத்தை இயேசு செய்ததை, சீஷர்களின் கால்களை கழுவுதல் என்பதில் பார்ப்பதின் மூலம் நாம் துவங்குகிறோம். கால்களைக் -கழுவுதல் இன்றைய நாட்களில் அபூர்வமாக காணப்பட்டாலும், நாம் செய்யக்கூடிய மற்ற ஊழியங்கள் அநேகம் இருக்கின்றன.

நித்தியத்திற்கான தேவனுடைய நோக்கம், தன்னுடைய சுபாவத்தை பகிர்ந்துகொள்ளும் ஒரு குடும்பத்தை தேவன் விரும்புவதைக் குறித்து விளக்குகிறது. அந்த குடும்பம் அவருடைய ஒரே பேரான குமாரனில் (யோவான் 1 :14) துவங்கி, பின்னாளில் கணவனுடைய சுதந்தரத்தில் மனைவி பகிர்ந்து கொள்வதுபோல, இந்த சுபாவத்தை கிறிஸ்துவோடு பகிர்ந்துகொள்ளும் சபையாகிய விசுவாசவீட்டாரும் சேர்க்கப்படுவார்கள். இயேசுவின் பலியின் ஐக்கியம், உலகத்திற்கான அவருடைய விலையேறபெற்ற பலியின் விலைகிரையத்தோடு ஒன்றையும் கூட்டாமல், சபை அங்கங்கள் கிறிஸ்துவினுடைய அனுபவங்களில் பங்கேற்பதை விளக்குகிறது.

கலைமானின் தாகம் என்று தலைப்பிடப்பட்டுள்ள சங்கீதம் - 42 ஆம் அதிகாரத்தின் வசன வாரியான தியானிப்பு, தேவனோடு உறவாட தாவீது "தாகமாயிருந்ததை" விளக்குகிறது.

இயேசுவிற்கு யூதாஸ் செய்த துரோகத்திற்கும், அவரை பேதுரு மறுதலித்ததற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை துணிக்கையை தொய்த்தல் விளக்குகிறது. இறுதிவரை யூதாஸ் தன்னுடைய தவறான பாதையில் நிலைத்திருந்தான், பேதுருவோ மனந்திரும்பி சபையின் தூணாக மாறினார்.

இராபோஜனத்திற்கு முன்பும், இராபோஜனத்தின் போதும் சீஷர்களுக்கு மத்தியில் தங்களில் யார் பெரியவன் ? என்ற கேள்வி உருவானது. அப்படிப்பட்ட எண்ணம் கர்த்தர் போதித்திருந்த தாழ்மையை கற்றுணர முடியாதபடி செயதது.

இராபோஜனத்திற்கு பின்பு இயேசு பேசினவைகளைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் விபரமாக எழுதியுள்ளார். இயேசுவின் கடைசி பிரசங்கம் அந்த வார்த்தைகளைக் குறித்து, விசேஷமாக அன்பைக் குறித்து பேசுகிறது. கெத்சமனே நோக்கிய நடைப் பயணத்தில் நாம் வாசிப்பது போல அந்த பிரசங்கம் மேல்வீட்டறையிலிருந்து அவர்கள் வெளியேறினபோதும் தொடர்ந்தது.

இவ்விதமாக, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்பாக நடந்து நிறைவேறினவைகளை தியானிக்கிற நாம், அவர் தம்முடைய சீஷர்களுக்கு போதித்த படிப்பினைகளை முக்கியமாக கவனிக்கவேண்டும். மேலும், எல்லா காரியங்களிலும் அவர் நம்மிடத்தில் மகிழ்வதற்கிணங்க இந்த படிப்பினைகளை நாம் நடைமுறைப் படுத்துவோம்.

## மார்ச் / ஏப்ரல் 2009


✣ **ஆதியிலே** .................... 1
(நினைவுக்கூறுதலை நடைமுறைப் படுத்துதல்)

✣ **சீஷர்களுடைய கால்களைக் கழுவுதல்** .................... 2
எளிமையும், நடைமுறையுமான ஊழியத்தை ஒருவருக்கொருவர் நிறைவேற்றவேண்டிய அவசியத்தை இயேசு போதித்தார்.

✣ **நித்தியத்திற்கான தேவனுடைய நோக்கம்** .................... 6
தேவனுடைய தெய்வீக குடும்பம் இயேசுவையும் 144000 அங்கத்தினரையும் உள்ளடக்கியதாகும்.

✣ **இயேசுவின் பலியில் ஐக்கியம்** .................... 10
அவரைப்போலாகும் முயற்சியில் நம்முடைய கர்த்தருடைய அனுபவங்களில் பங்கடைகிறோம்.

✣ **கலைமானின் தாகம்** .................... 14
அப்சலோமிடமிருந்து தாவீது விலகிபோனபோது எழுதியதாக கருதப்படும் சங்கீதம் 42-ஆம் அதிகாரத்தில் வசன வாரியான தியானம்

✣ **துணிக்கையை தொய்த்தல்** .................... 20
யூதாஸ் தன்னுடைய முடிவுக்காக மனஸ்தாபப்பட்டான், ஆனால் பேதுருவோ தன்னுடையதிலிருந்து மனமாறினான். யார் பெரியவன்?.....

✣ **யார் பெரியவன்?** .................... 26
முழுமையாகக் கொடுத்தாலும், நம்மிடம் எதிர்பார்ப்பதை மாத்திரம் நிறைவேற்றும் அடிமைகளாய் நாம் இருக்கிறோம்.

✣ **இயேசுவின் கடைசிப் பிரசங்கம்** .................... 32
யோவான் 14 ஆம் அதிகாரம், இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்த கடைசி ஆலோசனைகளைக் கொண்டுள்ளது.

✣ **கெத்சமனே நோக்கிய நடை பயணம்** 35
தனக்கு குறைவான நேரமே இருப்பதை அறிந்து, நீங்கா நினைவுகளை விட்டு செல்லும் வார்த்தைகளை இயேசு பயன்படுத்தினார்.

**கவிதைகள் மற்றும் சிறு கதைகள்**
**கிறிஸ்துவின் சமாதானம்**
**இரட்சகரே எங்களுக்கு உதவும்** 19
**யூதாஸ்** 25
**தீர்க்கதரிசனத்தில் இன்று** பின்அட்டை
**நம்முடைய உயிர்த்தெழுதல்**

ஒருவரையொருவர் பரிசுத்தம் பண்ணுங்கள்

# சீஷர்களுடைய கால்களைக் கழுவுதல்



"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். " - யோவான் 13 :14

Aaron Marten

வேத வசனங்கள் மற்றும் உலக வரலாற்றிலும், கால் கழுவுதல் என்ற வழி முறை ஆதாரத்தோடு எழுதப்பட்டிருக்கும் ஒரு பிரபலமான பாரம்பரிய பழக்கமாயிருக்கிறது. மூன்று தூதர்கள் ஆபிரகாமை சந்தித்து அவருடைய குமாரனின் பிறப்பை முன் அறிவிக்க வந்த போது, அவர்களுடைய கால்களை கழுவும்படியாக தண்ணீர் மொள்ள ஆபிரகாம் விரைந்தார். (ஆதியாகமம் 18 : 2 -8) அதே போல லோத்தும், தன்னிடம் வந்த தூதர்களுக்கு கால்களை கழுவ தண்ணீர் கொடுத்து உபசரித்தார். (ஆதியாகமம் 19 : 1- 3) யோசேப்பின் சகோதரர்கள் தானியம் கொள்ள எகிப்துக்கு சென்றபொழுது தங்களுடைய கால்களை கழுவினார்கள். (ஆதியாகமம் 43: 24, 25) தாவீதின் ஊழியக்காரர்களின் கால்களை அபிகாயேல் கழுவினாள். (1 சாமுயேல் 25:41) அப்போஸ்தலனாகிய பவுலும் பரிசுத்தவான்களின் கால்களை கழுவினதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். (1 தீமோத்தேயு 5 :10) இந்த வசனங்களில் பவுல் சொல்லர்த்தமாகவும், அடையாளமாகவும் பேசுகிறார்.

தேவைப்பட்ட நேரங்களில், விருந்தாளிகளின் கால்களை கழுவி, தங்களுடைய உபசரணையை வெளிப்படுத்துவது பாரம்பரிய பழக்கமாக இருந்தது. வனாந்தர சீதோஷணத்தில், பாதரட்சைகளை அணிந்து, கால் நடையாக நெடுந்தூரம் பயணிக்கும்பொழுது அடிக்கடி கால்களை கழுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அநேகர் பாதரட்சைகள் அணியாமலே நடந்தார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் பணிபுரியும் ஆசாரியர்கள், தங்களுடைய வேலைகளை செய்யும் முன், தண்ணீர் தொட்டியிலிருக்கும் தண்ணீரினால் கைகளையும், கால்களையும் கழுவ வேண்டும் என்ற கட்டளை பெற்றிருந்தார்கள். "அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் போதும், கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தினிடத்தில் ஆராதனை செய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவக்கடவர்கள்." (யாத்திராகமம் 30: 19,20)

பழங்காலத்து ரோம பாரம்பரியத்தில், உணவு அருந்தும் முன் ஒரு பக்கமாய் சாய்ந்து தலையை உயர்த்தி படுத்து கொள்வது வழக்கத்திலிருந்தது. அதாவது இவர்கள் சாய்வு கட்டில்களில் படுத்து கொண்டு, தங்களுடைய இடது கையை தலைக்கு அண்டை கொடுத்து, வலது கரத்தால் உணவை புசிப்பார்கள். இந்த நிலையில் அவர்களுடைய கால்கள் நீட்டினபடி இருக்கும். அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு, சிலுவையில் அறையப்படும் முன் இராபோஜனத்தின் பொழுது இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் நம்முடைய ஆண்டவர் கடைசியாக சில பாடங்களை தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்தார். (லூக்கா 22:14, யோவான் 13:5,12)

**போட்டி மனப்பான்மை**

இராபோஜனத்திற்கு ஒரு வாரம் முன் இயேசு தன்னுடைய சீஷர்களோடு எருசலேமுக்கு சென்று கொண்டிருக்கையில், யோவானும் யாக்கோபும் இயேசுவிடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள் - "... உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்ய வேண்டும் என்றார்கள்." (மாற்கு10: 37) இயேசு பதில் அளித்த பின், மற்ற அப்போஸ்தலர்கள் யாக்கோபு மற்றும் யோவானை குறித்து எரிச்சலடைந்தார்கள் என்று வாசிக்கிறோம். (வசனம் - 42) "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து - புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது, உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத்

தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். " (மாற்கு 10 : 42-45) அன்பின் மிகுதியால் இயேசு அவர்கள் மத்தியில் வளர்ந்து கொண்டிருந்த போட்டி மனப்பான்மையை கண்டித்தார். இந்த சிந்தை யோவான் மற்றும் யாக்கோபினிடம் ஒரு நல்ல நோக்கத்தோடு தான் எழும்பியிருக்கவேண்டும். "தேவனுடைய இராஜ்யத்தில் ஆண்டவரின் வலது, இடது புறமாக அமருவது" என்பது அவரோடு நெருங்கி வாழவேண்டும் என்ற விருப்பத்தை பொருள் படுத்துகிறது. இவர்களுடைய நோக்கம் செம்மையானதாக இருந்தாலும், தன்னை அதிகமாக தாழ்த்துகிற ஊழியக்காரன், கிறிஸ்துவின் சரீரத்தில் உன்னதமான இடத்திற்கு உயர்த்தப்படுவார்கள் என்றுமை இயேசு கற்பித்தார்.

இயேசுவோடு மூன்றரை வருடங்கள் ஊழியத்திலிருந்தும், தாங்கள் பெற்ற ஆவியினால் சீஷர்கள் அவர் வைத்து சென்ற முன் மாதிரியை பின்பற்ற இயலாதவர்களாய், ஆண்டவரின் பிரிவுக்கு பின்,சபையை சரியாக ஸ்தாபித்து அதை நடத்த நம்பிக்கையற்றவர்களாயிருந்தார்கள். கால போக்கில் கிறிஸ்துவின் சரீரத்தை மேற்கொள்ளக் கூடிய ஒரு ஆவி, மகா அந்திக்கிறிஸ்து அமைப்பின் வடிவில் வந்து முழுமையாக ஆக்கிரமிக்கும் என்று இயேசு அறிந்திருந்தார். (வெளி 2:6,15) தன்னுடைய சொந்த குணநலன்களுக்கு ஒப்பிடும்பொழுது, இவைகள் எவ்வளவு அபாயமும், எதிரிடையுமானது என்று இயேசு இவர்களுக்கு செய்முறையில் நிரூபிக்க விரும்பினார். ஆனால் அவர்கள் எருசலேமை நோக்கி பயணித்த பொழுது, "எவன் பெரியவனாயிருப்பான்" என்ற சீஷர்களின் சிந்தைகளில் இருந்த சந்தேகங்களின் முழுமையாக விளக்கங்களை புரிய வைக்க இயேசுவால் முடியவில்லை. ஏனென்றால் இராபோஜனத்தின்போதும் இதே சந்தேகத்தை சீஷர்கள் சம்பாஷித்து கொண்டிருந்தனர். (லூக்கா 22:24)

**இயேசு சீஷர்களின் கால்களை கழுவுதல்**

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர் களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்." (யோவான் 13 : 1,3 -5)

இராஜ்யத்தில் தங்களுக்குரிய பதவிகளை குறித்து வாக்குவாதம் செய்து கொண்டிருக்கும் சீஷர்கள் மத்தியில், அமைதியாக எழுந்த இயேசு சீஷர்களுடைய கால்களை கழுவ தொடங்கின பொழுது, சீஷர்களின் இருதயம் அவமானத்தாலும், தாழ்மைவுணர்வாலும் எவ்வளவு வருத்தப்பட்டிருந்திருக்கும் என்பதை நாம் உணரலாம். இயேசு சீஷர்கள் மேல் வைத்திருந்த மிகுதியான அன்பின் நிமித்தமாக, அவர்களுக்கு மனத்தாழ்மை மற்றும் எளிமையை பற்றிய மிகத் தேவையான பாடத்தை இவர்களுக்கு கற்றுக்கொடுக்க விரும்பினார். தன்னுடைய சகோதரர்களை திருத்தும்படியாக இவர்கள் மேல் வைத்த அன்பினால் , இதை நடைமுறை விளக்கமாகவும், பொறுமையாகவும், அன்போடும் இயேசுவே இதை செய்து காட்டினார். "அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி - ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக - நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி - நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக - நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றான். அதற்குச் சீமோன் பேதுரு - ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான். " (யோவான் 13:6 -9)

முதலில் பேதுரு தன்னுடைய கால்களை கழுவ அனுமதிக்கவில்லை. வீட்டு வேலைக்காரர்கள் செய்யும் பணியை ஆண்டவராகிய இயேசு செய்தது,பேதுருவுக்கு காரணமற்றதாக தோன்றியது. இயேசு பேதுருவிடம் வந்த பொழுது, தன்னுடைய கால்களை கழுவ வேண்டாம் என்று வருந்தி கேட்டுகொண்டார். பேதுரு தன் மேல் வைத்திருக்கும் மரியாதையினிமித்தமாக இப்படி சொன்னார் என்பதை இயேசு அறிந்து, "...நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை..." என்று பதில்

அளித்தார். ஆனால் அந்நேரத்தில் சீஷர்களின் கால்கள் கழுவப்பட்டதினால் அதிகமாக பலன் அடைந்தார்கள் என்று பொருள் அல்ல. மாறாக, பேதுருவும் மற்ற சீஷர்களும் மனத்தாழ்மையையும், தேவனுடைய ஆசீர்வாதங்களை பெறுவதற்கான கிருபையையும் தங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தியதால் இவர்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் என்று அழைக்கப்படமாட்டார்கள்.

இந்த சம்பவங்கள் நடைபெறும்பொழுது, யூதாஸ் அவர்கள் மத்தியிலிருந்து மற்றவர்களை போல தன்னுடைய கால்களையும் கழுவ பெற்றான். இவன் தன்னை காட்டி கொடுப்பான் என்பதை இயேசு முன் அறிந்தும், அந்த இடத்தில் இயேசு யூதாஸை அனுமதித்தார். அத்தருணத்தில், தன்னால் இயன்ற மட்டும், மனப்பூர்வமாக யூதாசுக்கு கடைசியாக ஒரு வாய்ப்பை இயேசு கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்த செயலும் யூதாஸின் மனதை மேலும் அதிகமாக கடினப்படுத்தியது. "...ஆவியிலே கலங்கி - உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்." (யோவான் 13:21)

தன்னை காட்டி கொடுப்பவனை இயேசு அறிந்திருந்தாலும், அவர் அவனை நியாயந்தீர்க்கவோ, கடிந்து கொள்ளவோ இல்லை. அதேபோல் நாமும் நம்முடைய சக சகோதரர்களின் இருதயத்தின் சிந்தைகளை நியாயம் தீர்க்கக்கூடாது என்ற மிக முக்கியமான பாடத்தை நமக்கு வைத்திருக்கிறார். இயேசு தாமே ஒவ்வொரு தனி நபர்களுக்கும் தனித்தனியாக அனுபவங்களை கொடுத்து அவர்களை வளர்ச்சிக்கு ஏதுவாக நடத்துகிறார். ஆனால் இந்த பயிற்சியானது ஒவ்வொரு தனி நபர்களின் நோக்கத்தை பொருத்தே, ஆவிக்குரிய வளர்ச்சியும் (..கிறிஸ்துவுக்குள் ...... வளருகிறவர்களாயிருக்கும்படியாக.... " - எபேசியர் 4:15), வீழ்ச்சியும் (யூதாஸைப் போல) அமைந்துள்ளது. நல்ல மேய்ப்பன் தன்னுடைய ஒரு ஆட்டையும் எளிதில் நெறிதவற விடுகிறதில்லை.

**இது ஒரு பாடம், சடங்கு அல்ல**

சில விசுவாசமுள்ள விதவைகள் பரிசுத்தவான்களின் கால்களை கழுவினதாக குறிப்பிடப்பட்டிருப்பதை தவிர, புதிய ஏற்பாட்டில் கால் கழுவுவதைப் பற்றி வேறெங்கும் சொல்லப் படவில்லை. மேலும் 1தீமோத்தேயு 5:10 ஆம் வசனத்தில், கால் கழுவுதல் ஒரு சடங்காக அல்ல, மாறாக கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர்களிடம் மனத்தாழ்மையையும், உபசரிக்கும் விதத்தையும் வெளிப்படுத்தவுமே செய்யப்பட்டு வந்தது என்று இங்கு தெளிவாகிறது. இதற்கு எதிரிடையாக ஆண்டவரின் இராபோஜனத்தின் போது, இது முக்கியத்துவம் படுத்தப்பட்டதுமின்றி ஆண்டவரால் கொடுக்கப்பட்ட ஒரு நேரடியான சட்டமாகவும் விளங்கியது. "இதை என் நினைவாக செய்யுங்கள்.." (லூக்கா 22: 17- 19, 1கொரிந்தியர் 5 : 7,8, 11: 23 -26)

"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13: 14,15) கிறிஸ்தவர்களுக்கு எளிய நடத்தையையும், சகோதரர்களுக்குள்ளே, ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யும் மனபான்மையையும் கற்று கொடுப்பதே இதற்குள் அடங்கிய சரியான உள்நோக்கமாகும். உலகத்தில் சில பகுதிகளில் உள்ள பாரம்பரியத்தில் சொல்லர்த்தமாக கால்களை கழுவுதல் வழக்கமாக செய்யும் ஒரு செயலாகவும் இருக்கிறது. இருந்தபோதிலும், வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இவ்விதமான பழக்கம் இயேசுவின் காலத்தில் உபசாரங்களை வெளிகாட்டுவதற்காக இருந்ததை போல இருக்கவில்லை. பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளில் இது நடைமுறைக்கு மாறான ஒரு அசௌகரியமாக இருந்தது. இயேசுவின் உபதேசம் உலகத்தின் அனைத்து பகுதியில் உள்ள மக்களுக்கும் பொருந்த வேண்டும். ஆகவே இயேசு ஒருவருக்கொருவர் சொல்லர்த்தமாக கால்களை கழுவுதலுக்கு முக்கியத்துவத்தை கொடுக்கவில்லை, மாறாக இருதயத்தில் வளர்ச்சி அடைய வேண்டிய மனத்தாழ்மைக்கும், ஊழியம் செய்யும் உணர்வுகள் விருத்தியடைய வேண்டும் என்ற பாடத்தை சீஷர்களுக்கு கற்று கொடுக்க விரும்பினார்.

இந்த கால் கழுவுதலின் சடங்குகளை மார்டின் லூத்தர் கண்ட பொழுது, இவைகள் இன்னும் தொடர்ந்து வரும் போப் மார்க்கத்தின் பழக்க வழக்கத்தில் ஒன்று என கண்டறிந்தார். ஆகவே "நாம் தண்ணீரினால், கால்களை கழுவுவது பிரயோஜன மற்றது, ஏனெனில் கழுவ வேண்டுமானால் பன்னிரெண்டு சீஷர்களுடைய கால்களை மட்டும் அல்ல, அனைவரின் கால்களையும் கழுவ வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு வேளை முழு சரீரத்தையும் கழுவும்படி கட்டளை பெற்றிருந்தால், இந்த குளியலின் மூலம் ஜனங்கள் அதிகமாக

பயனடைந்திருக்கலாம். ஆகவே உங்களுடைய அயலாரின் கால்களை நீங்கள் கழுவ விரும்பினால், உங்கள் இருதயத்தில் மனதாழ்மையும், மற்றவர்களுக்கு உதவும் மனபக்குவத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறோமா என்று முதலில் உங்களை நீங்களே சோதித்தறியுங்கள்." என்றார்.

**ஒருவருக்கொருவர் கால்களை கழுவுதல்**

ஆண்டவர் செய்து காட்டின மாதிரியிலிருந்து ஒரு கிறிஸ்தவன் என்னென்ன செயல்பூர்வமான பாடங்களை கற்று கொள்ளலாம் ? நம்முடைய இரட்சகரின் கனிவான எடுத்து காட்டுகளை எவ்வழிகளில் நாம் பின்பற்றி நடப்பது ?

"தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு..." (யோவான் 13 :3,4) இந்த சம்பவத்தில் குறிப்பிடப் படாதவைகள் என்ன என்பதை சற்று கவனியுங்கள். யார் நம்முடைய கால்களை கழுவுவார்கள் என்று எந்த சீஷனும் கேட்கவில்லை அல்லது கட்டாயமாக கால்களை கழுவ வேண்டும் என்று யாருக்கும் தோன்றவும் இல்லை அல்லது யாரும் மற்றவர்களுடைய கால்களை கழுவ வேண்டும் என்ற வாய்ப்பையும் எதிர்பார்க்கவும் இல்லை. ஆண்டவர் செய்து காட்டின இந்த மாதிரியில் மிக முக்கியமான பாடம் ஒன்று அமைந்துள்ளது. சீஷர்கள் தங்களுடைய கால்களை கழுவ மற்றவர்களை வேண்டிகொள்ளும் வரை இயேசு காத்திருக்கவில்லை. தன்னுடைய சகோதரர்களை சேவிக்க ஒரு வாய்ப்பு கிடைத்த பொழுது உடனடியாக அவர் முந்திக்கொண்டு செய்தார். அதேபோல் நாமும் ஆண்டவரின் ஜனங்களுக்கு ஊழியம் செய்ய வாய்ப்பு கிடைக்கும்பொழுது அதை நழுவ விடாமல் உடனடியாக, முன் வந்து செய்ய வேண்டும்.

இயேசுவின் காலத்தில் அவர்களின் பழக்க வழக்கத்தின்படி கால் கழுவுதல் தேவையான ஒரு பழக்கமாக நடைமுறை செய்யப்பட்டது. அதே போல் இக்காலத்திலும் தேவ ஜனங்களை உபசரிப்பதற்கு நம்முடைய பழக்க வழக்கத்திலும் அநேக காரியங்கள் உண்டு. சில நேரங்களில் அவர்களை ஜெப கூட்டங்களுக்கு அழைத்து செல்லலாம் சிலருடைய இயலாமையில், அவர்களுடைய வீட்டு வேலைகளில் அவர்களுக்கு உதவி செய்யலாம். இப்படியாக சகோதரர்களுக்கு உதவி செய்ய இன்னும் அநேக உலக பிரகாரமான பொறுப்புகள் உண்டு. "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்." (கலாத்தியர் 6 :10)

ஆனால், ஆவிக்குரிய வழிகளில், இன்னும் முக்கியமாக பல முறைகளில் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவலாம். இந்த " பூமியில்" இயேசு சீஷர்களின் கால்களை "தண்ணீரினால்" கழுவினார். உடன்படிக்கை செய்த அனைத்து கிறிஸ்தவர்களும் மரணபரியந்தம் "....மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுவது..." (11கொரிந்தியர் 7: 1)வாழ்க்கையில் ஒரு புனிதமான பணியாக உள்ளது. நாம் ஒருமித்து கூடி வருகையில், நம்முடைய சம்பாஷனையானது நம்முடைய சக சகோதரர்களின் சிந்தையையும், இருதயத்தையும், ஆண்டவரின் வார்த்தைகளை கொண்டு சுத்திகரித்து அவர்களின் பாரங்களை குறைக்கக்கூடியவர்களாயிருக்க வேண்டும்.

இயற்கையாக, உலகபிரகாரமான சிந்தை உலகத்தின் காரியங்களால் ஈர்க்கப்படும் ஆனால் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு - "... ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்." (1தெசலோனிகேயர் 5 :11) "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று எண்ணப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்." (எபிரெயர் 3:13) நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளை ஒருவருக்கொருவர், நினைப்பூட்டிக் கொண்டு, இந்த மனுக்குலத்திற்கு முன்பாக, வசனங்களில் உள்ள குறிப்புகளை பகிர்ந்து கொண்டு, விழுந்த போன மனித நிலையை ஜெயிக்க ஒருவரை ஒருவர் ஊக்குவித்து, தேவ வசனமாகிய தண்ணீரினால்" நாம் ஒருவருக்கொருவர் சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி கொள்ளலாம். (எபேசியர் 5:26) "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்." (1யோவான் 3 :16)

ஒரு விசேஷித்த குடும்பம்

# நித்தியத்திற்கான தேவனுடைய நோக்கம்



"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள், உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." - 1யோவான் 3:1

**Harry Wildblood**

வருடந்தோரும் நினைவுகூறப்படும் நம்முடைய ஆண்டவரின் மரண நாள் அன்று, நாம் நம்முடைய தேவனோடு கொண்டுள்ள உறவை தொடர்ச்சியாக கிறிஸ்துவின் ஈடுபலியின் இரத்தத்தினால் புதுப்பித்து கொள்கிறோம். இந்த நினைவுகூறுதல் வருடத்திற்கு ஒரு முறையாக இருந்தாலும், "...நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம்..." (1கொரிந்தியர் 11:25)

இயேசுவின் பலியை நாம் சரியாக மதிப்பிட்டு, தனிப்பட்ட வகையில் நாம் நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட நடத்தையில் தினந்தோறும் அதை நினைவுகூற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

தேவனுடைய திட்டததை அறிந்துகொள்ள நாம் சற்று திரும்பிச் செல்வோம். மனிதன், அண்டசராசரங்கள், மற்றும் லோகாஸையும் சிருஷ்டிக்குமுன்,தேவன் தனித்திருந்தார். அவருக்குள் சகலமும் பூரணப்பட்டிருந்தது. அதாவது, நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பு என்ற குணங்கள் பரிபூரணமாக இருந்தது. மேலும் திவ்விய சுபாவத்தில் அவர் தன்னில் தான் ஜீவனுடையவர். இந்த குணலட்சனங்களை தன்னுடைய படைப்பின் பல நிலைகளில் வெளிப்படுத்தி, அவைகள் அந்தந்த நிலைக்குரிய ஆசீர்வாதங்களை பெற விரும்பினார். கடைசியாக ஞானமுள்ளவர்கள் அவருடைய குணங்களை பிரதிபலித்து, அவரைப் போல் மாறும் பொழுது, அவருடைய சொந்த சாயலை கொடுத்து, அவர்களுக்கு முழு சுயாதீனத்தையும், இறுதியாக அழியாமையையும் கொடுக்க, சித்தமானார். எல்லாவற்றிற்கும் மேலாக தன்னை போல அன்பு, நீதி, ஞானம், வல்லமையை (சங்கீதம் 132:13,14)பெற்ற ஒரு தெய்வீக குடும்பத்தை தேவன் விரும்பினார்.

இவைகள் எவ்வாறு நிறைவடையும்? திவ்விய சுபாவத்தில் ஜீவன்களை சிருஷ்டிப்பின் செயலானது, திரும்ப மாற்ற இயலாததும், மாற்ற முடியாததுமானது. இதை மிக சரியான முறையில் செய்ய வேண்டுமானால் முதலில் ஒரு மரிக்கக்கூடிய, தாழ்ந்த நிலையில் உள்ள ஜீவிகளை சிருஷ்டித்து, இருதயத்தின் விருப்பங்கள் வழியாக, சரியான பாடங்கள் மற்றும் அனுபவங்களோடு, சிருஷ்டிப்பதின் பூரண குணங்களை வளர்ச்சி அடையச்செய்து, மரணபரியந்தம் வரை முழுமையாக சோதித்து, அதற்குப்பின் அந்த குணங்களுக்கு அழியாமையை, அதாவது திவ்விய சுபாவத்தை கொடுப்பது தேவனுடைய திட்டமாகும்.

தேவன் லோகாஸை சிருஷ்டித்தார், அதற்கு பின் அவர் மூலமாக பரலோகத்தில் உள்ள சேனைகளையும், பூமியையும், தொடர்ச்சியாக மனிதனையும் சிருஷ்டித்தார். ஒரு குறிப்பிட்ட கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனால் மரித்து விடுவார் என்றும் கீழ்படிந்தால் ஜீவனோடு இருக்கலாம் என்றும் ஆதாமுக்கு முன்னறிவிக்கப்பட்டது. (ஆதியாகமம் 2 :17) ஆனால் நன்மை தீமையின் அனுபவங்கள் இல்லாததினால், சோதனையின் போது இடறி பாவத்தில் விழுந்து மரண தீர்ப்பை அடைந்தார். அவருடைய பிள்ளைகளும் மரணநிலையை பெற்று கொண்டார்கள். ஆகவே ஆதாமின் சந்ததியில், "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே." (சங்கீதம் 49:7,8) இப்படியாக ஒருவரும் மனுக்குலத்தை விடுவிக்கக்கூடாமல் போனது.

இரண்டாயிர வருடங்களுக்கு பின், ஆபிரகாமின் உறுதியான விசுவாசம் மெய்ப்பிக்கப்பட்ட பின், தேவன் அவருடைய சந்ததியின் மூலம் பூமியின் எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்களித்தார். (ஆதியாகமம் 22 :15- 18, கலாத்தியர் 3: 8, 16, அப்போஸ்தலர் 3:25) குறித்த காலம் நிறைவேறினபோது லோகாஸ் மாம்சமாகி மரியாளிடத்தில் பிறந்த பின், ஆதாமின் விழுந்து போன சந்ததியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு சந்ததி இந்த வாக்குறுதியை நிறைவேற்ற துவங்கியது. (கலாத்தியர் 4 :4,15)

தன்னுடைய 30 -ஆம் வயதில் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்,...." (எபிரெயர் 7 :26) நம்முடைய ஆண்டராகிய இயேசு தன்னையே ஜீவ பலியாக

ஒப்புக்கொடுத்து தேவனோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். (சங்கீதம் 50:5) ஆதாமுக்கு பதிலாக சரி நிகர் சம விலையாக, தனக்குள்ளதையெல்லாம் பலியாக ஒப்புகொடுத்தார். அனுபவங்களின் மூலமாகவும், உபத்திரவங்கள் மூலமாகவும் கடைசியாக சிலுவையில் அறையப்படும் வரை அவருடைய குணநலன்கள் நிரூபிக்கப்பட வேண்டியதாக இருந்தது. (பிலிப்பியர் 2:7 -11) தேவனோடு அவர் செய்த பலியின் உடன்படிக்கையில் அவர் முடிவு பரியந்தம் உண்மையாக இருந்ததினால், இயேசு மரணத்திலிருந்து திவ்விய சுபாவத்திற்கு உயர்த்தெழுப்பப்பட்டார். ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அவருடைய பூரண மனித ஜீவனை இயேசு அர்ப்பணிக்க காத்திருந்தார்.

இயேசு பூரண மனிதனாக இருந்தபடியால், அவர் தேவனோடு உடன்படிக்கை செய்யவும் அவருக்குமுன் நிற்கவும் தகுதி பெற்று இருந்தார். இயேசு, கிறிஸ்துவாக மாறி தன்னை அர்ப்பணித்த பொழுது தேவன் அவருடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து தன்னுடைய அங்கீகாரத்தை வெளிப்படுத்தினார்.

**அபிஷேகிக்கப்பட்டவர்கள் ஒருவருக்கும் அதிகமானவர்கள்**

பெந்தெகோஸ்தே நாளின் போது, தேவனால் அபிஷேகம் பெற்ற கிறிஸ்து, ஒருவராக மட்டும் அல்லாமல் அநேகரானார்கள். கிறிஸ்துவோடுகூட மனுக்குலத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட 1,44,000 பேர் இதில் அடங்குவார்கள். இதுவே மூடப்பட்ட இரகசியமாக இருந்தது, பழைய ஏற்பாட்டின் நிகழ்வுகளில் இவைகள் மறைக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று இவைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. " ...கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்."(கொலோசேயர் 1:27) இவைகள் எவ்வாறு சாத்தியப்படும் ? இயேசு தேவனுக்கு முன் நிற்க திராணியுள்ளவராய் பரிபூரண மனிதனாக இருந்தார், அவர் தேவனோடு செய்த உடன்படிக்கையையும் தேவன் ஏற்றுக்கொண்டார். ஆனால் விழுந்து போன மனித இனம் தேவனுக்கு முன் நிற்க தகுதியற்றதாக இருந்ததினால், அவரோடு கூட உடன்படிக்கை செய்ய இயலாதவர்களானார்கள். ஆனால், கேட்கும் செவி உடையவர்கள்,உண்மையுள்ளவர்கள், தேவனிடத்தில் பக்தியுள்ளவர்கள், சத்தியத்தை அறிய வாஞ்சையுள்ளவர்கள், எது நடந்தாலும் தேவனுடைய சித்தம் செய்ய விரும்புவோர்களுக்கு தேவன் யாக்கோபு மூலம் சொல்வது என்னவென்றால் - "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்...." (யாக்கோபு 4: 8) அவர் தன்னிடம் சேர்த்து கொள்வதற்கு முன் கிறிஸ்துவிடம் கூட்டி சேர்க்கிறார். (யோவான் 6 :44) இங்கு இவர்கள் தேவனுடைய குணங்களாகிய நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பை காண்கிறார்கள். இவர்கள் தேவனுடைய ஈடுபலி மற்றும் திருப்பிகொடுத்தலின் திட்டங்களையும், நீடிய பொறுமையையும், கிருபையையும், அவர் பூமியின் குடும்பங்களை ஆசீர்வதிக்கக்கூடிய அவருடைய நோக்கங் களையும், இவ்வனைத்தும் தன்னுடைய ஒரே பேரான குமாரனின் பலியின் மூலம் நடப்பிக்க போகிறார் என்பதை கற்றுக்கொள்கிறார்கள். இயேசுவை தேவனிடம் செல்லும் வழியாக அவர்கள் அறிந்துகொள்ள துவங்குகிறார்கள். (யோவான் 14 :6) விசுவாசத்தோடும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் உள்ள நம்பிக்கையினாலும், தங்களை அர்ப்பணிக்கும் நோக்கத்தோடு இன்னும் நெருங்கி வந்து, இயேசு யோர்தானில் செய்த உடன்படிக்கையை போல, தங்களுடைய மனித உரிமைகளை பலி செலுத்துகிறார்கள்.

தேவனுக்கு முன்பாக கையொப்பம் இடக்கூடிய பத்திரங்களை தேவன் பார்த்துக் கொண்டிருப்பதை நாம் நம்முடைய மனகண்களுக்கு முன் காணலாம். அவர் ஒவ்வொருவருடைய ஒப்பந்தங்களையும், வாக்களித்தவைகளையும், இருதயத்தின் நோக்கங்களையும் மற்றும் அவரை நோக்கி விழுந்து போன மனித நிலையில் கையொப்பங்கள் எழுதப்படுவதையும் காண்கிறார். அதற்கு பின் அவருடைய சொந்த குமாரனுடைய கையொப்பத்தையும் விழுந்து போனவர்களின் பங்காளியாகவும் அவர் கொடுத்த வாக்குறுதிகளையும், பரிந்து பேசிகிறவராகவும் அவரை காண்கிறார். அனைவரின் குறைகளையும் தன்னுடைய சொந்த குமாரனின் இரத்தத்தினால் மூடப்படுவதை அவர் ஏற்றுகொண்டு, அனைவரும் தன்னுடைய தெய்வீக நீதிக்கு முன் தகுதியுள்ளவர்களாக நிற்க திராணியுள்ளவர்களாக மாற்றுகிறார். அவர்களின் அர்ப்பணிப்புகளின் ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்டதோடு அந்த நபர் மாம்சத்தில் மரித்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவராய், "தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின்" ஒரு பகுதியாகிறார். தேவன் - "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக

அவரையே ஏற்படுத்தினார்." (ரோமர் 3:26 ) அந்த நொடிபொழுதிலிருந்து தேவனுடைய கிருபையினால் கிடைத்த கிறிஸ்துவின் ஈடுபலியின் இரத்தத்தினாலும் அவரோடு தொடர்ந்து ஐக்கியப்பட்டிப்பார்.

**தேவ ஆட்டுக்குட்டி**

தேவனோடு ஒப்புரவாகுவதற்கு, தேவனால் ஏற்று கொள்ளப்படக்கூடிய ஒரு பலியை செலுத்த வேண்டும் என்று வேத வசனங்களில் மீண்டும் மீண்டுமாக ஆட்டுக்குட்டியின் பலியின் மூலம் எடுத்து காட்டப்பட்டுள்ளது. 6000 வருடங்களுக்கு முன் ஆபேல் - "...தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான், ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்." (ஆதியாகமம் 4 :4) ஆபேல் தலையீற்றுகளில், கொழுமையான ஆட்டுக்குட்டியை தேவனுக்கு பலி செலுத்தினார். இரண்டாயிரம் வருடங்களுக்கு பின், தேவன் மோரியா மலையில் சாராள் பெற்ற முதற்பேரான குமாரனாகிய ஈசாக்கை பலி செலுத்தும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார். (மோரியா என்ற எபிரெய வார்த்தைக்கு நீர் என்னை காண்கிற தேவன் என்று பொருள் ) அவர்கள் பிரயாணமாக செல்கையில், "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" என்று ஈசாக்கு கேட்டார். அதற்கு ஆபிரகாம் - "..என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்.." என்றான். (ஆதியாகமம் 22 :7,8) ஆபிரகாம் விசுவாசித்தபடியே தேவன் ஈசாக்கை ஆபிரகாமின் கைக்கு தப்புவித்தார். நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு பின், கிமு 1615 -யில், தேவன் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து பஸ்கா ஆட்டுக்குட்டியின் மூலம் விடுவித்தார். அந்த இரவில் பஸ்கா ஆட்டின் இரத்தத்தின் கீழ் இஸ்ரயேலரின் அனைத்து தலைச்சன் பிள்ளைகளையும் தப்புவித்து, எகிப்தின் அனைத்து தலைச்சன்களையும் சங்கரித்தார். கடைசியாக கிமு 29 -ஆம் வருடத்தில் இரண்டாயிரம் வருடங்களுக்கு பின் ஈசாக்கு ஆபிரகாமிடத்தில் கேட்ட கேள்விகளுக்கு "இதோ உலகத்தின் பாவத்தை தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகனால் பதில் அளிக்கப்பட்டது.

ஆட்டுக்குட்டியானது விசுவாசமும், கீழ்படிதலும், எஜமானனின் சித்தம் செய்கிற மாசற்ற ஒரு பிராணி என்று நாம் அறிவோம். தன்னுடைய மனப்பூர்வமான பலியானது அன்பையும், பக்தியையும் செயலாற்றுகிறது. வருடந்தோறும் அனுசரிக்கக்கூடிய பஸ்காவில் தேவன் இந்த ஒரு விசேஷித்த பாடத்தை மீண்டும், மீண்டுமாக நினைப்பூட்டுகிறார். இதுவே சட்டத்தின் முதல் அம்சமாக இருக்கிறது. ஆனால் இதன் உண்மையான பொருள் 1647 வருடங்களாக வெளிப்படுத்தப்படவில்லை. இயேசு தன்னுடைய நெருங்கிய சீஷர்களோடு கடைசி போஜனத்தை புசிக்கும் பொழுது இயேசு இந்த நினைவுக்கூருதலின் நிஜமான பொருளானர். "..அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து - இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்." (லூக்கா 22:19) "இந்த உலகத்திற்கு ஜீவனை கொடுக்கும்படி" தன்னுடைய பாவமற்ற மனித நிலையை கொடுத்த இயேசுவே "வானத்திலிருந்து இறங்கின அப்பமாக" இருக்கிறார். (யோவான் 6 :32 -35)ஆகவே இயேசு உயர்ந்த ஆவிக்குரிய நிலைக்கு உயர்த்தப்பட்டார். தன்னுடைய மனித ஜீவனை மற்றவர்களுக்காக கையளித்தார். இந்த ஈடுபலியானது, அவரை பின்பற்றும் சிஷர்கள் நீதிமான்களின் நிலையை பெற்றுகொண்டு தேவனோடு நல்லுறவு கொள்ள வழி வகுக்கிறது.

"போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து, இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை யாயிருக்கிறது என்றார்." (லூக்கா 22:20) அவர் பலி செலுத்தப்பட்ட விதத்தில் வெளியேற்றப்பட்ட ஜீவனை அந்த இரத்தம் அடையாளப்படுத்துகிறது. தேவனால் கொடுக்கப்பட்ட அனுபவங்களின் பாத்திரத்தில் முழுமையாக பாணம் பண்ணின பின், அவமானத்தின் உச்சக்கட்டமாக அவர் சிலுவையில் அறையப்பட்டு, மரணம் அடைந்தார். (உபாகமம் 21:22,23, கலாத்தியர் 3:13)

தேவனுக்கு முன் முழு விசுவாசத்தையும், தன்னுடைய பூரண குணநலன்களையும், நிரூபித்தார். இவைகளுக்கு பின், நாம் நீதிமானாக்கப்படுவதற்கும், போதிப்பதற்கும் மற்றும் நமக்காக பரிந்து பேசுவதற்கும்,"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருப்பதற்கும்.." (ரோமர் 8:37) "தேவனுடைய சர்வவல்லமையினால்" தெய்வீக நிலைமைக்கு அவர் உயர்த்தப்படுவதற்கு தகுதிபெற்றார். (எபேசியர் 1:19,20)

**என் நினைவாக ......**

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற அவருடைய வார்த்தைகளை நினைவுகூறுவோம், நம்முடைய கடந்த கால பாவங்களும், தகுதியற்ற நிலைமையும், நம்மை குற்ற உணர்வுகளுக் குள்ளாக்கி, தேவனுடைய கிருபை மற்றும் இரக்கங்களை பெறுவதை தடுக்காமலிருக்கக் கடவது. கிறிஸ்து நமக்காக செலுத்தின பலியையும், பரிந்து பேசும் மத்தியஸ்தருமாக இருப்பதை நாம் மறந்து விடவேண்டாம். (1யோவான் 2:1) நம்முடைய மீறுதல்களுக்கு பதிலாக தேவன் நிச்சயமாக தன்னுடைய சொந்த குமாரனுடைய இரத்தத்தை நிச்சயமாக ஏற்று கொள்வார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (ரோம 8:33,34) ஆனால் கேட்கப்படக்கூடிய ஒரே கேள்வி - "நாம் இதை செய்கிறோமா ? " என்பதே.

தேவனுடைய நாமம் விவரிக்கப்படுவதற்காக பயன்படுத்தப்படும் முதல் வார்த்தை நினைவிருக்கிறதா - "...கர்த்தர், கர்த்தர், இரக்கமும் , கிருபையும், நீடிய சாந்தமும்,....." (யாத்திராகமம் 34:6) நாம் நீதிமானாக்கப்பட்டு அதற்கு பின் சுத்திகரிக்கப்பட்டு, பூரணப்பட்டு, சீர்பொருந்துவதற்கு தேவன் ஒருவரே நமக்கு வழிவகுத்திருக்கிறார்." அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். ...நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூறுகிறார்." (சங்கீதம் 103 :10 -12,14)

நம்மை நீதிமானாக்கப்படுவதற்கும், தொடர்ந்து நீதியின் வஸ்திரத்தை சுத்திகரிப்பதற்கும் நாம் கிறிஸ்துவின் வாக்களிக்கப்பட்ட நன்மைகளை இருகப்பற்றிக் கொள்வோமாக. "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோவான் 1:9) இந்த விதமாக நாம் நம்முடைய பிதாவாகிய தந்தையோடு உறவை புதுப்பித்து கொள்கிறோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை, "பிரதான ஆசாரியராகவும், பரிந்து பேசுகிறவராகவும்", மாதிரியாகவும், மற்றும் முன்னோடியாகவும் நமக்கு முன்வைத்து பிதாவாகிய தேவனுக்கு முன் நம்பிக்கையோடு நிற்கலாம். (எபிரெயர் 4:14-16, 12:2)

தன்னுடைய சீஷர்களுக்கு தேவைப் பட்ட பாடங்களை கற்று கொடுக்கவும், தொடர்ந்து பெலப்படவும், இயேசு இந்த உலக வாழ்கையின் கடைசி இரவை அவர்களோடு செலவழித்தார். அவர்களுக்கு மனதாழ்மையையும், ஒருவருக் கொருவர் பரஸ்பர உதவிகள் செய்யும் மனபான்மையை கற்று கொடுப்பதற்காக இயேசு அவர்களுடைய பாதங்களை கழுவினார். திராட்சை செடியையும், அதன் கொடிகளையும் குறித்து பேசும் பொழுது, அவர் மேல் சார்ந்து வாழவேண்டும் என்பதையும், களைகள் நறுக்கப்படுவதின் அவசியத்தையும், கனி கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தையும் குறித்து பேசினார். இவை அனைத்தும், சரீர அங்கங்களின் மேல் அவர் வைத்திருந்த அளவு கடந்த அன்பை எடுத்துகாட்டுகிறது. பிதாவாகிய தேவன் எவ்வளவாய் இயேசுவை நேசித்தாரோ, அது போல் இயேசு சீஷர்களை நேசித்தார். "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன், என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்." (யோவான் 15:9) ஆகவே இந்த வசனம் ஆழமான பொருளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

நாம் கிறிஸ்துவின் அன்பில் உண்மையாக நடப்பதே, நாம் நம்முடைய பரலோக பிதா நமக்கு செய்த சகலத்திற்கும் நன்றியையும், அன்பையும் தெரிவிக்கக்கூடிய மிக சிறந்த வழியாகும். ஆகவே நாம் நித்தமும் "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொறுட்டு......" (11பேதுரு 1:4) மகா மேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தங்களையும் பற்றிக்கொண்டு நம்முடைய ஆண்டவரின் மாம்சத்திலும், இரத்தத்திலும் பங்கெடுக்கும் மிக பெரிய பாக்கியத்தை பெற்றதற்காக நன்றி செலுத்துவோமாக. "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது..... மெய்யான பானமாயிருக்கிறது. " (யோவான் 6:55)

நம்முடைய ஆண்டவரின் நினைவுகூறும் நாள் நெருங்கியிருப்பதால், நாம் நம்மையே "....சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவோம்." (1கொரிந்தியர் 11:28)

அவருடைய அனுபவங்களில் பங்கடைதல்

# இயேசுவின் பலியில் ஐக்கியம்



"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." - 1 கொரிந்தியர் 10:16,17

Russell Marten

பாத்திரம் மற்றும் அப்பத்தை குறித்து இந்த வார்த்தைகளை வாசிக்கையில், அபூரணமான மாம்சத்தில் இருக்கும் நாம் அவரோடு எவ்வாறு பங்கு கொள்ள முடியும் ? என்ற கேள்வி நமக்குள் எழும்பலாம். இயேசுவின் பலியில் பங்கெடுப்பது, அவருடைய பலியின் நன்மைகளை மாசுபடுத்துவது போல் தோன்றவில்லையா ? கலந்துகொள்வது அல்லது பங்கெடுத்துகொள்வது என்ற வார்த்தைகளுக்கான பொருளை புரிந்து கொள்வதற்கு முதலில் நாம் இந்த வசன பகுதியில் "பங்குபெறுகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தை எவ்வாறாக "ஐக்கியம்" என்ற கருத்தோடே சம்பந்தப்பட்டிருக்கிறது என்று முதலில் ஆராயவேண்டும்.

பகிர்ந்துகொள்ளுதல் அல்லது ஐக்கியம் என்பதற்கு பொதுவான ஐக்கியம், அல்லது இரண்டு பகுதிகள் ஒன்றாக இணைக்கப்படுதல் என்று எளிதாக நினைக்க தோன்றும். மனித அனுபவத்தில் நன்மையை, தீமையோடும், சுத்தத்தை அசுத்தத்தோடும் சேர்ப்பது,"மாசுப்படுத்துவது" அல்லது "களங்கங்கள்" என்று பொருள்படுகிறது. ஆகவே "பங்கெடுப்பது" என்ற வார்த்தைக்கு இந்த வசனங்களில் இயற்கையாகவே "திருப்தியில்லாத" என்ற பொருளைத்தரக்கூடியதாக தோன்றுகிறது. எந்த விதமான அபூரணமான மனிதன் கொடுக்கும் எந்த காரியமும் பூரண கிறிஸ்துவின் பலியோடு இணைத்தால் நிச்சயமாகவே இயேசுவின் பூரணபலி குறைவாக மதிப்பிடப்படும் அல்லது அபூரணமாகி விடும். எப்படியிருந்தாலும், பவுல் இப்படிப்பட்ட காரியங்களை வலியுறுத்தவில்லை. இயேசு நிறைவேற்றின பூரணமான பலி தனித்தன்மையானது. இது எந்த விதத்திலும் அவருடைய சீஷர்களின் பலியை போல் இல்லை. ஆனாலும் உண்மையில் இயேசுவின் பரிபூரண பலியானது, சீஷர்கள் அவருடைய நோக்கத்தையும், பக்தியையும் பின்பற்றுவதின் மூலம் கிடைக்கும் இயேசுவின் அனுபவங்களிலிருந்து தள்ளிவைப்பதும் இல்லை. இந்த அபூரணமான மனித பலிகளை, சட்டப்பூர்வமாக மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக தேவன் ஏற்றுகொள்கிறாரா ? நிச்சயமாக இல்லை, தேவனுடைய நீதிக்கு ஒரே ஒரு பரிபூரண மனித பலி தேவைப்பட்டதே தவிர அதற்கு குறைவானது அல்ல. இயேசுவின் வேலைகள் சகல விதத்திலும் முழுமை பெற்று, தேவனுடைய நீதியை பொருத்த வரை எல்லாவற்றிலும் போதுமானதாக இருந்தது.

நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய அனுபவங்களில், தன்னுடைய ஜீவனை இந்த உலகத்திற்கு ஈடுபலியாக கொடுப்பதே அடிப்படையான முதல் நோக்கமாக இருந்தது, அடுத்து தன்னுடைய சரீர அங்கத்தினர்கள் ஜீவிப்பதற்கதாக ஒரு புதிய மார்க்கத்தை திறப்பதே அவரின் இரண்டாவது நோக்கமாக இருந்தது. தன்னுடைய சரீர அங்கத்தினர்கள் கடினமாக முயற்சி செய்து அவரை பின்பற்றுவதற்கு இயேசு தன்னுடைய பிதாவின் மேல் வைத்துப் பரிபூரண பக்தியை மாதிரியை வைத்து சென்றார். ஆகவே கிறிஸ்துவின் மரணமும், ஜீவனும் இந்த உலகத்திற்கும், கிறிஸ்துவின் சரீரத்திற்கும் மிகுந்த ஆதாயமாக இருக்கிறது.

கிறிஸ்துவின் இரத்தத்தின் ஐக்கியம் மற்றும் அவருடைய சரீரம் பிட்கப்படுகிறது என்று பவுல் எதைக்குறித்து பேசுகிறார் என்பதை நாம் இப்பொழுது புரிந்து கொண்டிருப்போம். இயேசு எந்த எதிர்ப்பார்ப்புகளோடு இவைகளை செய்தாரோ, அவர் என்னன்ன அனுபவங்களை உணர்ந்தாரோ, அவர் எவைகளை கற்று கொண்டாரோ, மற்றும் எவைகளை போதித்தாரோ - இவைகள் அனைத்திலும் பங்கு கொள்வதையே குறிக்கும். இப்படியாக, இயேசு இந்த உலகத்திற்காக பிட்கப்பட்ட "அப்பமானார்".

"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும், நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானனிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள், அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்." (யோவான் 15:19,20) என்ற இந்த கோட்பாடு மிக எளிமையாக இயேசுவால் குறிப்பிடப்பட்டது.

ஊழியக்காரன் எஜமானனிலும் பெரியவன் அல்ல, அல்லது அவரை விட சீஷர்களின் அடிச்சுவடுகள் மகத்தானதல்ல. நாம் நம்மையே அர்ப்பணித்து, கற்று கொள்ள வேண்டிய பாடத்தை கற்றுகொண்டால் மட்டுமே இயேசுவை புது சிருஷ்டியாக வளர்ச்சியடைய செய்த அனுபவங்கள் நம்மையும், புது சிருஷ்டியாக மாற்றும். ஒவ்வொரு வருடமும் அவருடைய மரணத்தை நினைவுகூறும்பொழுது, இயேசு இந்த உலகத்தின் மனுக்குலத்திற்காக தந்த இரட்சிப்பையும், நமக்கு கொடுக்கக்கூடிய நம்பிக்கைக்காகவும் என்னென்ன கொடுத்தார் என்று நாம் நினைவுக்கூற வேண்டியவர்களாயிருக்கிறோம். பொதுவாக இதில் பங்கு கொள்வது என்றால் நம்முடைய விருப்பம் - "அவருக்குள் மரிக்கவேண்டும்" என்பதே. இப்படியாக நாமும் "அவரோடு வாழ்ந்து, அவரோடு "பாடுபடவேண்டும்". அப்பொழுது நாம் "அவரோடு கூட ஆளுகையும்" செய்யலாம். (11தீமோத்தேயு 2 :11, 12)

"நிஜத்திற்கு பதிலாக நாம் அடையாளங்களை பயன்படுத்துவதில்லை, மேலும் நம்முடைய ஆண்டவருடைய நோக்கமும் இதுவாக தான் இருந்திருக்கவேண்டும் அல்லது நம்முடைய சரியான தகுதியை அவர் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். நம்முடைய இருதயம் அவரோடு ஐக்கியப்படவும், அவரால் நம்முடைய இருதயம் போஷிக்கப்படுவதும், அவர் தன்னுடைய சரீர அங்கத்தினர்களோடு வைத்திருக்கும் ஐக்கியத்தையும், பலியின் உடன்படிக்கையின் பொருளை உணர்ந்து இருதயத்தின் உணர்வுகளில் நாம் விசுவாசமுள்ளவர்களாயிருந்து, ஒவ்வொரு நாளும், வருடந்தோறும் இவைகளை தொடர்ந்து பற்றி கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். நித்தமும் நம்முடைய ஆண்டவரோடு நொறுக்கப்பட்டு, தொடர்ந்து அவருடைய நன்மைகளால் போஷிக்கப்பட்டு ஆண்டவருக்குள் அவருடைய வல்லமையில் உறுதியாக பலப்பட்டு வளர்ச்சியடையக்கடவோம்." -Studies in the Scriptures, p.466

இந்த அப்பத்திலும், பாத்திரத்திலும் பொதுவாக பங்குகொள்வதற்கான பொருள் கூறுவது எளிது, ஆனால் அதை செயல் முறைப்படுத்துவது மிகக்கடினம். இயேசுவின் முதல் வருகைக்கு பின் கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடங்கள் ஆயிற்று. அநேக காரியங்கள் மாறிவிட்டது - உடைகள், வாழ்க்கையின் தரம், மதங்களின் எண்ணிக்கை, மதத்தின் மதிப்பை பற்றிய கண்ணோட்டங்கள், மற்றும் வாழ்க்கையில் எதிர்நோக்குகளில் உள்ள இன்னும் சில காரியங்களை நாம் கூறலாம். வரலாற்றின் அடிப்படையில் நாம் காணும் பொழுது, அறிவின் பெருக்கமானது, அநேக இடங்களில், நல் நடக்கைக்குறிய வழிகாட்டியாக மதங்களை சார்ந்திருப்பது மனிதர்களின் பார்வையில் எதிர்மாறானவைகளாகவே தோன்றுகிறது. ஆனால் இன்று பொதுவான ஐக்கியத்திற்கு இயேசுவின் அனுபவங்களை விரிவாக பார்ப்பதற்கு நமக்கு எவ்வளவு செயல்பூர்வமாக இருக்கிறது என்று பார்த்தீர்களா ?

இது நிச்சயமாக நடைமுறை படுத்தவேண்டும். மேலும், இதை செய்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. நாம் இயேசு மற்றும் ஆதிகால சபைகளின் அனுபவங்களை தனித்தனியாக பார்க்கலாம். மேலும் வசனங்களில் பதிவான சம்பவங்களையும், அதில் மறைந்திருக்கும் ஒவ்வொரு கோட்பாடுகளையும் ஆராய்ந்து பார்த்த பின் அந்த கோட்பாடுகளை நம்முடைய வாழ்க்கையில் நடை முறை படுத்த நாம் முயற்சி செய்வோம்.

அடுத்து நம்முடைய சொந்த அனுபவங்களை சீர்தூக்கிபார்த்து, ஒவ்வொரு அனுபவங்களோடும் வேத வசனங்களை ஒப்பிட்டு

பார்த்து அந்தந்த சூழ்நிலைக்கு தக்கதாக பாடங்களை கற்று கொள்ளவேண்டும். எடுத்து காட்டாக நம்முடைய வேலை ஸ்தலங்களில் அல்லது இந்த உலகத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் கீழ்தரமாக நடத்தப்படலாம். பொதுவாக எவ்விதத்தில் தவறு நேர்ந்தது என்று உடனடியாக சுட்டிக்காட்ட மனித இயல்பு முயற்சி செய்யும். பழைய மனிதன் அவைகளை உறுதிப்படுத்த அநேக வழிகளை பிரயோகிக்கலாம். இருந்தபோதிலும், சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவராகிய இயேசுவை அநீதியாக நடத்தின விதத்தைப்போல் இந்நாள் வரைக்கும் ஒருவரும் நடத்தப்படவில்லை. அவருடைய மகத்துவமான குணங்களை மௌனமாகவும், வார்த்தைகளின் மூலமும் செயல் படுத்திக்காட்டினார்.

முதலில் நாம் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட அனுபவங்களை பார்த்து, அல்லது நம்முடைய சொந்த அனுபவங்களுக்கு ஒப்பான வசனங்களை ஒப்பிட்டு பார்த்து நமக்குள் வளர்ச்சி அடைகிற புது சிருஷ்டியை போஷிக்கவேண்டும். முதலாவது வழிமுறையானது நம்முடைய வருங்கால கிறிஸ்துவுக்குள்ளான அனுபவங்களை எதிர் நோக்க ஆயத்தப்படுத்த உதவுகிறது. வசனங்களை அடிப்படையாக கொண்ட கோட்பாடுகளை நம்முடைய சிந்தையில் சேர்த்து வைத்தால், வருங்காலத்தில் எடுக்கவேண்டிய முடிவுகளை, மிக சரியாக ஆண்டவரின் விருப்பத்தின்படி எடுக்க உதவி செய்யும். மேலும் வசனங்களில் உள்ள ஆழமான அர்த்தங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ள நம்முடைய மனதை அதிகமாக ஊக்குவிக்கும்.

கிறிஸ்துவ வாழ்க்கையில் நமது சார்பாகவும், எதிராகவும் கிடைக்கும் புதிய அனுபவங்களை பெறும் பொழுது, வசனங்களை கூர்ந்து கவனிக்கையில், இயேசுவின் அனுபவங்களில் பங்கெடுப்பதில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை நன்கு அறிந்துகொள்ளலாம். ஆனால் எந்த அனுபவங்களையும் நாம் ஆராய்ந்து, பாடங்களை கற்றுக்கொண்டு அவைகளினால் வருங்கால முடிவுகளை எடுப்பதற்கு இவைகளை பயன்படுத்தாவிட்டால் நாம் பெறும் அனுபவங்களால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. சென்ற காலத்தில் நாம் தனிப்பட்ட நோக்கங்களுக்காக எடுத்த முடிவுகளை ஆராய்ந்து பார்ப்பது நம்முடைய குணலட்சனங்களை வளர செய்யவேண்டும். மேலும் வருங்காலங்களில் எந்த சூழ்நிலைகளிலும் சரியான நோக்கத்துடன் ஏற்ற முடிவுகளை எடுக்க வழிநடத்தும்.

**தவறான போக்கை சரியாக்குதல்**

சில நேரங்களில் நாம் ஏன் தவறான முடிவுகளை எடுத்து விடுகிறோம் -? நிச்சயமாக, தேவனை வேதனைப்படுத்துவது நம்முடைய நோக்கம் அல்ல. ஆனாலும், இந்த பழைய மனுஷன் அதாவது மாம்சமானது அவ்வபொழுது, பழைய புது சிருஷ்டியோடு போர் புரியும், புது சிருஷ்டியை ஜெயித்து விடுகிறது. பழைய மனுஷனும், புது சிருஷ்டியும் நடத்தும் போர்களில் - புது சிருஷ்டி அவ்வபொழுது அடையும் தோல்விகளின் வழியாக, நாம் பாடங்கள் கற்று கொண்டு புது சிருஷ்டி ஜெயம் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும். அதற்காகவே நாம் கிறிஸ்துவின் பாடுகளில் பொதுவாக பங்கெடுத்து கொள்கிறோம். "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." (ரோமர் 8 :18) என்பது நாம் அறிந்ததே. புதிய சிந்தையின் வெற்றிக்கு இப்படிப்பட்ட ஒரு உறுதிமொழி போதுமானது. ஒரு தோல்வியை நாம் ஆராய்ந்து புது சிருஷ்டிக்கு நன்மை உண்டாக்கும் பாதையை காட்டிலும் குறைவான பாடுகள் உள்ள பாதையை தேர்வு செய்ய நம்முடைய மனது விரும்பலாம்.

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பது ஒரு மிகப்பெரிய பொறுப்பாகும். இந்த யுகம் முழுவதும் சரீர அங்கங்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். நாம் அபூரணராக இருந்தாலும் இயேசுவின் அதே அனுபவங்களை பெற்று, வெளிப்படுத்தும் கிரியைகள் இந்த உலகத்திற்கு சாட்சியாகிறது. நமக்கு முன் வைத்திருக்கும் வாழ்க்கைத்தரத்தை விட்டு, நாம் அடிக்கடி கீழே விழுந்து, தோல்விகளை தழுவினாலும், நாம் சோர்ந்து விடக்கூடாது. கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களின் புது சிந்தையின் செயல்பாடுகளை இப்பொழுது இந்த உலகம் மதிக்காது. ஆனால் இராஜ்யத்தில், உலகம், இந்த சரீர அங்கத்தினர்களுக்கு செய்ததையும், அதற்கு

பதிலாக அவர்கள் நடந்து கொண்ட விதங்களையும் நன்கு உணர்ந்து, அவைகளை இவர்கள் மாதிரியாக பின் பற்றி, சுவிசேஷ யுகத்தில் இதில் பொதுவாக பங்கெடுத்த கிறிஸ்துவ அங்கத்தினர்கள் செய்த அனைத்தையும் பாராட்டுவார்கள்.

கிறிஸ்துவின் சரீரங்களாக அழைக்கப் பட்டவர்களில், அதிகமான விசுவாசம் கொண்டவர்கள், கிறிஸ்துவின் குணலட்சனங்களை கண்ணாடியை போல பிரதிபலித்து, "இயேசு எந்த சூழ்நிலையில் என்ன செய்தாரோ" அவைகளையே செய்வார்கள். ஒவ்வொரு சரீர அங்கத்தினர்களுக்கும் அவரின் அனுபவங்களில் பங்கெடுத்து இப்படிப்பட்ட இலக்கை அடைவது எப்பேற்பட்ட பாக்கியம் என்று சற்று யோசித்து பாருங்கள். நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது சரியான காரியத்தை, முறையாக நம்முடைய வேலைகளை குறித்து சம்பாஷிக்கிறோம். அதே அக்கறையை நாம் நம்முடைய எஜமானனை அன்றாட வாழ்க்கையில், சரியாக பிரதிபலிக்க கவனமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் இந்த உலகம் எதிர்பாராத அளவில், நாம் இயேசுவை பிரதிபலிக்க வாய்ப்புகளை தேடி அதை நடைமுறை படுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துவ வழியானது பல மடங்கு, கடினமானதாகவும், வெகு தூரமாகவும் இருக்கலாம். நம்முடைய மாம்சமானது இந்த கஷ்டங்களை சகிக்க முடியாது என்றும் இப்படிப்பட்ட காரியங்களை நடத்த முடியாது என்றும் புரட்சிகரமாக முறையிடலாம். ஆனால் இவை அனைத்துமே நம்மை காயப்படுத்துவதற்காகவோ, நம்மை சோர்வுக்குள்ளாக்குவதற்காக வோ அல்ல என்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம். கிறிஸ்துவின் சரீரமாக இணைக்கப்பட்டு, அவரை போலாவதற்கு இப்படிப்பட்ட குறுகிய பாதையில் நடப்பது மிக அவசியம். நம்முடைய பரலோக தந்தையை மகிழ்வித்து, அவரை மகிமைப்படுத்துவதற்கு இதை விட நம்மால் எப்படி முடியும்? இதை விட ஒரு நல்ல சந்தர்ப்பம் நமக்கு கிடைக்குமா? நம்முடைய ஆண்டவரும் இப்படிப்பட்ட பாடுகளை அனுபவித்ததினால், அப்பமும் பாத்திரமும் எந்த அளவுக்கு நம்மை ஆண்டவரோடு இணைக்கிறதோ, அந்த அளவுக்கு நாம் இப்படிப்பட்ட பாடுகளில் பங்கெடுக்கக்கூடியவர்களாயிருக்கிறோம். நம்முடைய ஆண்டவரை போல் நிலைமையில் அல்ல, அவருடைய குணநலன்களில் இருக்க, இவை அனைத்துமே நாம் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாம் இவைகளை செய்யும் பொழுது அநேக அனுபவங்களை பெறுகிறோம். ஏனெனில், ஊழியக்காரர் தன்னுடைய எஜமானிலும் பெரியவன் அல்ல. ஆனால் இந்த ஐக்கியத்தை எடுத்துகாட்டுவதற்கு எஜமான் - ஊழியக்காரன் என்ற உறவு சரியாக பொருந்துவதில்லை. இந்த உறவை காட்டிலும் சிநேகிதர்களின் உறவு இதற்கு சரியாக பொருந்தலாம். இயேசு நமக்கு மூத்த சகோதரனும், இராஜாவாகவும் இருந்தாலும், அவரை ஒரு சிநேகிதனாக ஏற்றுக்கொள்ளும் பொழுது அவரை போல் மாறுவதற்கு நாம் அதிக உறுதியோடு முயற்சி செய்யலாம். நாம் மற்ற உறவுகளை காட்டிலும், சிநேகிதரிடம் நம்முடைய குற்றங்களை ஒப்புகொள்ளலாம். நம்முடைய சிநேகிதரோடு ஒருமித்து வேலை செய்யலாம்."நான் பெற்ற இலக்கை நீங்கள் பெறுவதற்கு நீங்கள் என்னை விட அதிகமான காரியங்களை செய்யவேண்டும்" என்று இயேசு நமக்கு கற்பித்திருந்தால் நாம் என்ன செய்திருப்போம்? ஆனால் அவர் அப்படி சொல்லாமல், நாம் அனைவரும் சகோதரரும், சிநேகிதருமாயிருக்கிறோம் என்றும், நாம் படப்போகிற பாடுகளில் பங்கெடுத்துக்கொண்டால், கால போக்கில் நாம் அனைவரும் ஒரு தலை உள்ள சரீரமாக மகிமைப்படுத்தப்படுவோம் என்றும் இயேசு கூறினார். ஆகவே அவருடைய நெருங்கிய சீஷரிடம், அவர் - "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்." (யோவான் 15:14) என்றார்.

ஆகவே நாம் அனைவரும் இந்த இராபோஜனத்தில் பங்குபெறுவதற்கான வாய்ப்பை பெற்றதற்காக மகிழ்ச்சியோடு அதை நினைவுகூர்ந்து, நம்முடைய குணலட்சனங்களை இயேசுவின் குணலட்சனங்களை போல பிரதிபலிப்போமாக.

நம்பிக்கையினால் இரட்சிக்கப்படுதல்



# கலைமானின் தாகம்

"தேவனே, நீர் என்னுடைய தேவன், அதிகாலமே உம்மைத் தேடுகிறேன், வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்." - சங்கீதம் 63:1,2

42 -ஆம் சங்கீதத்தை குறித்த வசன வாரியான ஆராய்ச்சி

கடுந்துன்பமும், சோதனைகளும் நிறைந்த வாழ்க்கையில் மட்டுமே தேவனை வாஞ்சையோடு தேட முடியும். செழுமையான வளர்ச்சியின் போது, மனிதனின் தேவைக்காக தேவனை தேடும் நோக்கம் குறைந்து போகிறது. ஆனால் எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவங்கள் அதை அதிகரிக்கிறது. இந்த உண்மைகளை அனுபவித்து சாட்சி கொடுத்தவர் இஸ்ரயேலின் இராஜாவாகிய தாவீது. இவர் இரண்டு பகுதிகளையும் அனுபவித்திருக்கிறார். ஒரு இராஜாவாக, வெற்றியடைந்த ஒரு போர் வீரனாய் ஜனங்கள் ஆர்ப்பரித்ததை அவர் அறிந்திருந்தார். "அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில் - சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்." (1சாமுயேல்18 :7)ஆனால் சவுலின் கோபத்திற்கு தப்பின போதும், குமாரனாகிய அப்சலோம் தகப்பனை எதிர்த்து புரட்சி செய்த பொழுதும் வேதனை மற்றும் தளர்ச்சியின் ஆழத்தை உணர்ந்தார்.

பல முகங்களை, அதாவது பல குணங்களை பிரதிபலிக்கக்கூடியவராக தாவீது இருந்தார். மிக சிறந்த போர் வீரனான் இராணுவ வீரனின் மனிதனுக்குரிய சகல அம்சங்கள் மற்றும் மென்மையான ஒரு கவிஞரின் நிலைமையையும் பெற்றிருந்தார். அவருடைய இந்த குணங்களின் பிரதிபலிப்பானது - "என் இருதயத்துக்கு ஏற்றவன். ..."(அப்போஸ்தலர் 13:22) என்று தேவன் சாட்சி கொடுக்கும்படி செய்தது.

**சங்கீதத்தின் தலைப்பு**

(கோராகின் புத்திரரிலுள்ள இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் தாவீதின் சங்கீதம்)

வேதாகமத்தில் உள்ள மற்ற பகுதிகளில் மொழிபெயர்ப்பாளர்களின் விருப்பத்தின்படி திடீர் என்று தலைப்புகளோடு அல்லது மேல் அட்டையில் சிலவார்த்தைகளை சேர்ப்பதுபோல, சில சங்கீதங்களின் தலைப்புகளில் சேர்க்கப்பட்ட வார்த்தைகளும் திடீர் என்று உணர்ச்சிவசப்பட்டு எழுதப்பட்டவைகளின் பதிவாகும். சங்கீதமானது ஆராதனையின் போது ஆலயங்களில் பாடப்படவேண்டியதும், இவைகளை பாடுவதற்காக "கோகாத்தின் புத்திரர்" என்று அழைக்கப்படுபவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டதுமாக இருந்தது. இதுவே "இசை இயக்குநர்" என்பதற்கு சொல்லப்பட்டிருக்கும் விவரமாகும்.

ஆலயத்தின் வேலைகளுக்காக தாவீது பாடகர்களை இருபத்தி நான்கு பிரிவுகளாக பிரித்து, அவைகளின் மூன்று பிரிவுகளுக்கு லேவி கோத்திரத்தாரில் மூன்று பேரை குறிப்பிட்ட இசை இயக்குனர்களாக நியமித்தார். (1நாளாகமம் 6 :31-53) கோகாத்தியனாகிய ஏமான் (வசனம் -33),கேர்சோனியனான ஆசாப் ( வசனம் -39,43), மெராரியனான ஏதான் (வசனம் -44) என்பவர்கள் பாடல் குழுவிற்கு மூன்று முக்கிய தலைவர்களாயிருந்தார்கள். கோகாத்தின் வழி வந்ததினால், ஏமானால் நடத்தப்பட்ட பாடல் குழுவினர் "கோகாத்தின் புத்திரர்" என்று அழைக்கப்பட்டார்கள்.

உண்மையில், ஏமானுக்கு இரண்டு குறிப்பிட்ட முற்பிதாக்கள் இருந்தனர் - கோராகு மற்றும் சாமுயேல். ஏமான் சாமுயேலின் குமாரனாகிய யோயேலின் வழி வந்தவன் - இந்த யோவேல் சாமுயேலின் - ".......வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்." (1சாமுயேல் 8:3)

இந்த ஒரு எளிமையான எடுத்துகாட்டில் நாம் தேவனுடைய கிருபையை காணலாம். மொத்தத்தில் முற்பிதாக்கள் செய்த துர்க்கிரியைகளை அவர் காணாதவராய் தன்னுடைய பணிக்காக அர்ப்பணித்தவர்களை மனப்பூர்வமாக மகிமைப்படுத்தினார்.

"மாஸ்கில்" என்ற வார்த்தை "செக்கெல்" (ஸ்டாராங்க்ஸ் - 7922) என்ற எபிரெய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. இதற்கு "புரிந்துக்கொள்ளுதல்" என்று பொருள். எழுதப்பட்ட சங்கீதங்களை "போதிப்பதற்கான சங்கீதங்கள்" என்றும் அடுத்து "விதிமுறைகளின் சங்கீதங்கள்" என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. நாம் பார்க்கக்கூடிய இந்த சங்கீதம் "போதிப்பதற்கான சங்கீதத்திற்கு" ஒரு நேர்த்தியான எடுத்துக்காட்டாக இருக்கிறது. கடுந்துன்பத்தில் தேவனை மட்டுமே சார்ந்து, அவருடைய உதவிகளை மட்டுமே நாட முடியும் என்ற மகத்தான பாடத்தை கற்றுக்கொள்கிறோம்.

**தேவனை தேடுதல் - வசனங்கள் 1 -3**

*"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது, நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று."*

சவுலின் கோபத்திற்கு தப்பி ஓடி ஒளிந்த இடமாகிய ஆரிட் நிகிவ் வனாந்திரத்தில் உள்ள என்கெதி என்ற இடத்திற்கு யாராவது ஒருவர் நேரில் சென்று பார்த்திருந்தால் தாவீது பயன்படுத்தின உருவக கற்பனையை அவரால் சரியாக புரிந்துக்கொள்ள முடியும். நமக்கு முன் வேட்டைக்காரனிடமிருந்து தப்பி ஓடுகிற ஒரு மானை அவர் சித்தரிக்கிறார். அது ஒரு நீண்ட ஓட்டத்திற்கு பின், என்கெதியில் உள்ள பசுமையான பாலைவனசோலைக்கு, மிகுந்த பயத்தினால் மூச்சு திணரி, நடுங்கி, விருவிருத்து, கடுமையான சூரிய ஒளி தலையின் மேல் பாய, குளிர்ச்சிக்காக ஏங்கி, பள்ளத்தாக்கில் தடுமாறி ஓடுகிற நீர் ஓடையிலிருக்கும் தண்ணீர் அண்டைக்கு விரைந்தது.

தன்னுடைய சொந்த அனுபவத்தை தாவீது இந்த வனாந்திரத்தில் இருக்கும் மென்மையான பிராணிக்கு ஒப்பிடுகிறார். இராஜாவால் தொடர்ந்து அவர் விரட்டப்படும் போது இவரும் இதே அனுபவங்களை பெற்றார். புத்துணர்ச்சிக்காக இவரும் ஏங்கினார். ஆனால் என்கெதியின் குளர்ச்சியான நீர் ஓடையில் அவர் திருப்தியடையாமல், தேவனுடைய கிருபையினால் பெற்ற ஞானத்தால் புத்துணர்வு அடைந்தார்.

63 -ஆம் சங்கீதமும் இந்த சங்கீதத்தோடு ஒத்து போகிறதை நாம் காணலாம். ஒரு வேளை கடைசியாக "யூதாவின் வனாந்திரத்தில்" இருக்கும் வேளையில் இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். தாவீதின் வாழ்க்கையானது ஒரு காட்சியை போல் - "........ வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலமாக இருந்தது....." (சங்கீதம் 63:1)

நீண்ட காலம் திட உணவு இல்லாமல் பிரயாணம் செய்கிற மனிதர்கள், உலர்ந்து போவதால், சில நாட்கள் அல்லது மூன்று நாட்களுக்குள் மரித்து விடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. தேவனோடு இருக்கும் உறவை அறிந்து கொள்ளாவிட்டால் சிறிது நேரம் கூட தாங்கமுடியாது என்று தாவீது உணர்ந்தார்.

அவர் கண்ணீரின் அப்பத்தை புசித்து கொண்டிருந்தார். அவர் தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தின் மூலம் இவை அனைத்தையும் கழுவி, துடைத்து மீண்டும் புத்துணர்வு பெற்றார். "உன் தேவன் எங்கே ?" என்ற அவருடைய பகைவர்களின் பழித்துரையாடல்களால் அவரின் நட்புணர்வுகளுக்கான பிரிவு உச்சகட்டத்தை எட்டியது.

தன்னுடைய பயத்தை போக்குவதற்காக மட்டுமே தாவீது தேவனுடைய சமூகத்தை தேடாமல், அவரை ஜெபத்தின் வழியாக நெருங்கி, தன்னுடைய எல்லா சோதனைகளையும் அவருக்கு முன் வைக்கவும் விரும்பினார் - "நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?"

நாம் எப்பொழுதாவது இப்படிப்பட்ட அனுபவங்களை பெற்றதுண்டா ? நாம் ஜெபிக்க முடியாத அளவுக்கு நம்முடைய வாழ்க்கை பாதை மிக கடினமாகவும், மந்தமாகவும், சோர்வுண்டாக்கக் கூடியதாகவும் இருந்திருக்கிறதா ? எஸ்தர் ராஜாத்தி தன்னுடைய கணவனாகிய அகாஸ்வேறு இராஜாவை குறித்து - "நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப் படவில்லை...." (எஸ்தர் 4 :11) என்று சொன்னது போலவும், யோபு - "இதோ, நான் முன்னாகப்போனாலும் அவர் இல்லை, பின்னாகப்போனாலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக்

காணேன், வலது புறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார். ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார், அவர் என்னைச் சோதித்தபின் நாம் பொன்னாக விளங்குவேன்..." (யோபு 23 :8-10) என்று அழுதது போலவும் நாம் சில நேரங்களில் கதருகிறோம்.

நம்முடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய பஞ்சகாலமானது மதிப்பற்றதாக இராது. இந்த சங்கீதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளை எழுத தூண்டிய தாவீதின் அனுபவங்களை நாமும் உணருவதற்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் நமக்கு மிகவும் அவசியமானது.

**ஊற்றப்பட்ட ஆத்துமா - வசனம் 4**

" *முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே, இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது.*"

தாவீது தன்னனுடைய தற்போதைய அனுபவங்களுக்கு நேர் எதிர்மாறான ஆதிகால சந்தோஷங்களை நினைவுக்கு கொண்டு வருகிறார். இங்கு ஆறாம் வசனத்தை பார்க்கும் பொழுது, இது தாவீதின் கடைசி காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சவுலிடமிருந்து தப்பி ஓடும் காரியத்தை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது, ஒரு வேளை அப் சலோமின் புரட்சிக்கு பின்னாக கூட இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம்.

அக்காலத்தில் அபினதாப் (1சாமுயேல் 7:1) என்பவரின் வீட்டில் ஆசரிப்பு பெட்டி இருந்ததினால், அங்கு அதை பரிசுத்த படுத்தி "தேவனுடைய வீடாக" பாவித்தார்கள். இருந்தபோதிலும், பண்டிகைகளின் போது அநேகர் அங்கு கூடி வந்தார்கள். பழங்கால இஸ்ரயேலரின் ஆராதனைகளை பற்றிய மிக சிறந்த பாடங்களை இந்த வசனத்தில் நாம் கற்று கொள்ளலாம். அந்த காலமானது உள்ளான பக்தியோடு அல்ல, மகிழ்ச்சி ததும்பி வழியும் உச்சக்கட்ட காலமாக இருந்திருக்க வேண்டும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் "கூட்டம்" என்ற இரண்டு வார்த்தைகளும் இவ்விதமான கருத்தை கொண்டிருக்கிறது. முதல் வார்த்தையானது, "எத்திரோங்கு" அல்லது ஜனக்கூட்டம் என்ற பொருளை கொண்டிருந்தாலும், அடுத்த வார்த்தை மிகுந்த எக்காள சத்தத்தோடு நடக்கும் பண்டிகையின் ஊர்வலத்தை பற்றி விவரிக்கிறது.

மேலும், இந்த வார்த்தையானது "மகிழ்ச்சி மற்றும் துதியின் தொனி" என்றும் வலியுருத்தப்படுகிறது. ஸ்ராங்க்ஸ் கன்கார்டன்ஸில் மகிழ்ச்சி என்ற எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பை "ஷிரில் சௌண்டு" என்று குறிப்பிடப்படுகிறது, பொதுவாக சந்தோஷத்தில் எல்லை மீறுவதை குறிக்கும்."துதி" என்ற வார்த்தைக்கு "கைகளை நீட்டி" என்ற பொருளை தரக்கூடியதாக இருந்தாலும், "ஒருங்குகூடிப் பாடி துதிப்பதை" பற்றி சொல்லப்படுகிறது அல்லது யூதர்களின் முறைமையின்படி நடனமாடி துதிப்பதையும் குறிக்கலாம்.

ஆராதனை என்பது வருத்தத்தோடு அல்ல, ஆனால் மிகுந்த மகிழ்ச்சியோடு தேவனுடைய இரக்கமுள்ள கிருபைகளுக்காகவும், பராமரிப்புக்காகவும் நன்றி கூறி பாராட்டுவதற்காக ஏறெடுக்கப்படுகிறது. மக்கள் மத்தியில் மதங்கள் கொடூரமான தேவனை பிரதிபலிக்கும் பொழுது, பயத்தோடு துதிகளை ஏறெடுக்கப்படுகிறது, இல்லாவிட்டால் துன்பங்கள் அதிகரித்து விடுமோ என்று ஜனங்கள் அஞ்சுகிறார்கள். எங்கெல்லாம் தேவன் அன்பின் உருவாக ஆராதிக்கப்படுகிறாரோ, அங்கெல்லாம் மகிழ்ச்சியின் எல்லை காணப்படுகிறது.

இப்படிப்பட்ட மகிழ்ச்சியான ஆராதனை," பாபிலோனிலிருந்து திரும்பி வந்த போது எஸ்ரா நியாயப்பிரமாணத்தை வாசிக்கையில் இஸ்ரயேலர் அனைவரும் எழுந்து நின்று ஆர்ப்பரித்தார்கள். "பின்னும் அவன் அவர்களை நோக்கி - நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர் களுக்குப் பங்குகளை அனுப்புங்கள், இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்."(நெகேமியா 8 :10)

ஆண்டவரின் பண்டிகைக்கு நீண்ட தூரத்திலிருந்து பிரயாணமாக வரும் ஒரு உண்மையான இஸ்ரயேலன் அந்த பிரயாணத்தின் நிமித்தமாக, விசேஷித்த தசமபாகத்தை ஒதுக்கி

வைக்கவேண்டியவராக இருந்தார். உபாகமம் 14 -ஆம் அதிகாரத்தில் இந்த தசமபாகத்தை குறித்த சட்டத்திட்டங்கள் விவரமாக கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த பண்டிகைகளின் நிமித்தமாக தசமபாகத்தை பணமாக மாற்றிக் கொண்டு பண்டிகைக்கு செல்வது வழக்கமாக இருந்தது. "அங்கே உன் இஷ்டப்படி ஆடுமாடு, திராட்சரசம், மதுபானம் முதலான சகலத்தையும் பணம்கொடுத்து வாங்கி, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில், நீயும் உன் குடும்பத்தாரும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக." என்று 26 -ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

தேவனுடைய வீடானது கண்ணீர் சிந்தும் இடமாக இல்லாமல், மகிழ்ச்சியும் ஆனந்தமும், மனமார்ந்த சிரிப்புமுள்ள வீடாக இருக்கிறது. அமைதியான நிலை எந்த அளவுக்கு ஊக்குவிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு மனமகிழ்ச்சியும் ஊக்குவிக்கப்படுகிறது. கடந்த காலத்தில் செய்த பாவங்களுக்கு தொடர்ச்சியான மனவருந்துதலை விட மன்னிப்பின் மூலம் நிச்சயமாக இலகுவான ஒரு இருதயம் நமக்கு கிடைக்கிறது.

**மனஅழுத்தம் தோற்கடிக்கப்பட்டது - வசனங்கள் 5-8**

*"என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய் ? ஏன் எனக்குள் தியங்குகிறாய் ? தேவனை நோக்கிக் காத்திரு, அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.*

*என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது. ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன். உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது, உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது.*

*ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார், இராக் காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது, என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்."*

இங்கு நாம் தாவீதின் இரண்டு முகங்களை காணலாம் - அவருடைய பக்தி வைராக்கியமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை மற்றும் அவருடைய பலவீனமான மனிதநிலை. தனிப்பட்ட அனுபவங்களில் தேவன் அவரோடு இருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தாலும், அவருடைய மன அழுத்தத்திற்கு சரியான காரணம் இல்லை, ஆனாலும் அந்த மன அழுத்தத்தை அவர் அனுபவித்தார். அந்த சூழ்நிலையில் அவர் அடைந்த சோர்வுகளுக்கு ஒரே மருந்து - "நம்பிக்கை" என்று அவர் குறிப்பிடுகிறார்.

நம்பிக்கை என்றால் - வருங்காலத்தை உறுதியாக பற்றிக்கொள்வதாகும். ஆகவே நம்பிக்கைக்கு விசுவாசம் தேவை, அதாவது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் வருங்காலத்தில் நிறைவேறும் என்ற விசுவாசம் தேவை. இவைகள் இக்காலத்தில் நாம் படும் கடுமையான பாடுகளின் நோக்கத்தை எடுத்துகாட்டுகிறது. இதே போல் ஒரு சூழ்நிலையில், தாவீது சவுலிடமிருந்து தப்பி யூதேயா வனாந்திரத்தில் ஓடும் பொழுது இவ்வரிகளை எழுதினார். "ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும், என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்."(சங்கீதம் 63:3-5)

சங்கீதம் 42 :5 ஆம் வசனத்தின் கடைசி வரியை New American Standard - இன் மொழிபெயர்ப்பில் "அவருடைய பிரசன்னத்தின் மூலமாக கிடைத்த உதவிக்காக நான் மீண்டுமாக அவரை ஸ்தோத்திரிப்பேன்." என்று எழுதப்பட்டிருக்கிறது. இது "ஆதரவு"பற்றிய சரியான சிந்தையை எடுத்து காட்டுகிறது. தேவன் தாமே அவருடைய முகத்தை மறைத்து தாவீதை கடுமையான துன்பத்தில் விட்டுவிட்டதாக சொல்லப்படுகிறது, ஆனால் தன்னுடைய ஒவ்வொரு காரியங்களிலும், தேவனுடைய பிரசன்னம் தொடர்ந்து இருக்கும்படியாக மீண்டும் தேவன் தன்பக்கமாக அவருடைய முகத்தை திருப்புவார் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தார்.

இந்த பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள பூகோள அமைப்பானது சவுலின் கோபத்திற்கு தப்பி ஓடுவதை காட்டிலும் அப்சலோமுக்கு விலகி ஓடினதற்கு சம்மந்தப்பட்டிருக்கிறது. சவுலுக்கு பயந்து யூதாவின் வனாந்திரத்தில் உள்ள என்கெதி

பள்ளத்தாக்கில் மறைந்து கொண்டார். அந்த நேரத்தில் அப்சலோம் தேசத்தை கைப்பற்ற நினைத்தான். அப்போது தாவீது வட திசையில் உள்ள மக்னாயீமுக்கு வந்து, யோர்தானில் அம்மோன் புத்திரரின் கையிலிருந்து உணவுகளை பெற்றுகொண்டார். (11சாமுயேல் 17 : 24 -29) ஏர்மோன் மலை மற்றும் அதை சுற்றியுள்ள மலை பகுதிகள் சற்று வட திசையை நோக்கி இருக்கிறது. இந்நாளில் அதை லீபனோன் என்று அழைக்கிறார்கள்.

ஏழாம் வசனத்தில் திடீர் என்று வறண்ட வனாந்திரம், கொந்தளிக்கும் கடலாக உருமாறினதை பற்றி வாசிக்கலாம். ஒரு வேளை இதன் காரணமாக தான் யோனா மீன் வயிற்றில் இருக்கும் பொழுது ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் அடிப்படையாக கொண்டு இதை எழுதினாரோ ? (யோனா 2) நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் கொந்தளிப்புகளுக்கும், பிரச்சனைகளுக்கும் காரணத்தை தேடாமல், அவைகளின் விளைவானது, வறண்ட நிலையையும், தேவனை விட்டு வெகு தூரம் சென்று குழப்பம் நிறைந்த சூழ்நிலையில் அகப்பட்டிருந்தாலும், நம்முடைய அன்பான பரலோக பிதாவிடம் அனைத்தையும் விட்டு விடுவது நலமாயிருக்கும் என்று பாடத்தை, இந்த எடுத்துக்காட்டுகளின் திடீர் மாற்றங்கள் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. ஏனெனில் மிகுந்த ஞானமுடைய பிதாவாகிய தேவன் ஒருபோதும் தவறு செய்யார்.

நம்முடைய பகற்கால சந்தேஷங்களில் தேவனுடைய அற்புதமான பராமரிப்பும், ஆழ்ந்த துக்கத்தின் இரவு நேரங்களில் அவருடைய தேற்றுதலையும் எவ்வளவாய் வித்தியாசப்படுகிறது. இருந்தாலும் இதில் இருக்கும் பாடம் மிக உறுதியாக இருக்கிறது. எட்டாம் வசனத்தில் "பகற்காலம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை (ஸ்டராங்க்ஸ் - 3119) "தினந்தோரும்" என்று இன்னும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பகல் மற்றும் இரவில மட்டும் அல்ல "எப்பொழுதும்" நாம் தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும், ருசிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு "பகல்" மற்றும் "இரவு" என்பவைகளில் உள்ள வித்தியாசத்தில் விலையேற பெற்ற பாடம் அடங்கியுள்ளது - பகற்கால அனுபவங்களை பிரதிபலிக்க இரவு நேரங்கள் சரியான ஒரு வாய்ப்பாக அமைகிறது. தேவனுடைய அனுதின வழிநடத்துதலுக்காக நாம் அவரை துதிக்க வாய்ப்பளிக்கிறது. இவைகள் இரவு நேரத்து பிரதிபலிப்பு மட்டும் அல்ல, அவைகள் இரவின் கீதங்களாகவும், தேவனுடைய அன்பான இரக்கங்கள் பற்றி பாடுவது துதியின் கீதங்களாகவும் இருக்கிறது. இந்த நன்றியறிதலான துதியானது பகலின் தொடர்ச்சியான கடுந்துன்பத்தின் மத்தியில் இனிமையாக இருக்கும். தாவீது இதை குறித்து இப்படியாக பாடியுள்ளார் - "துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும், உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை. உமது நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம், உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன்." (சங்கீதம் 119 :61,62 )

**நம்பிக்கையே பதில் 9-11**

*" நான், என் கன்மலையாகிய தேவனை நோக்கி - ஏன் என்னை மறந்தீர் ? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும் என்று சொல்லுகிறேன். உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி, என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக்குத்துகிறதுபோல் இருக்கிறது. என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய் ? ஏன் எனக்குள் தியங்குகிறாய் ? தேவனை நோக்கிக் காத்திரு, என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்."*

தேவனே தாவீதின் கன்மலை என்ற சிந்தனையானது ஒரு கோட்டை அல்லது பாதுகாப்பை அவருக்கு அளிக்கக்கூடியதாக இருந்தது. மற்றொரு சங்கீதத்தில் அவர் பயன்படுத்தி வார்த்தைகளை சற்று கவனியுங்கள். "கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்." (சங்கீதம் 18 :2)

பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனே கன்மலை. ஆனால் புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்துவை அந்த கன்மலை" என்று வாசிக்கிறோம். இந்த கருத்தானது திருத்துவ போதனைக்கு ஆதாரம் என்பது பொருள் அல்ல. அதற்கு மாறாக, இருவர் மத்தியிலிருக்கும் வேலைகளின் ஒற்றுமையையும், முக்கியமாக ஒருமைபாட்டையும் எடுத்துக்

## இரட்சகரே எங்களுக்கு உதவும்

உமது பிறப்பினாலும் கண்ணீராலும் ;
உமது துக்கங்களினாலும் பயத்தினாலும் ;
உமது அவ்வேளை நடந்த முரண்டாட்டினாலும்
உமது நுண்ணிய தூண்டுதலின் வல்லமையாலும் -
இரட்சகரே, இரக்கமுள்ள கண்ணினால் பாரும் ;
இரட்சகரே, எங்களுக்கு உதவுங்கள்,
இல்லையேல் உயிர்துறப்போம்.

லாசரு உறங்கிய கல்லறையின் மேல்
ஈரத்துடன் மனதுருகி கண்ணீர் சிந்தினீரே;
சாலேம் தன் குடியிருப்பை இழந்தப்பின்
உமது கசப்பான கண்ணீர் ஊற்றியதே -
இரட்சகரே, இரக்கமுள்ள கண்ணினால் பாரும் ;
இரட்சகரே, எங்களுக்கு உதவுங்கள்,
இல்லையேல் உயிர்துறப்போம்.

உமது தனிமையான ஜெபவேளையிலும் ;
உமது பயங்கரமான முரண்பாட்டினாலும் ;
உமது சிலுவையினாலும், மரண அழுகையினாலும் ;
உமது ஒரு சிறந்த பலியினாலும் முடித்தீர் -
இரட்சகரே, இரக்கமுள்ள கண்ணினால் பாரும் ;
இரட்சகரே, எங்களுக்கு உதவுங்கள்,
இல்லையேல் உயிர்துறப்போம்.

பிரேதக்குழியின்மேல் உமது வெற்றியினாலும் ;
தொலைந்து போனதை மீட்க உதவிய உமது
வல்லமையினாலும் ;
உமது உயர்ந்த கம்பீரமான சிங்காசனத்தினாலும் ;
உமக்கு சொந்தமான இராஜ்ஜியங்களையும் பிடித்தீர் -
இரட்சகரே, இரக்கமுள்ள கண்ணினால் பாரும் ;
இரட்சகரே, எங்களுக்கு உதவுங்கள்,
இல்லையேல் உயிர்துறப்போம்.

உம்மால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட
இராஜ்ஜியத்திலும் ;
தவறுகளை சீர்படுத்துவதற்கான உமது
வல்லமையினாலும் ;
சிங்காசனத்தின்மேல் இருக்கும் உமது சபையினாலும்,
நீர் உமக்கு சொந்தமானவைகளை கண்டுபிடித்து;
அழுகிறவர்கள் அனைவரையும் இரட்சித்து,
இரட்சகரே, எனக்கு உதவும்,
இல்லையேல் உயிர்துறப்பேன்.

- ***Hymns of Dawn*, # 26**

காட்டுகிறது. இரண்டு பேர்கள் மத்தியிலிருக்கும் ஒப்புமையான அம்சங்கள், தேவன், மனிதனுக்கு அவருடைய வலது கரமாகிய குமாரன் மூலமாக கொடுக்கும் அவருடைய பலமே. தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும்படியாக இயேசுவுக்கு "இம்மானுயேல்" என்ற நாமம் கொடுக்கப்பட்டது என்பது மறுக்கமுடியாத ஒரு உண்மையாகும். இம்மானுயேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்பதே.தேவன் இயேசுவின் மூலம் செயல்படுத்தி விடுதலையை கொண்டுவர ஒரு உறுதியான பிடியாக, கன்மலையாம் இயேசுவை நமக்கு தந்தருளினார்.

இந்த சங்கீதத்தை எதிர்மாறாக முடிக்கப்படாமல், நம்பிக்கையுள்ளதாக நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. தாவீது தன்னுடைய சோதனைகளை மிக தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார் - தேவனால் கைவிடப்பட்ட நிலையில், எதிரிகளால் ஒடுக்கப்படும்பொழுது பெற்ற உணர்வுகளையும் - உடனடியாக இந்த நிலையில் நம்பிக்கையோடு தேவனை தேடின விதத்தையும் அவர் விவரித்திருக்கிறார். அவர் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கையானது, வல்லமையுள்ள எதிராளிகள் அவரை பின்தொடரும் நிலையிலும் தேவனை தொடர்ந்து துதிக்கக்கூடிய மனநிலையை பெற்றிருந்தார்.

முடிவு வசனத்தில் "உடல் நலன்"என்ற வார்த்தை "எஷூவாஹ" (ஸ்டராங்க்ஸ் 3444) என்ற எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும், இந்த வார்த்தையை பொதுவாக "இரட்சிப்பு" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இயேசு என்ற பெயரும் இந்த எபிரெய வார்த்தையிலிருந்து தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நாமத்திற்கு இரட்சகர் என்று பொருள்படுகிறது. தாவீதின் நம்பிக்கை அவரின் இரட்சிப்பாக இருந்தது. தோல்வியை தழுவியபடி விழுந்துபோகிறவருக்கு இரட்சிப்பையும், வரக்கூடிய சகல போராட்டங்களிலும், வேதனைகளிலும் தொடர்ந்து விசுவாசத்தோடு ஓட தைரியத்தையும், சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடந்துக்கொண்டிருக்கிறது என்று அவருக்கு தேவையான ஊக்கத்தையும் தேவன் கொடுத்தார்.

"அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல, ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன ?" - ரோமர் 8 :24

மனந்திரும்ப தவறுதல்

# துணிக்கையை தோய்த்தல்



"இயேசு பிரதியுத்தரமாக - நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்." - யோவான் 13 :26

David Rice

"இயேசு பிரதியுத்தரமாக - நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்." - யோவான் 13 :26

அந்த மணிநேரம் கடந்து சென்று கொண்டிருந்தது, அந்த சாயங்கால வேளையில், நாம் "கடைசி இராபோஜனம்" என்று அழைக்கும் போஜனத்தை உட்கொள்ள இயேசு மேல் வீட்டிற்கு வந்தார். "அவரோடு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் இருந்தனர்." (லூக்கா 22:14 ) இயேசு அங்கு வந்த கொஞ்ச நேரத்திலே "ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை" பன்னிரெண்டு சீஷர்களுக்கும் கொடுத்தார். இதை அனைவரும் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்றார். மேலும்," தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். " (லூக்கா 22:17, 18 / 1கொரிந்தியர் 10:16) இந்த வார்த்தைகள் உண்மையாய் நிறைவேறும்படியாக - "அவர் சிலுவையில் தொங்கிய போதும், அவரால் குடிக்க முடியாத கசப்பான காடியை மனதில்லாமல் புசித்தார் என்று வாசிக்கிறோம் - "...கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள், அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்." (மத்தேயு 27 :34)

அதற்கு பின் அந்த சிறிய கூட்டம் உணவு புசிக்க அமர்ந்தது. சரியாக ஒரு வருடத்திற்கு முன் அவர் - " ..நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே.." (யோவான் 6 :51) என்று சொன்னதை, அந்நேரத்தில் இயேசு போஜனத்திலிருந்து அப்பத்தை எடுத்து, "இது என் சரீரம்" என்று நினைப்பூட்டினார். கிறிஸ்துவின் இராஜ்யத்தில்,கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற பலியினிமித்தமாக, இந்த உலகம் அநேக வெகுமதிகளை பெறும். ஆனால், இவைகளுக்கு முன் இந்த சுவிசேஷ யுகத்தில், இயேசுவின் ஈடுபலியின் மூலமாக கிடைக்கும் பலன்களை சீஷர்கள் பெறுகிறார்கள். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்புக்கு" செவி சாய்த்து, ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் இந்த வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. (பிலிப்பியர் 3:14)

பாவங்கலிலிருந்து சுத்திகரிக்கப் படுவதற்கு,கடைசி அறிவுரைகளை பெற்று கொள்ளவும், அதை அடையாளமாக கொடுக்கப் பட்ட அப்பத்தில் பங்குக்கொள்ளும்படி, இயேசு சீஷர்களை அழைத்தார். இது பெந்தகொஸ்தே நாளுக்கு 52 நாட்களுக்கு முன் நடந்தது. அவர் சீஷர்களோடு கடைசியாக கூடி, தன்னுடைய உணர்ச்சிப்பூர்வமான எண்ணங்களை பகிர்ந்து கொள்ள காலம் நெருங்கியது.".. போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து...." (லூக்கா 22 :20) என்று லூக்கா குறிப்பிடுகிறார். இந்த வெளிப்பாடானது, 17 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட பாத்திரத்திற்கும், 20 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட பாத்திரத்திற்கும் வித்தியாசம் காட்டுகிறது. 17 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட பாத்திரம், மாலை வேளையில் சற்று இளைப்பாற கொடுக்கப்பட்டதாகவும், 20-ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட பாத்திரம் இராபோஜனம் முடிந்த பின் கொடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. பவுலும், இந்த இரண்டு பாத்திரங்களிலும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக எடுத்து காட்டுகிறார். அப்பத்திற்கு முன் "ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை" எடுத்தார் என்று வாசிக்கிறோம். (1கொரிந்தியர் 10:16,17) ஆனால் அதற்குபின் எடுத்த பாத்திரத்தை "இராபோஜனத்திற்கு பின்" அப்பத்திற்கு பின் வைத்தார் என்பதை வாசிக்கிறோம் - (1கொரிந்தியர் 11 :23-25) இந்த ஒரு வித்தியாசத்தை பொறுத்தவரையில், பவுலும் அவருடையக் கூட்டாளியாக இருக்கும் லூக்காவும் ஒரே விதமாக சாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

எப்படியிருந்தாலும், இரண்டு பாத்திரங்களும் ஒரே பொருளை உடையதாக இருப்பதை நாம் காணலாம். "உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம்." இந்த

பாத்திரம் ஒவ்வொரு சீஷர்களுக்கும் கொடுக்கப்பட்டது, அவர்கள் அதை குடித்தார்கள். மத்தேயு இதை குறித்து எழுதும்பொழுது - ".... நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." (மத்தேயு 26:27) என்கிறார். மற்ற மொழி பெயர்ப்புகளில் இந்த வசனம் இன்னும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. "இதில் அனைவரும் பானம்பண்ணுங்கள்" ( வில்சன் எம்பியாடிக் டைக்கிலாட்),"நீஙகள் அனைவரும் இதிலிருந்து பானம் பண்ணுங்கள்" (வேமௌத்து),குறிப்பாக மாற்கு இதை பதிவு செய்யும் பொழுது - "... அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். " (மாற்கு 14 :23) அங்கு மாற்கு இல்லாவிட்டாலும், பேதுருவிடம் கேட்ட வார்த்தைகளை உண்மையான சாட்சியாக ஏற்றுக்கொண்டு எழுதியுள்ளார்.

இயேசுவின் சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்த அடையாளங்களை பற்றி நாம் அறிந்ததே. நாம் இரட்சிக்கப்படடு, முழுமையான பரிபூரண ஜீவனை பெறுவதற்காக கொடுக்கப்பட்டது. இந்த அடையாளங்களை இயேசு புதிதாக கண்டுபிடிக்கவில்லை. இதை குறித்து நீண்ட காலத்திற்கு முன் ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து..." (ஆதியாகமம் 14:18) இராஜாவும், ஆசாரியருமான மெல்கிசிதேக்கு, இயேசுவை அடையாளப் படுத்துகிறார். இயேசு அவருடைய இரத்தத்தையும் மாம்சத்தையும் ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுத்ததற்கு ஒப்பாக மெல்கிசிதேக்கு ஆபிரகாமின் மனிதர்களுக்கு அப்பமும் திராட்சை ரசத்தையும் கொடுத்தார். அப்பத்திலும், திராட்சைரசத்திலும் சித்தரிக்கப்பட்ட இயேசுவின் பலியானது, "ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற மிகவும் முக்கியமானதாக இருந்தது. இதே அடையாளங்களை, எகிப்தில் பாரோனுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட சோய்ம்பாய் மற்றும் பாணப்பாத்திரக்காருடைய சொப்பனங்களிலும் நாம் காண்கிறோம். (ஆதியாகமம் 40 :1 -19)

**அவர்களுக்குள்ளே ஒரு துரோகி**

அதற்கு பின் இயேசு வரும் தீங்கை முன் அறிவித்தார் - "பின்பு - இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது." (லூக்கா 22:21) இது சீஷர்களை பிரமிக்க செய்திருக்க வேண்டும். இயேசுவின் சிந்தையில் இருந்தவனை பற்றி அவர்கள் அறியாதிருந்தார்கள். அது யூதாஸ் என்று நாம் அறிவோம். அந்நேரம் வரைக்கும் அவன் அவர்களோடு இருந்தான். இந்த வார்த்தைகளைக் குறித்து சீஷர்கள் ஆச்சரியப்பட்டு கொண்டிருக்கும்பொழுது இயேசு அந்த குறிப்பை உறுதிப்படுத்தினார் - "தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார். அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்." (லூக்கா 22: 22)

இயல்பாக அவர்களுக்குள் கேள்வி எழும்பியது. "அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்" (லூக்கா 22:23) இதை தொடர்ந்து வந்த சம்பாஷனையை லூக்கா மட்டுமே எழுதியிருக்கிறார். "அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று." (லூக்கா22:24) ஒரு வேளை இந்த சுயபரிசோதனையானது, ஒவ்வொருவரின் விசுவாசத்தை சீர்த்துாக்கி பார்ப்பதற்கும், தங்களுக்குள்ளிருக்கும் தகுதியை ஒப்பிட்டுபார்ப்பதற்கும் பயன்பட்டிருக்கலாம்.

கால் கழுவுதலை குறித்து லூக்கா பதிவு செய்ய வில்லை - யோவான் மட்டுமே இதை குறிப்பிட்டிருக்கிறார். "உங்களில் பெரியவனாக இருப்பவன் அனைவருக்கும் ஊழியம் செய்யகடவன்" என்பதை நினைவுப்படுத்தும்படியாக நடந்து கொண்டிருந்த சம்பவங்களில் இது அடுத்ததாக நடந்திருக்க வேண்டும். " பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன் ? பந்தியிருக்கிறவன் அல்லவா ? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்." (லூக்கா 22:27) அவருடைய அன்பான பணியை அனைவரின் பாதங்களை கழுவிய செயலின்மூலம் வெளிப்படுத்தினார். யூதாஸ், கால் கழுவும் வரைக்கும் அங்கு இருந்தான் என்று யோவான் சுவிசேஷத்தில் வாசித்து அறிந்துக்கொள்ளலாம். மேலும் அங்கு - " இயேசு அவனை நோக்கி - முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான். நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார். தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும்

சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்." (யோவான் 13:10, 11)

**என்னுடனே அப்பம் புசிக்கிறவன்**

சீஷர்களின் கால்களை கழுவின பின்பு இயேசு தன்னை காட்டிக்கொடுப்பவனை குறித்து பேசத் துவங்கினார் என்று யோவான் எழுதினார். "உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன், ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். " (யோவான் 13 :18)

அனைத்து சீஷர்களும் விரைந்தோடினார்கள். ஆனால் யூதாஸ் மட்டுமே அவரை காட்டி கொடுக்க திட்டம் போட்டபடி அவர் அருகில் வந்தார்.

இந்த பகுதியில் சொல்லப்பட்ட "அப்பம் புசிப்பது" என்ற வார்த்தையை சற்று கவனியுங்கள். தன்னுடைய ஜீவனை அவர்களுக்கு கொடுக்க இருப்பதால், இயேசு சீஷர்களுக்கு பங்கிட்ட அப்பத்தை புசித்திருக்கமாட்டார். ஆனால் அன்று மாலை அவர்களோடு சேர்ந்து போஜனம் புசிக்கையில் அவர் அப்பம் புசித்திருக்க வேண்டும், ஏனெனில், இனி அவர் திராட்சை ரசத்தை குடிப்பதில்லை என்று சொன்னாரே தவிர மேஜையின் மீதுள்ள அப்பத்தை பற்றி அவர் ஏதும் சொல்லவில்லை.

சங்கீதம் 41 -ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட வசனங்கள், இயேசுவை காட்டிகொடுத்தவன் மூலமாக நிறைவேறியது. தாவீதை தன்னுடைய குமாரனாகிய அப்சோலோம் எதிர்த்து, தற்காலிகமாக மேற்கொண்ட போது, தாவீது இந்த சங்கீதத்தை பாடினார் - "என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருந்து, எனக்குப் பொல்லாங்கு நினைத்து, ..... என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்." (சங்கீதம் 41 -7,9)

"மிக நெருங்கிய சிநேகிதன்" என்று தாவீது, விசுவாசமுள்ள ஆலோசனைக்காரனான அகிதோபேலை குறிப்பிடுகிறார். "அப்சலோம் பலிகளைச் செலுத்தும்போது, தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேல் ....... ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள்."(11சாமுயேல் 15:12) அகிதோபேல், யூதாஸை போல் நாண்டு கொண்டு செத்தான். (11சாமுயேல் 17 :23, மத்தேயு 27:5

**ஆவியில் கலங்குதல்**

தன்னை காட்டிக் கொடுத்த காரியங்களை குறித்து இயேசு கிறிஸ்து மிகவும் கலங்கினார். அவர் முன் சொன்ன காரியங்களை மறுபடியும் புள்ளிவிபரமாக சொல்லும்பொழுது, அவர் மிகவும் பாதிக்கப்பட்டார். "இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி - உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார். "(யோவான் 13: 21)

இயேசுவை காட்டி கொடுக்க போகிறவன் யார் என்று சீஷர்கள் ஆச்சரியப்பட்டு கொண்டிருக்கும் பொழுது, இயேசுவுக்கு அருகிலிருந்த யோவானை பேதுரு சீண்டி, அவருடைய சிந்தையில் இருப்பவன் யார் என்று கேட்க சொன்னார் - " இயேசு பிரதியுத்தரமாக - நான் இந்தத் துணிக்கையைத் தொய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தொய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்." (யோவான் 13 :26)

ஒரு வேளை யோவான் செவி கேட்கும் அளவுக்கு மட்டுமே இயேசு மெதுவாக பதிலளித்திருக்கவேண்டும். இந்த ஒரு சம்பாஷனையை யோவான் மட்டுமே அவர் சுவிசேஷத்தில் பதிவு செய்திருக்கிறார். ஒரு வேளை அனைத்து சீஷர்களும் இயேசு சொன்னதை கேட்டிருந்தால், ஒருவரும் அவரிடத்தில் அப்பம் புசிக்க முன் வந்திருக்கமாட்டார்கள். "... துணிக்கையைத் தொய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்." (யோவான் 13 :26) யூதாஸ் வெகு தூரத்தில் அமர்ந்திருக்க வாய்ப்பில்லை, ஏனெனில் அப்பத்தை தொய்ந்து கொடுக்கும் தூரத்தில்தான் அவன் அமர்ந்திருக்கவேண்டும் ஆகவே நிச்சயமாக, இயேசு யோவானிடம் இரகசியமாக தான் சொல்லிருக்கவேண்டும்.

**துணிக்கை என்றால் என்ன?**

"அப்பத்துணிக்கையை ஏதோ ஒரு திரவ்விய உணவில் தொய்த்தது" என்று சில அகராதிகள் விளக்கம் தருகிறது. அந்த சாயங்காலத்தில், மீன், அப்பம் (ஆனால் பொதுவாக அந்தசீதோஷனத்திற்குதக்கதாக புளிப்பில்லா அப்பம் வைக்கப்பட்டிருந் திருக்கலாம்.) காய்கறி போன்ற எந்த விதமான திட உணவுகளும் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்திருக்கலாம். "சோமியோன்"

என்ற கிரேக்க வார்த்தை ஒரு துண்டு அல்லது ஒரு வாயளவு என்று பொருள்படுகிறது. இந்த சூழ்நிலையில் கையில் வைத்திருக்கும் திட உணவின் ஒரு துண்டு, அந்த திரவிய உணவில் தொய்த்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். யோவான் 13 ஆம் அதிகாரத்தில் நான்கு முறைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் சொல்லப்படவில்லை.

இந்த சூழ்நிலையில் யூதாஸின் சிந்தையில் என்ன ஒடிக்கொண்டிருந்திருக்கும்? சம்பாஷனையின் போது இயேசு தன்னை காட்டி கொடுப்பவனை குறித்து நேரடியாக பேசிக்கொண்டிருந்தார். அவர் ஒவ்வொருவருடைய கால்களை கழுவுவதற்கும் நேரம் கடந்திருக்கும். அங்கு யூதாஸின் கால்களும் கழுவப்பட்டது. அதை பின்தொடர்ந்து, "...நீங்களும் சுத்தமாயிருக் கிறீர்கள், ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்..." யூதாஸின் நோக்கம் பணத்தின் மேலிருப்பது வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்தி ருந்தது. மற்ற நேரங்களில் இயேசு தப்பித்தது போல, இந்த சம்பவத்தில் இயேசு எப்படியாவது தப்பித்து விடுவார் என்று யூதாஸ் நினைத்திருக்கலாம். ஏனென்றால், இயேசு பிடிப்பட்ட போது - "அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு...... .. குற்றமில்லாத இரத்ததை நாம் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்....." (மத்தேயு 27 -3,4) என்றான். மேலும், சோதனையின் காலத்தில், சிந்தையில் துர்கிரியைகள் பூரணப்பட்டு மாம்சத்தின் இச்சைகளுக்கு செவிசாய்த்து அதை செயல்படுத்த தீவிரித்திருக்கும். யூதாஸின் காரியத்திலும் இப்படியாகவே நடந்திருக்க வேண்டும்.

"அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" (யோவான் 13 -27) இயேசுவின் சம்பாஷனைகளினால், இவன் காரியங்களை துரிதமாக செய்வான் என்று அவர் அறிந்து - "..நீ செய்கிறதைச் சீக்கரமாய்ச் செய் என்றார்...." (யோவான் 13 -27)

யூதாஸ் என்ன செய்திருப்பான் ? அச்சமயம் வரைக்கும் அவனுடைய சிந்தைக்கு எதிராக கொடுத்த அறிவுரைகள் - அவனுக்குள் ஏதாகிலும் மாற்றத்தை கொண்டுவந்ததா ? - இல்லை. அவனுடைய செயலை துரிதப்படுத்த ஏதோ ஒரு சம்பவம் தேவைப்பட்டது. அந்த சம்பாஷனையின் முடிவில் வாய்ப்பு கிடைத்தது. மற்ற சீஷர்களின் சந்தேகத்திற்கு இடமில்லாமல், உடனடியாக அவன் அந்த அறையை விட்டுவெளியேறினான். இயேசு பேசிய மற்ற வார்த்தைகளை விட கடைசியாக அவர் அனைவரும் கேட்கும்படியாக பேசினார். ஆனால் ஒருவரும் அதை புரிந்துகொள்ளவில்லை. "அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை. யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்த படியினால், அவன் போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்" (யோவான் 13 -28,29)

ஆகவே யூதாஸ் வெளியேறினான். பல நாட்களுக்கு முன், போட்ட திட்டத்தை நிறைவேற்ற விரைந்தான். "..அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான், அப்பொழுது இராக்காலமாயிருந்தது." (யோவான் 13 -30) அவன் செய்ய துணிந்த கிரியைகளும் இருளாகவே இருந்தது. யூதாஸை பொருத்த வரையில், அவனுடைய எதிர்காலம் என்னவாக இருந்தாலும், எஜமானோடு இராஜ்யத்தில் மகிமையான பங்கை பெறுவதற்கான சகல நம்பிக்கைகளும் அற்றுபோயிற்று. தேவனுடைய மிக சிறப்பான சிருஷ்டிப்பில் - தேவனுடைய சபையில் - அஸ்திபாரகல்லாக இருக்கும் மகத்தான ஒரு வாய்ப்பை, ஒன்றும் பிரயோஜனமில்லாத சொர்ப்பமான உலக சொத்துக்காக (30 வெள்ளிகாசு )வெகு எளிதில் யூதாஸ் இழந்தான்.

அவன் காரியங்களை முழுமையாக செய்து முடித்தபின், எல்லாம் நிறைவடைந்தது, அவனுக்குள் இருந்த ஆர்வம் சற்று மங்கியது, உண்மையான காரியங்களை யூதாஸ் காண துவங்கினான். இதுவே பாவத்தின் வழியாகும் - அந்த சூழ்நிலைக்குரிய வேகம் குறைந்தவுடன், அவைகளின் விளைவுகளை நாம் வெளியரங்கமாக காணலாம். பகை உணர்வுகள் பின்னேற்றமடைய அவமானங்க்ள் தலைகுனிய வைக்கும். யூதாஸ் தன்னிடம் வைத்திருந்த வெள்ளி காசுகளை தேவாலயத்தில் வீசி விட்டு, தன்னை மாய்த்துகொள்ள விரைந்தான்.

**யூதாஸ் வெளியேறினான்**

யூதாஸ் அந்த இராத்திரியில் புறப்பட்டுபோனபின் இயேசு தனக்கு வந்து கொண்டிருக்கும் மரணத்திற்கு அடையாளமாக இது நடக்கிறது என்று அவர் அறிந்திருந்தார். "..இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். "(யோவான் 13 :31)

எப்போதெல்லாம் இயேசுவின் சிலுவை மரணத்தைக் குறித்து ஜனங்கள் நினைக்கிறார்களோ அப்போதெல்லாம், தேவனுடைய சித்தத்தை அவர் செயலாற்றின காரியங்களையும் தன்னுடைய ஒரே பேரான குமாரன் கொடுத்த தேவனுடைய அன்பையும் குறித்தும் வியப்படைகிறார்கள். மனுக்குலத்திற்காக இயேசுவும், தேவனும் செய்த இந்த காரியங்கள் அநேக வழிகளில் குறிப்பிடத்தக்கதாக மகிமைப்படுகிறார்கள். கடைசியாக ஆயிரவருட ஆட்சியில் முழு மனுக்குலமும் பரிபூரணத்திற்கு உயர்த்தப்படும்பொழுது அனைத்து காரியங்களும் தங்களுக்காக செய்யப்பட்டிருக்கிறது என்று அறிந்து கொண்ட பின் இவைகளை குறித்து முழு மனுக்குலமும் நித்தியமாக அவரை மகிமைப்படும்.

இந்த கட்டம் வரைக்கும் யூதாலை பற்றி பேசப்பட்டது. ஆனால் அவன் சென்றபின் இயேசு பேதுருவை எச்சரித்ததாக யோவான் 13:36 - 38 -ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. லூக்காவும் இந்த சம்பாஷனையின் துவக்கத்தை 22:37 ஆம் வசனத்தில் பதிவு செய்துள்ளார். இந்த வார்த்தைகளை சொல்லி முடித்தவுடன் யூதாஸ் புறப்பட்டு சென்றான். (லூக்கா 22 :28 -30)

யூதாஸ் இயேசுவின் கைகளிலிருந்து ஒரு துணிக்கையை அல்லது ஒரு வாய் அளவு உணவை மட்டுமே வாங்கி புசித்திருக்க வேண்டும். இதுவே இயேசுவோடு நல்லுறவு கொண்ட கடைசி சம்பவமாக இருந்திருக்கும். ஆனால் மீதியிருந்த பதினொருவரும் ஆண்டவரோடு என்றென்றும் மேஜையில் அமர்ந்திருப்பார்கள். " ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்." (லூக்கா 22 : 29,30)

யோவான் 14 -ஆம் அதிகாரத்தில் உள்ள மீதி வசனங்களும் மற்றும் 15 - ஆம் அதிகாரம் முழுவதும், இராபோஜனத்திற்கு பின் அவர்கள் அந்த மேல் வீட்டிலிருந்து இறங்கும் வரையில், இயேசு சொன்னவைகளை பதிவு செய்திருக்கிறார். இயேசு சொன்ன அநேக ஆறுதலான வார்த்தைகளையும், வாக்குறுதிகளின் மத்தியில் அக்காலத்து பாரம் பரிய பழக்கமான ஒரு காரியத்தைக் குறித்து நாம் இப்போது பார்த்தால் நிச்சயமாக அது பொருத்தமாக இருக்கும். ஒரு மனுஷன் ஒரு பெண்ணை நிச்சயிக்கும்பொழுது (பரிசம்) தன்னுடைய மணவாட்டிக்கு திராட்சைரசத்தை கொடுப்பார், இந்த பரிசத்தை அந்த பெண் ஏற்று கொண்டு சம்மதித்தால், அந்த திராட்சைரசத்தை வாங்கி புசிப்பாள். சீஷர்களும் இதையே செய்தார்கள்.

அதற்கு பின் மணவாளன் தன்னுடைய தந்தையின் வீட்டிற்கு திரும்பி, தனக்கும் தன் மணவாட்டிக்கும் ஒரு புதிய இடத்தை ஆயத்தம் செய்து விட்டு மீண்டும் கொஞ்சகாலம் சென்ற பிறகு திருமணம் முடித்து தன்னுடைய மணவாட்டியை அழைக்கசெல்வார். இந்த ஒரு கட்டத்தை இயேசு தன்னுடைய பிதாவை குறித்து பேசுகிறார் - " என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்." (யோவான் 14 : 2,3)

**இறுதி நினைவுகள்**

இந்த உலகம் அறியாத " உன்னதமான அழைப்பைக்" குறித்து அறிந்துகொள்ள நமக்கு எப்படிப்பட்ட வாய்ப்பு கிடைத்திருக்கிறது. "மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். (வெளி 21:9) நாம் போகும் வழியில் சாத்தான் கண்ணிகளை வைத்திருக்கிறான். இந்த சோதனைகளை எதிர்த்து நின்றால் நம்முடைய குணலட்சனங்கள் தொடர்ந்து உறுதிப்படும். நாம் பெலவீனமாக இருந்தால் தேவன் நம்மை சரியான வழியில் நடத்துவார். தோல்வியின் விழும்பில் இருந்தாலும், தேவன் நம்முடைய சூழ்நிலைகளை ஒழுங்கு செய்து, நமக்கு அடுத்து நடக்கயிருக்கும் அபாயத்தை குறித்து நிச்சயமாக எச்சரிப்பார்.

இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு யூதாஸ் மற்றும் பேதுருவுக்கு இயேசுவால் கொடுக்கப்பட்டது. ஆனால் ஒரு சிறிய வித்தியாசம் இருந்தது. யூதாஸ் பெறபோகும் வெகுமதியால் ஈர்க்கப்பட்டு தன்னுடைய வேலைக்காக முன்னமே திட்டம் தீட்டி, விடாமுயற்சியோடு, அதை ஏற்ற காலத்தில் நிறைவேற்றினான். ஆனால் பேதுரு விரும்பாத காரியத்தை செய்ய தள்ளப்பட்டார். ஆகவே அவர் இதை முன் திட்டமிடவில்லை, அவர் தவறு செய்யகூடாது என்று நினைத்து போதும் அவர் தவறு செய்தார்.

அதேபோல் இவர்களின் மனம்வருந்துதலிலும் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. 11கொரிந்தியர் 7:10 -"தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது, லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. " - வசனத்தின் முன்பகுதியை பேதுரு அனுபவித்தார். மத்தேயு 27:3 -ஆம் வசனத்தில் யூதாஸ் - "மனஸ்தாபப்பட்டு" என்று வாசிக்கிறோம். ஆங்கில மொழிபெயர்ப்பில் "ரிபென்ட்" என்பதற்கான ஒரு முக்கிய கிரேக்க வார்த்தை விடுபட்டிருக்கிறது. " மெட்டானோயா" (ஸ்டராங்க்ஸ் - 3341 ) என்ற இந்த வார்த்தைக்கு "கம்பக்ஷன் - மனம்வருந்தினான்) மத்தேயுவில் "மெட்டாமெல்லோமியா" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மனம்வருந்தல் என்று பொருள். " யூதாஸ் தன்னுடைய செயலை நினைத்து மனம்வருந்தினார். பேதுரு சீர்பொருந்த விரும்பினார்.

நாம் விழுந்தால் மறுபடியும் எழுந்து நிற்க தேவன் நம்மை ஊக்குவிக்கிறார். "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். ..."(நீதிமொழிகள் 24:16)

இந்த காரியங்களில் சில வாய்ப்புகளையும் நாம் இழக்கலாம். ஆனால் நாம் மனம் வருந்தி, சீர்பொருந்த விரும்பினால், தேவன் நம்மை கிருபையாக நம்மை பழைய நிலைமைக்கு சீர்பொருந்த செய்வார். கெட்ட குமாரனை பற்றிய அருமையான உவமையை நம்முடைய ஆண்டவராகிய இயேசு தன்னுடைய வாய் மொழியாக சொல்லுகையில், தேவனை நோக்கி திரும்பி வருகையில் நம்மை மன்னித்து நம்முடைய முயற்சிகளை அங்கீகரித்து நம்மை ஏற்று கொள்ள ஆயத்தமாக இருக்கிறார் என்பதை நமக்கு உறுதியளிக்கிறார். நாம் நம்முடைய எஜமானனை பின்பற்ற விரும்பினால், நம்முடைய எல்லா அனுபவங்கள் மற்றும் சோதனைகளின் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடத்தினால் பயனடைவோம். நம்முடைய தோல்விகளில், அனுபவம் என்னும் பாடங்களை கற்றுக் கொண்டு, வருங்காலத்தில் நாம் எடுக்கும் முடிவுகளுக்கு ஏற்ற ஆதாரங்களாக நாம் இவைகளை பயன்படுத்தலாம்.

பரிசுத்தமான வழியில் நம்முடைய இருதயங்கள் காத்துகொள்ள நாம் சில முடிவுகளை எடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்." (நீதிமொழிகள் 4 : 23 ) என்று தேவன் நமக்கு ஆலோசனையளிக்கிறார்.

## யூதாஸ்

பன்னிருவரில் ஒருவர் இயேசுவுக்கு துரோகம் விளைவிப்பான் என்பதை தேவன் ஆதிமுதல் முன்னறிந்ததும், இரத்தக்கிரையமான பணத்தினால் ஒரு நிலம் வாங்கப்படுவது தீர்க்கதரிசனமாக உறைக்கப்பட்டிருந்ததும் யூதாஸ் விழுந்துபோவதற்கு ஏதுவாக அவன் பெற்றிருந்த பொறுப்புகளை மாற்றியமைக்கவில்லை. யூதாஸின் தவறான போக்கிற்கு தேவனுடைய முன்னறிதல் காரணமாயிருக்கவில்லை, அதற்கு அவனே காரணமாயிருந்தான். அதுபோலவே மற்ற அனைவருடைய காரியத்திலும் இருக்கிறது. ஆதிமுதல் அனைத்தையும் தேவன் அறிந்திருப்பது நம்மை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. மாறாக, நம்மை பொருத்தவரை பாவநிலையில் இருக்கிற நம்முடைய சுய விருப்பு மற்றும் வெறுப்பின் மூலம் நாம் எதை தேர்ந்தெடுப்போம் என்பதையே அவர் அறிந்திருக்கிறார்.

தனக்கு துரோகம் விளைவிக்கபோவது யார் என்பதை இயேசு முன்பே அறிந்ததாக கூறப்படுவது, அதை அவர் யூதாஸை தேர்ந்தெடுத்த சமயம் அறிந்திருந்தார் என்பதை நிரூபிப்பதில்லை. வேத வசனங்களின் மூலம் அவர் அறிந்திருந்ததெல்லாம், தன்னுடைய சீஷர்களில் ஒருவர் தன்னை காட்டிக்கொடுப்பார் என்பதே. ஆனால், பாவத்தை நோக்கி யூதாஸ் பயணிக்க துவங்கியதிலிருந்து, அவனே தன்னை காட்டிக்கொடுக்கக்கூடிய அந்த மாபெறும் துரோகச் செயலை செய்யக்கூடியவன் என்பதை அவர் அறிந்தார். இருந்தபோதிலும், இயேசுவினுடைய நடவடிக்கைகள் எவ்விதத்திலும் யூதாஸ் தவறான பாதையில் செல்வதற்கு ஏதுவாக அமையவில்லை, மாறாக அவனை எச்சரிக்கக்கூடியவைகளாகவே அமைந்தது.

- ***Reprints. pp.*** 5552,5553

இடமாறிய முன்னுரிமைகள்

# யார் பெரியவன்?



"அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று." - லூக்கா 22:24

Michael Nikora

இயேசு அவருடைய மரணத்தை குறித்து பேசினார். (மாற்கு 10:33) வேதனையில் ஆழ்ந்திருக்கும் அந்த சூழ்நிலையில், ஒருவன் அவரை காட்டிக்கொடுக்கபோவதாக சொன்னார். யாராக இருக்கமுடியும் என்ற ஒரு சிறிய கலந்துரையாடலுக்கு பின், அவர்களின் இருதயத்திற்கு அடுத்த ஒரு காரியத்தை குறித்து விவாதிக்க தொடங்கினார்கள் - "இராஜ்யத்தில் யார் பெரியவனாக இருப்பார் - ?"இந்த கேள்வியை இவர்கள் இயேசுவிடம் முன்னதாகவே கேட்டிருந்தார்கள். "அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து - பரலேகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள்." (மத்தேயு 18:1)

மேலோட்டமாக பார்த்தால், இந்த கேள்வி நியாயமானதாக தோன்றலாம். சீஷர்களின் நியாயமான ஆர்வங்களுக்கு எப்போதும் தேவையான தகவல்கள் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த விஷயத்தில் பன்னிரெண்டு சீஷர்களுக்கும் இராஜ்யத்தில் தங்களுடைய நிலைகளை குறித்து அறிய ஆவலாயிருந்தனர்."பின்பு தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று." (லூக்கா 9:46)

மேட்டிமை மற்றும் போட்டி மனப்பான்மை அவர்கள் மத்தியில் எழும்பி, இப்படிப்பட்ட வாக்குவாதங்களை வளர்ச்சி அடையசெய்து, இவர்களில் சிறந்தவர் யார் ? என்ற கேள்வி கேட்கப்பட்டது. சில வருடங்கள் இயேசுவோடு நடந்தார்கள், அவருக்கு பணிவிடைசெய்தார்கள் தங்களுடைய உலக பிரகாரமான காரியங்களை பலி செலுத்தினார்கள். முடிவு நெருங்கி விட்டது என்று அறிவிக்கப்பட்டதால் அவர்களின் பரிசைக் குறித்து பேசுவதற்கு இதுவே சரியான நேரம் என்று எண்ணினார்கள். விசேஷமாக, யார் பெரியவராக இருப்பார் என்று அறிந்து கொள்ள விரும்பினார்கள். இன்றைய நாளிலும் அநேகர் தங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் வெகுமதிகளை அறிந்து கொள்ளாமல், அதற்கான கிரியைகள் எதையும் செய்ய விரும்புவதில்லை.

இயேசு இவர்களுக்கு என்ன பதில் அளித்தார்? அவர் பெயர்களை சொல்லிவிடுவார் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்தால் நிச்சயமாக, அவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள். இந்த சூழ்நிலையை மற்றொரு வாய்ப்பாக பயன்படுத்தி, இயேசு இவர்களுக்கு ஏற்கனவே கற்றுக்கொடுத்த பாடத்தை மறுபடியும் நினைப்பூட்டினார்."தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்." (மத்தேயு 16 :25) இது வேதாகமத்தில் உள்ள மிக சிறந்த உண்மையாகும். நீங்கள் ஜீவனை பற்றிக்கொள்ள அதை பின் தொடர்ந்தால், நிச்சயமாக அதை சுதந்தரிக்கமாட்டீர்கள். அதே போல் பரிசுகளை பெற நேரடியாக சென்றாலும் அதையும் பெற முடியாது. ஆகவே இவர்களில் யார் பெரியவனாக இருப்பான் என்பதை இயேசு குறிப்பிடாமல், அவர்கள் மேன்மையான இடத்தைப் பெற, மனதாழ்மை மற்றும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதை குறித்த பாடங்களை கற்று கொடுத்தார்.

"...நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள், ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன் .... ." (மாற்கு 9 : 33-35)என்று இயேசு சீஷர்களுக்கு கற்பித்தார்.

யார் பெரியவர் என்ற பெருமையை குறித்த காரியத்திற்கு பதிலாக தங்களுக்குள் இருக்கும் மனதாழ்மையையும், மற்றவர்களுக்கு சேவை செய்யும் மன நிலையிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்ற பாடத்தை இயேசு இங்கு தெளிவாக விளக்கினார். இவர்கள் எஜமானாக அல்ல ஊழியக்காரர்களாயிருக்க வேண்டியவர்கள். ஆனாலும் இந்த ஒரு காரியம் அவர்களின் சிந்தையில் நிலைநிற்கவேயில்லை.

"அதற்கு அவர்கள் (யோவான், யாக்கோபு ) - உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்ய

வேண்டும் என்றார்கள். மற்றப் பத்துப் பேரும் அதைக்கேட்டு, யாக்கோபின் மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள்." (மாற்கு 10 : 37, 41) இதற்கு முந்திய அதிகாரத்தில் இதே காரியத்தை குறித்து "வாக்குவாதம்" உண்டான போது, இராஜ்யத்தில் யாக்கோபும் யோவானும் மேன்மையான இடத்தை பெறுவார்கள் என்று எண்ணினார்கள். மீண்டுமாக இதே பிரச்சனையை எழுப்பினார்கள். ஆனால் இயேசு இதற்கான சரியான விளக்கத்தை சொல்லும் முன் மற்ற பத்து பேரும் தங்களுடைய அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள் என்பதை வசனங்கள் குறிப்பிடுகிறது. மீண்டும் ஒரு முறை இயேசு மனத்தாழ்மையை குறித்த பாடத்தை கற்றுக்கொடுக்க முயற்சித்தார் - "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது, உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் அடிமையாயிருக்கககடவன்."(மாற்கு 10: 43, 44 Knox translation) "King James Version" மற்றும் மற்ற மொழிபெயர்ப்புகளில் "அடிமை" என்ற வார்த்தைக்கு பதிலாக "ஊழியக்காரன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், கிரேக்க பாஷையில் "அடிமை" (விரும்பி அல்லது விரும்பாமல்) என்று பொருள்படக்கூடிய வார்த்தை தான் (ஸ்டாரங்க்ஸ் -1401) பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அடிமைகள்**

"அடிமை" என்ற வார்த்தையின் உட்பொருளின் நிமித்தமாக, நம்மில் அநேகர் அதை பயன்படுத்துவதில்லை. அடிமை தனிநபர்களை தரம் குறைத்துவிடுகிறது. அது மனித தன்மையை குறைத்து மதிப்பிடுவதாகும். ஆகவே, இன்றைக்கு சுய விருப்பத்தின்படி எதை வேண்டுமானால் செய்ய ஜனங்கள் விரும்புகிறார்கள். ஒருவர் மற்றொருவருக்கு ஊழியம் செய்ய விரும்பினால் மட்டுமே ஊழியம் செய்கிறார்கள். ஆனால் ரோம பேரரசின் காலத்தில் "அடிமைகளுக்கு" இப்படிப்பட்ட சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நியமிக்கப்பட்ட வேலைகளை அவர்கள் செய்யவேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் சீஷர்கள் துல்லியமாக இதே சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

"உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தையைமேய்த்து வயலிலிருந்து வரும்போது, எஜமான் அவனை நோக்கி - நீ முன்பு போய்ச் சாப்பிட்டுவா என்று அவனுக்குச் சொல்வானோ? நீ எனக்குச் சாப்பாடு ஆயத்தம் பண்ணி, அரைகட்டிக்கொண்டு, நான் போஜனபானம் பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ்செய், அதற்குப்பின் நீ புசித்துக் குடிக்கலாம் என்று அவனுக்குச் சொல்லுவானல்லவா? தான் கட்டளையிட்டவைகளை அந்த வேலைக்காரன் செய்ததற்காக அவனுக்கு உபசாரஞ்செய்வானோ ? அப்படிச் செய்யமாட்டானே. அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு - நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்."(லூக்கா 17 : 7 - 10)

அடிமையானவன் ஒரு நாள் மட்டும் அல்ல வாரத்தின் எல்லா நாட்களும் வேலை செய்யவேண்டும். அவனுக்கு எந்த நாளிலும் விடுமுறை கொடுக்கப்படுவதில்லை. அவன் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். இப்படி செய்வதினால் அவன் எந்த விதமான விசேஷித்த இரக்கங்களையும் பெறுவதில்லை. ஏனெனில் இது அவன் மேல் விழுந்த கடமை. இதை இவன் செய்ய மறுத்தால் அவன் வாழ்க்கை அபாயத்திற்குள் சிக்கிவிடும்.

இன்றைக்கு கிறிஸ்தவர்களும் இதே நிலையில் இருக்கிறார்கள். நாம் செய்யும் வேலைகளுக்கு விசேஷித்த மதிப்பையோ,பெருமை அடைவதற்கோ இடமில்லை. நாம் உயிரோடிருக்கும் வரை நம்முடைய எஜமானை சேவிப்பது நம்மேல் விழுந்த கடமை. நாம் மிகச் சிறந்த வேலையை செய்கிறோம் என்று நமக்குள் நினைத்தால் - " நாம் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்கள் " - என்ற இயேசுவின் வார்த்தைகளை பிரதிப்பலிக்கவேண்டும். இயேசு சீஷர்களை அதிகமாக நேசித்தாலும் அவர்களின் வளர்ச்சிக்குறைவு பல முறை இயேசுக்கு (அவருக்கு) ஏமாற்றத்தை தந்தது. இவர்கள் அனைவரும் நல்ல வேலைகளை செய்வதாகவும், ஏற்ற பாடங்களை கற்றுக்கொள்வதாகவும் நினைத்திருக்கக்கூடும். ஆனால் ஒவ்வொரு முறையிலும், அவர்கள் தவறிக்கொண்டிருந்தார்கள்.

எஜமான் - அடிமை என்பவர்களின் உறவை பொருத்த வரையில், நடைமுறையில் இல்லாத சில காரியங்களை வசனங்கள் எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்துவின் அடிமைகளாக இருப்பவர்கள், அவர் நமக்கு செய்த காரியத்தை தவிர வேறு எந்த காரியத்தையும் அவர் எதிர்பார்ப்பதில்லை. உண்மையில் நமக்கு சந்தோஷமாக சேவை செய்த எஜமானனை நாம் சேவித்து கொண்டிருக்கிறோம் - "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு

ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்."(லூக்கா 12 :37) பொதுவாக உலகபிரகாரமான எஜமான்களின் அடிமைகளுக்கு இது பொருந்துவதில்லை. வேதாகமம் முழுவதும் நாம் பரிப்பூரணமான இயேசுவின் மாதிரியை பின்பற்ற சொல்லப்பட்டிருக்கிறது.

"ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:3 -8) - "கட்டுண்ட ஊழியக்காரன்" (ஸ்டாரங்கஸ் - 1401) என்று வார்த்தைக்கு "அடிமை" என்று பொருள்படுகிறது. நாம் அடிமைகள். அப்போஸ்தலனாகிய பவுல் கற்று கொடுத்த பாடங்களில் எந்த விதமான பூமிக்குரிய ஆதாயங்களையும் நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஆனால் நமக்குள் இருக்கும் பழைய மனித நிலை இந்த காரியத்தை எளிதில் மறக்க செய்கிறது.

**"ஒரு பணம்" பற்றிய உவமை**

ஒரு வேலை நீங்கள் வேலை இல்லாமல், உங்கள் குடும்பத்தை எப்படி போஷிப்பது என்ற சூழ்நிலையில் இருக்கும்பொழுது, ஒரு நாள் வேலை செய்து ஒரு நாளுக்குரிய கூலியை பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தால், இந்த வாய்ப்பின் நிமித்தம் நீங்கள் எவ்வளவு சந்தோஷப்படுவீர்கள்? இப்பொழுது நாம் இதைக் குறித்து பார்ப்போம்.

"பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது - அவன் தன் திராட்சைத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலிபேசி, அவர்களைத் தன் திராட்சைத்தோட்டத்துக்கு அனுப்பினான். மூன்றாம் மணிவேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு - நீங்களும் திராட்சைத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான், அவர்களும் போனார்கள். மறுபடியும் ஆறாம் ஒன்பதாம் மணிவேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக்கண்டு - நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள் - ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி - நீங்களும் திராட்சைத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான். சாயங்காலத்தில், திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி - "நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு" என்றான். அப்பொழுது பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி - பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள், பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக - சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை, நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா ? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்திவந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான். இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள், அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்." (மத்தேயு 20:1 -16)

ஒரு நாள் முழுவதும் வேலை செய்தவர்களின் உணர்வுகளை நிச்சயமாக நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது. அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட கூலியை அவர்கள் முன் அறிந்தபோதிலும், இவர்களுக்கு பின் வந்து குறைவான நேரம் வேலை செய்தவர்களுக்கு தாராளமாக கூட்டி கொடுத்த எஜமானனை இவர்கள் கவனித்தார்கள். ஆகவே இவர்களும் வாக்களிக்கப்பட்டதை விட அதிகமான கூலியை பெறுவார்கள் என்று எதிர்பார்த்தார்கள்.

ஆனால் தங்களுடைய எஜமானனால் அவருடைய வேலைக்கு தங்களை தெரிந்தெடுத்தார் என்ற மிக பெரிய அழைப்பை குறித்து உணராத அப்பிரயோஜனமான வேலையாட்களானார்கள்.

இந்த உவமையானது அநேகரை, வேதனைக்குள்ளாக்குகிறது. ஏனென்றால், பரலோக ஆசீர்வாதங்களை பெறுபவர்களில் சிலர் மேன்மையான நிலை கிடைக்கவேண்டியவர்களுக்கு குறைவான நிலைமை கிடைத்துவிடுமோ என்ற தடுமாற்றம் ஏற்படுகிறது. ஆனால் இந்த உவமையானது பரலோகத்தில் நடைபெறுவதை குறித்து விவரிக்கிறதில்லை. இராஜ்யத்தை குறித்து இயேசுவின் பிரசங்கத்தை கேட்ட பரிசேயர், சதுசேயர் மற்றும் பொது ஜனங்கள் பாவிகள் ஆகிய இரண்டு வகுப்பார் அங்கு இருந்தனர். இயேசு பாவிகளோடு இருந்ததினால் பரிசேயரும், சதுசேயரும் அவரை குற்றம் சாட்டினார்கள். இவர்கள் மட்டுமே "அந்த பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் " சகித்தவர்கள் என்றும், அதனால் அவர்கள் அதிகமேன்மைக்கும், மகத்துவத்திற்கும் உடையவர்கள் என்று நம்பினார்கள். அனால் தாங்கள் பெற்றுகொண்ட அதே சிலாக்கியத்தை இந்த பாவிகளும், பொது ஜனங்களும் எவ்வாறு பெற்றுகொண்டார்கள் என்பதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. எஜமானனை பின்பற்றி, நித்திய ஜீவனை பெறுவதற்கு உண்டான வாய்ப்பே - ஒரு பணம் கூலி. "யேகோவா தேவனின் திராட்சை தோட்டத்தில்" வேலை செய்வதற்கு அனைவருக்கும் ஒரே விதமான வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. இங்கு எந்த விதமாக கால அவகாசமும் கொடுக்கப்படவில்லை. "நல்ல குமாரன் கெட்ட குமாரன்" உவமையும் இதே பொருளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. அந்த உவமையில், தகப்பனுடைய ஆஸ்திகளையும், அந்தஸ்த்தையும் பெற தகுதியற்ற இளையகுமாரன் மேல் தகப்பன் இரக்கமாக இருந்ததை மூத்த குமாரன் விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய தாராளமான குணத்தை யாரும் விலைக்கு வாங்க முடியாது. நாம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு காரியமும் வெகுமதிகளே. இதை நாம் மதிப்பிடமுடியாது.

"அப்பொழுது அவர் அவர்களை நோக்கி - அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்." (லூக்கா 10:2) இந்த வசனமானது யூத யுக அறுவடையைக் குறித்து பேசியிருந்தாலும், இன்று நடந்துகொண்டிருக்கும் சுவிசேஷ யுக அறுவடையிலும் அதே விதி முறைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நியாயத்தீர்ப்புக்கு ஏற்றவாறு மற்றவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை குறித்து நாம் தடுமாறுவதற்கு பதிலாக இந்த அறுவடைவேலைகளை செய்யும் ஒவ்வொருவரையும் குறித்து மகிழ்ச்சியடைவோம். தேவனுடைய பெருந்தன்மையுள்ள உயர்ந்த குணத்தை குற்றம் சாட்டவேண்டாம். தேவன் நம்மேல் இரக்கம் காண்பிக்கிறது போல மற்ற சபைகள், நண்பர்கள் இன்னும் மற்ற கூட்டங்கள் மேல் அவருடைய கிருபையை பொழிகிறார். நம்முடைய எஜமானை பின்பற்றும் சிலர், சத்தியத்தை விட்டு விலகும்பொழுது, தண்டிக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட தண்டனைகள் மற்றவர்கள் மேல் வரும் பொழுது, தேவனுடைய இரக்கத்தின் வெளிச்சம் இவர்கள்மேல் மட்டும் பிரகாசிப்பதாகவும், தேவனுடைய இரக்கம் தங்கள் மேல் மட்டும் ஒளி வீசுவதாகவும் இவர்களோடு இசைந்திராதவர்கள் மேல் தேவனுடைய இரக்கம் இருப்பதில்லை என்று நிரூபிக்கப்படுகிறது என்று நினைத்து கொள்கிறார்கள். யார் பெரியவர் என்ற பாடத்தின் தொடர்ச்சியாக, ஒரு சம்பாஷனை நடந்தது - "தமக்கு முன்னதாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது - ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து - நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்" (லூக்கா 9:52 -56)

வானத்திலிருந்து அக்கினியை வருஷிக்க செய்வது சரி என்று இயேசு நினைத்திருந்தால் நிச்சயமாக அவரே இதைசெய்திருப்பார் என்று யாக்கோபு மற்றும் யோவானுக்கு தோன்றவில்லை. இயேசுவை நிராகரித்த சமாரியர்களுக்கு தெளிவான ஒரு பாடம் கற்று கொடுக்கவேண்டும் என்று விரும்பினார்கள். மேலும், அக்கினியை வருஷிப்பதால் இவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்று மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியாக இப்படி

செய்ய நினைத்தார்கள். யார் பெரியவர் என்று தீர்மானிப்பதின் மூலம், இயேசுவுக்கு அருகாமையில் இருப்பவர்களின் நியாயத்தீர்ப்பை பாதிக்கக்கூடியதாக தோன்றுகிறது.

**பாருக்கு**

எரேமியா புத்தகத்தில் சிறிதளவு சொல்லப்பட்ட பாத்திரமானது கிறிஸ்துவின் அநேக குணலட்சனங்களை பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கிறது. அவருக்கு பாருக்கு என்றுப்பெயர். "அப்பொழுது எரேமியா நேரியாவின் குமாரனாகிய பாருக்கை அழைத்தான், பாருக்கு என்பவன் கர்த்தர் எரேமியாவுடனே சொல்லிவந்த எல்லா வார்த்தைகளையும் அவன் வாய் சொல்ல ஒரு புஸ்தகச்சுருளில் எழுதினான். பின்பு எரேமியா பாருக்கை நோக்கி- நான் அடைக்கப்பட்டவன், நான் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாது. நீ உள்ளே பிரவேசித்து, என் வாய் சொல்ல நீ எழுதின சுருளிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளைக் கர்த்தருடைய ஆலயத்தில் உபவாச நாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்கவாசிப்பதுமன்றி, தங்கள் பட்டணங்களிலிருந்து வருகிற எல்லா யூதா கோத்திரத்தாரும் கேட்கும்படி அவைகளை வாசிப்பாயாக." (எரேமியா 36: 4-6)

பாருக்கு எரேமியாவின் காரியதரிசியாக இருந்தார். அவரால் சொல்லப்பட்ட அனைத்தையும் பாருக்கு எழுதினார். ஆலயத்தில் பேசாதபடி எரேமியாவுக்கு விதித்திருந்தார்கள். அவரிடத்தில் பாருக்கு பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார். ஆகவே ஏரேமியாவின் தீர்க்கதரிசனங்களை ஜனங்களுக்கு வாசித்து காட்டினார். இதை கேள்விப்பட்டு சில இளவரசர்கள் தங்களுக்கு தனித்து வாசிக்கும்படி கேட்டு கொண்டார்கள். 15 -ஆம் வசனத்தில் இரண்டாம் முறையாக இளவரசர்களுக்கு வாசித்தார். எரேமியாவால் செய்ய முடியாத அளவுக்கு காரியங்களை தான் செய்ததாக எண்ணி, கேள்விக்கு இடம் கொடாமல், இந்த அனுபவத்தில் அதிகமாக பெருமைப்பட்டு கொண்டார். அதற்கு பின், இவருடைய வாசிப்பை கேட்ட அநேகர் ஆண்டவரின் வழிகளை கடைபிடிப்பதைக் கண்டு, அவருடைய வெற்றியை குறித்து மிகுந்த சந்தோஷம் அடைந்ததாக வசனங்களின்மூலம் வாசிக்கிறோம். "பாருக்கே, உன்னைக்குறித்து இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீ - இப்பொழுது எனக்கு ஐயோ, கர்த்தர் என் நோவைச் சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணினார், என் தவிப்பினால் இளைத்தேன், இளைப்பாறுதலைக் காணாதே போனேன் என்று சொன்னாய் என்கிறார். இதோ, நான் கட்டினதையே நான் இடிக்கிறேன், நான் நாட்டினதையே நான் பிடுங்குகிறேன், இந்த முழுத்தேசத்துக்கும் இப்படியே நடக்கும். நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ ? தேடாதே , இதோ, மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப்பண்ணுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், ஆனாலும் , நீ போகும் சகல ஸ்தலங்களிலும் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப்பொருளாகத் தருகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று அவனுடனே சொல் என்றார். "(எரேமியா 45:2 -5)

"நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ ?" அநேக காரியங்களை நிறைவேற்ற முயற்சித்தார். இது மாம்சத்தை பொருத்த வரைக்கும், தோல்வியான காரியமாக இருந்தது. இன்றும் கூட மற்றவர்கள் செய்யாத வேலைகளை நம்முடைய சபை செய்யவேண்டும் என்று விரும்புகிறோம். அல்லது நாம் பெரிய பெரிய அமைப்புகளோடு இணைய விரும்புகிறோம் அல்லது நாம் முன் செய்த வேலையை விட நேர்த்தியாக செய்யவிரும்புகிறோம். நிச்சயமாக நாம் இவைகளை செய்யும்பொழுது, "தேவனுடைய மகிமைக்கென்றே" இதை செய்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் தேவன் நம்முடைய இருதயத்தை வாசிக்கையில், நமக்குள் சிறிய "பாருக்கு." இருக்கிறாரா ? நாம் நம்முடைய மகிமையையும் தேட முயற்சிக்கிறோமா ? நிச்சயமாக கூடாது.

துவக்கத்தில் ஏரோமியா "ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் கொல்லுகிறார். இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."(எரேமியா 9 :23, 24) என்று பாருக்கை எழுத சொன்னார். தேவனை பொருத்த வரையில், ஞானம், வல்லமையுள்ள அல்லது மகிமையான ஐசுவரியமுமான காரியங்களை - இவைகளைக் குறித்து யார் மேன்மை பாராட்ட முடியும் ? அவரை பொருத்த வரையில் நாம் அனைவரும் அப்பிரயோஜனமனான ஊழியக்காரர்கள். சரி என்று தோன்றுவதை அல்லது நாம் விரும்புவதை மட்டுமே நாம் முழு முயற்சியோடு செய்கிறோம். ஏதாகிலும் மகிமை உண்டானால் அது தேவனுக்கே உரியது.

ஒரு வேளை பவுல் இந்த காரியங்களை மனதில் வைத்து தான் இவ்வசனத்தை எழுதியிருக்கவேண்டும். "ஞானிகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்." (1கொரிந்தியர் 1 :27, 29) ஆகவே நாம் தேவனோடு ஐக்கியப்பட்டிருப்பதை குறித்து பெருமை பாராட்டுவோமானால், பலவீனர்கள், அற்பமாக எண்ணப்பட்டவர்கள், அறிவில்லாதவர்கள் மற்றும் இழிவானவர்களாக இருந்ததினால் நம்மை தெரிந்துக்கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் வைத்து நம்மை குறித்து அல்லது நாம் செய்த எதையும் குறித்து மேன்மைபாராட்ட தகுதியற்றவர்களாயிருக்கிறோம் என்பதை உணர்ந்து எல்லாவற்றிலும் தேவனுக்கே மகிமை செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். (1கொரிந்தியர் 4 : 7)

**வருங்கால வெகுமதிகள்**

வீட்டில் பிறக்கும் அடிமை, வாழ்நாள் முழுவதும், காலை முதல் மாலை வரைக்கும் வேலை செய்து, "நன்றி" என்ற எந்த ஒரு வார்த்தையும் கூட பெறாமல் மரித்துபோகிறான். எல்லா அடிமைகளும் இப்படியாகவே மரிப்பார்கள். நாமும் அப்பிரயோஜனமான அடிமைகளாக இருந்தாலும், நாம் செய்யவேண்டியவைகள், நம்மால் முடிந்த வரைக்கும் காரியங்களை செய்தாலும், அவருடைய சொந்த ஊழியக்காரருக்கு எப்படி கூலி கொடுக்க வேண்டும் என்று அறிந்திருக்கும் எஜமானனிடம் வேலை செய்கிறோம். இயேசு, பேதுருவின் கேள்விக்கு பதில் அளிக்கையில் ,மேற்கூறிய கருத்தை விளக்கினார். "அப்பொழுது பேதுரு அவரை நோக்கி - இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே என்றான். அதற்கு அவர் - தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றோரையாவது, சகோதரரையாவது, மனைவியை யாவது, பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும், இம்மையிலே அதிகாமானவைகளையும்,மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற் போவதில்லை யென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். " (லூக்கா 18: 28 - 30)

ஒரு ஐசுவரியமுள்ள இளைய ஆட்சியாளர், நித்திய ஜீவனை பெறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டதற்கு இயேசு சொன்ன பதிலை பேதுரு கேட்டுகொண்டிருந்தார். இயேசு சொன்ன பதிலை கேட்டு அந்த இளைஞன் பதில் ஏதும் சொல்லாமல் திரும்பிவிட்டான். இவர்கள் எதிர்பார்க்காத அளவுக்கு பரிசளிக்கப்படும் என்று இயேசு சொன்னார். இதை குறித்து அவருடைய மலை பிரசங்கத்திலும் - "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான் களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்." (லூக்கா 6 : 22, 23) என்றார்.

நம்முடைய பொக்கிஷம் பூமியில் அல்ல, பரலோகத்தில் இருக்கிறது. நாம் விசுவாச மாயிருந்தால், ஜீவ கிரீடத்தையும், திவ்விய சுபாவத்தையும் பெறுவோம் என்று நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. இன்று பரிசுத்த வான்களின் சுதந்தரத்தில் ஒரு பங்காக நாம் அநேக ஆசீர்வாதங்களை பெற்றிருந்தாலும், நித்தியமான பரிசை பெறுவதற்கு இது காலம் அல்ல. மிகப் பெரிய காரியங்களை நமக்காக தேடக்கூடாது. நம்முடைய எளிய முயற்சிகளினால் கிடைக்கும் சற்று "கூடுதலான" விளைவுக்கான மகிமையும் தேவனையே சேரும்.நிச்சயமாக, நம்முடைய விசேஷமான திறமைகள் இதற்கு காரணம் அல்ல. ஆகவே நாம் - தேவனுடைய ராஜ்யத்தையே தேடுவோம்..., அப்பொழுது இவைகளெல்லாம் நமக்கு கொடுக்கப்படும். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." (லூக்கா 12: 31, 32)

உன்னதமான அழைப்புக்கு கிடைக்கும் மிக பெரிய பரிசின் மேல் நாம் நம்முடைய கண்களை பொருத்திக் கொண்டவர்களாய், நம்மை சுற்றியிருப்போருக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், ஊழியம் செய்வோமானால், நம்முடைய ஆண்டவரின் இராஜ்யத்தில், இரட்சகராம் இயேசு கிறிஸ்துவோடு நாம் மகிழ்ச்சியோடு பிரவேசிப்பது நமக்கு கிடைக்கும் மாபெறும் சுதந்திரம்.

ஆறுதலின் வாக்குறுதி

# இயேசுவின் கடைசி பிரசங்கம்



"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." - யோவான் 14 : 26

**Mark Grillo**

என்னுடைய குழந்தைகள் கல்லூரிக்கு செல்ல ஆயத்தப்படும் போது, நானும் என் மனைவியும் அவர்களுடைய வாழ்க்கையின் வெற்றிக்கும், பாதுகாப்புக்கும் தேவையான குணநலன்களை அவர்களுக்கு நினைப்பூட்டி கொண்டிருப்பது அவசியம் என்று நினைத்தோம். "இரவில் தனித்து எங்கும் செல்லவேண்டாம்", "நன்றாக படியுங்கள், மற்றவர்களுக்கு நல்ல மாதிரியாக நடந்து கொள்ளுங்கள்", மற்றும் "அடிக்கடி போன் செய்யுங்கள்" போன்றவைகளை சொல்வதுண்டு. நாம் அவர்களை அதிகமாக நேசிப்பதால், அவர்கள் நுழைய இருக்கும் "மிக பெரிய உலகத்தின்" அனுபவங்ளுக்கு ஒவ்வொரு நொடியிலும் அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டியிருக்கிறது.

இயேசு, தன்னுடைய சீஷர்களை விட்டு பிரியப் போவதை, தான் சிலுவையில் அறையப்படும் முன் அறிந்திருந்தார். வெகு சீக்கிரத்தில் இவர்கள் அனைவரும் சந்திக்க இருக்கும் பாடுகள் மற்றும் அனுபவங்களைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார். யேகோவா தேவனின் திட்டங்களை சகல கோணங்களிலும் சரியாக புரிந்துகொண்டதினால் "இனி காலம் செல்லாது " என்பதை அவர் அறிந்திருந்தார். இயேசுவின் எந்த வார்த்தைகளும் மதிப்பற்றதாக இருந்ததில்லை. ஒவ்வொரு வார்த்தையும் விசேஷமாக தேர்வு செய்யப்பட்டிருந்தது. மற்றவர்கள் அநேக வார்த்தைகளைக் கொண்டு சொல்ல வேண்டியவைகளை நம்முடைய இயேசு சில வார்த்தைகளை மட்டும் சொல்லி, அவைகளை எளிதில் புரியவைத்து, திறமையுள்ள எஜமானன் என்று அநேக முறைகள் நிரூபித்திருக்கிறார்.

தன்னுடைய கடைசி இராபோஜனத்தை முடித்த பின், அவர் கைப்பற்றப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன், தனக்கு நெருக்கமாக இருந்த சீஷர்களுக்கு சில முடிவான வார்த்தைகளை அறிவித்தார். அவர்களின் சிந்தைகளும், புரிந்துக்கொள்ளுதலும், இயேசுவுக்கு ஒப்பிட்டு பார்க்கும் பொழுது முற்றிலுமாக மாறுபட்டதாக இருந்தது. வரவிருக்கும் மணி நேரங்கள், நாட்கள், வருடங்கள் எவ்வளவு சிக்கலாக (கடினமாக) இருக்கும் என்று சீஷர்கள் புரிந்துகொள்ளா திருந்தார்கள். இயேசு மேசியாவாக வந்து ரோம அதிகாரத்திலிருந்து இவர்களை மீட்டு, தலைமுறை தலைமுறையாக வாக்களிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். ஆகவே, இயேசுவின் வார்த்தைகளிலிருந்து, அடுத்து இருபத்து நான்கு மணி நேரத்தில் நடக்கவிருக்கும் சம்பவங்களை குறித்து அவர்களின் இருதயத்தின் சிந்தனைகள் பற்றிக்கொள்ள மனதில்லாதிருந்தது. நடக்கயிருக்கும் ஒவ்வொரு சம்பவமும் தேவனுடைய திட்டத்தின் விபரங்கள் நிறைவேற ஆயத்த மாகயிருந்தது.

காட்டி கொடுக்கும் பணிக்காக யூதாஸை வெளியே அனுப்பின பின், "ஒருவருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும்" என்று அவசியமாக கடைப்பிடிக்க வேண்டிய கற்பனையை வெகு துரிதமாக மீதியிருப்பவர்களுக்கு கற்பித்தார் - "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (யோவான் 13 :34,35)

அவர் ஆறுதல் என்ற செய்தியை அவர்களுக்கு தந்தார். இந்த செய்தியானது அன்று இருந்த சீஷர்களுக்கு மட்டும் அல்ல, இந்த சுவிசேஷ யுகத்தில் அவரை பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவான் 14:1)

நாம் அறியாத அல்லது பழக்கமில்லாத சில புதிய வேலைகளை செய்ய நேரிடும்பொழுது, இதை பற்றி நன்கு அறிந்த, நம்முடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாகிய ஒருவரிடம் நாம் ஆலோசனை கேட்பது நமக்கு பிரயோஜனமாக இருக்கலாம். பெற்றோர் - "நான் கடைவீதிக்கு போகிறேன், வருவதற்கு தாமதமாகலாம், இதற்கிடையில் ஏதாகிலும் உதவி தேவைப்பட்டால் இந்த தொலைபேசி எண்ணுக்கு தொடர்புக்கொள்ளுங்கள். " என்று பிள்ளைகளுக்கு சொல்லுவது போல, இயேசுவும் சீஷர்களுக்கு கற்பித்தார்.

இயேசு சீஷர்களை விட்டு உரிய காலம் பிரிந்தார். அவர்களுக்கு இதை குறித்து தெளிவாக சொல்லியிருந்தும், அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. - "தோமா அவரை நோக்கி - ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்." ( யோவான் 14 :5) தோமா மற்றும் பிலிப்புடன் இயேசுவின் சம்பாஷனைகளை நாம் வாசிக்கையில், இயேசுவை நெருக்கமாக பின்பற்றின சீஷர்களும், நடக்க போகிற சம்பவங்களை பற்றி அறியாதிருந்தார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார். பிலிப்பு இயேசுவை நோக்கி - "ஆண்டவரே....எங்களுக்கு பிதாவை காண்பியும்" என்று கேட்டதாக வாசிக்கிறோம். அதற்கு இயேசு - பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா ? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய் ? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா ? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை, என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள், அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்." (யோவான் 14 :9 -11) என்றார்.

இயேசு தன்னால் இயன்ற மட்டும், சில மணி நேரங்களில் பரலோக பிதாவினிடத்தில் அனைத்தையும் ஜெபத்தின் வழியாக ஏறெடுத்தார். யோவான் 14 -ஆம் அதிகாரத்தில் பிதாவோடு தான் கொண்டிருக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட உறவையும், அதே உறவை தான் சீஷர்களோடும், பிதா சீஷர்களோடும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். இதை தொடர்ந்து வரும் அதிகாரத்தில் அவர் யேகோவா தேவனிடம் - "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோவான் 17:21) என்று விண்ணப்பித்தார்.

இயேசு பூமிக்குரிய பணியிலிருந்து ஓய்வு பெறயிருந்ததால், தான் விட்டு செல்லும் தேவனுடைய பணியை தொடர்ந்து சீஷர்கள் தங்களுடைய பணியாக தெரிந்துகொண்டு அவைகளை நிறைவேற்ற அவர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கினார். சில நாட்கள் சென்ற பின் "கிரியை இல்லாத விசுவாசம் செத்தது" என்று யாக்கோபால் பின் எழுதப்பட்டதை இயேசு இங்கு முன் அறிவித்தார். விசுவாசத்தின் நோக்கம், உண்மையும், உத்தமுமாக இருந்தால் நிச்சயமாக நம்முடைய குணங்கள் மாற்றம் அடையும் என்று இயேசு சீஷர்களுக்கு வலிவுறுத்தினார். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக - ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (யோவான் 14 : 23)

இவை அனைத்தையும் இயேசு, நாம் எதிர்பாராத நேரத்தில் நிகழும் அனுபவங்களுக்கு நாம் ஆயத்தப்பட, அவர்களுக்கு இவைகளை முன் அறிவித்தார். ஆகவே நாம் எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறும் பொழுது நிச்சயமாக நாம் அவைகளின் காரியங்களை புரிந்துகொண்டவர்களாய் செயலாற்ற முடியும். மேலும், பரிசுத்த ஆவியால் அவர்களுக்கு கிடைக்க போகும் அற்புதமான உதவியை பற்றியும் அவர்களுக்கு கற்பித்தார் - "என் நாமத்தினாலே பிதா அனுப்பபோகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்."(யோவான் 14 :26)

பரிசுத்த ஆவியை குறித்து நாம் முழுமையாக புரிந்துக்கொள்ளுவது நம்முடைய திராணிக்கு மேலாக, இருந்தபோதிலும், நாம் அதன் வல்லமையையும், பலன்களையும் குறித்து சாட்சி கொடுக்கமுடிகிறது. மனித வரலாறு முழுவதும், பரிசுத்த ஆவியின் செயல்கள், விவரிக்கமுடியாத அளவுக்கு சம்பவங்கள் நடந்திருக்கிறது. ஆனால் கால போக்கில், நம்முடைய புரிந்துக்கொள்ளுதல், அதிகரித்ததினால், இந்த பலன்களுக்கான காரணங்களை நாம் அறிந்திருக்கிறோம். இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த உதவியை நாம் வாக்குறுதியாக பெற்றிருக்கிறோம். இந்த உதவி இரகசியமானதோ, விசித்திரமானதாகவோ இராமல், இது உண்மையானதும், அற்புதமானதுமாக இருக்கிறது.

தேவன் அவருடைய திட்டங்கள் உள்பட அநேக காரியங்களை நமக்கு வெளிப்படுத்தியிருந்தாலும், சில காரியங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. எடுத்துகாட்டாக - "பரிசுத்த ஆவியின் தன்மை". ஆனாலும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் வல்லமையையும், செயலாற்றுதலையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. உண்மையில் அதனுடைய பலன்கள் அற்புதமாக உள்ளது.

இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்த 3 1/2 வருடங்கள், அவருடைய சீஷர்களை தேற்றினார் - "பரிசுத்த ஆவி மற்றொரு தேற்றரவாளனாக இருந்தாலும், இயேசு சீஷர்களுக்கு அளித்த அதே தேற்றுதலை இந்த பரிசுத்த ஆவியும் தருகிறது. உண்மையில், "தேற்றரவாளன்" என்ற வார்த்தை நம்முடைய இந்த வசனப்பகுதிக்கு பொருந்துவதில்லை. பரிசுத்த ஆவி நம்மை தேற்றுவது மட்டும் அல்லாமல் நம்மை பலப்படுத்தி, நமக்குள் பரிசுத்தத்தை தக்கவைக்கிறது. மேலும் பரிசுத்த ஆவி துயரங்களிலிருந்து ஆறுதல் அளிப்பதும், பயத்தை போக்குவது மட்டும் அல்லாமல், பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள், புரிந்துக்கொள்ளும் திறன் அதிகரித்து, பக்தி வைராக்கியத்தை உறுதிப்படுத்தி, கிரியை செய்ய பலனளித்து, நீதியின் பாதையில் சீர் பொருந்தி வாழ்வதற்கான தெய்வீக உதவிகளை செய்கிறது. "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு" தங்களை நீதியின் பாதையில் சீர்பொருந்த உதவி செய்கிறது." - என்று நம்முடைய சகோதரராகிய ரசல் கண்டறிந்தார். (Reprint, p. 2455)

இந்த வாக்குத்தத்தத்தை முழுமையாக புரிந்துகொண்டு அவைகளை நம்முடைய முழு மனதோடும், சிந்தையோடும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அண்டசராசரங்களின் சிருஷ்டிகர், நமக்கு அவருடைய பரிசுத்த ஆவி, அவருடைய வல்லமை மற்றும் அவருடைய செல்வாக்கை வாக்களித்திருக்கிறார். இது உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு சிந்தைனையாக இருக்கிறது.

நம்மூலமாக கிரியை செய்யும், பரிசுத்த ஆவி, குறைந்த பட்சம் மூன்று காரியங்களிலாவது வெளிப்படுத்தப்படவேண்டும்.

1. இயேசு வாக்களித்தது போல, வளர்ச்சிக்கு ஏதுவான சமாதானம் - "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடையசமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." (யோவான் 14:27)

2. தேவனுடைய குணங்களையும் அவருடைய திட்டங்களையும் இதற்கு முன் வெளிப்படாத அளவுக்கு வேத வசனங்கள் மூலம் புரிந்து கொள்ளுதல்.

3. கற்பனைக்கு எட்டாத அளவுக்கு நம்மை கிரியை செய்யக்கூடிய உந்துதல், மற்றும் நம்முடைய திராணிக்கு மேலாக நாம் வேலைகளை செய்து முடிப்பதாகும்.

நாம் என்றுமே இயேசுவின் வாக்குத்தத்தத்தை சந்தேகப்படாமல் இருப்போமாக - "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14 :14) இயேசு, தேவனுடைய குமாரன், பரலோக பிதாவிடம் நம்முடைய சார்பில் கேட்டு கொள்வது எதுவோ, நிச்சயமாக அது நிறைவேற்றப்படும் என்று நாம் அறிவோம்.

நாம் அனைவரும் நம்மால் முடிந்தவரைக்கும் கிறிஸ்துவை போல வாழ விரும்புகிறோம் - ஜெபிக்கிறோம், வேதம் வாசிக்கிறோம், ஒன்று கூடுகிறோம், சாட்சி பகிர்கிறோம். இயேசு நீதியும், பலியுமுள்ள ஜீவியத்தை ஜீவித்தது போல நாமும் ஜீவிக்க கடுமையாக முயற்சிக்கிறோம். இருந்த போதிலும் சில சமயங்களில் பரிசுத்த ஆவி நம்மில் செய்யும் கிரியைகளுக்கு தடை செய்கிறோம். அதற்கு பதிலாக உடன்படிக்கையின் வாழ்க்கையை சுய பலத்தாலும், வல்லமையினாலும், புரிந்து கொள்ளுதலினால் நடைமுறைப்படுத்த விரும்புகிறோம். ஆவிக்குரிய வாழ்க்கையை இவைகள் எவ்வளவு கட்டுபடுத்திவிடும் என்று சற்று யோசித்து பாருங்கள். நமக்கோ பரிசுத்த ஆவியின் வல்லமையை வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டிருக்கிறதே, தேவனுடைய சித்தத்தை உண்மையோடும், உத்தமத்தோடும் செய்ய விரும்புபவர்களுக்கு எப்படிப்பட்ட ஆதரவு கொடுக்கப்படுகிறது.

நினைவுக்கூறுதலின் காலங்களில் நம்முடைய ஆண்டவரின் வாக்குத்தத்தங்களை நாம் நினைவில் நிலைநிருத்தி, ஆண்டவரின் வாக்குத்தத்தங்களை நாம் உரிமை கோருவோமாக. பிதாவாகிய யேகோவா தேவனுடைய திட்டங்கள் ஒவ்வொன்றாக தொடர்ந்து வெளிப்படும்பொழுது, அதன் நிறைவேற்றங்களை கண்டு நாம் மகிழக்கடவோம். நாம் முற்றிலுமாக பரிசுத்த ஆவியை சார்ந்திருப்போமாக, தேவன் நமக்காகவே அவருடைய ஆவியை அனுப்பியிருக்கிறார். நாம் இப்பொழுது இதே பாதையில் நடந்து கொண்டிருக்கும் நம்முடைய சகோதரர்களோடு நெருங்கி இசைந்திருப்போம்.

இந்த காலத்திலும், இதை தொடர்ந்து வரும் நாட்களிலும், விசுவாசத்தில் நிலைத்து நின்று, ஆவிக்குரிய ஞானத்திலும், வல்லமையிலும் வளர்ச்சியடைந்து , நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்கு முன் வைத்திருக்கும் வேலைகளை தைரியமாக மேற்கொள்ள, நாம் நம்முடைய தேவனுடைய நாமத்தில் அதிகமான பரிசுத்த ஆவிக்காக தாழ்மையோடு விண்ணப்பிப்போமாக.

சொல்ல வேண்டியதோ அதிகம், நேரமோ குறைவு

# கெத்சமனே நோக்கிய நடைபயணம்



"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்." (மத்தேயு 26:30)

**Jeff Mezera**

கடைசி இராபோஜனத்திற்குபின் இயேசுவும், அவருடைய சீஷர்களும் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு கெத்சமனே தோட்டத்தை நோக்கி நடந்தார்கள். எருசலேமுக்கு அருகில் இருந்தபொழுது இயேசு பெரும்பான்மையான மாலை நேரங்களை அங்கு செலவளித்தார். (லூக்கா 22:39) ஆலோசனை சங்கத்தார் இயேசுவை தேடி கண்டுபிடிக்கும்படி அவ்விடம் அனைவராலும் அறியப்பட்டிருந்தது, அது சற்று தொலைவில், மலைகளை தாண்டி செல்லவேண்டியதாக இருந்தது. இவர்கள் இராபோஜனம் புசித்த மேல் வீடு எங்கு இருந்தது என்று சரியாக சொல்லப்படாவிட்டாலும், எருசலேம் மதில் சுவற்றிலிருந்து, அந்த தோட்டம் கிட்டத்தட்ட அரை மைல் தூரமாக இருந்தது. இந்த பிரயாண நேரத்தின் காலப்பகுதியை இயேசு தன்னுடைய சிநேகிதர் களுக்காக ஞானமாக செலவளித்தார்.

எருசலேம் நகரத்தின் வழியாக அவர்கள் நடந்து செல்கையில் பௌர்ணமி வெளிச்சம் வீசியது. குளிர்ச்சியான மாலை வேளையில் அவர் சொன்ன உவமைகள் மற்றும் பல காரியங்களை வழியில் சீஷர்களுக்கு நினைப்பூட்டும்படிக்கு இயேசு ஒவ்வொன்றாக காண்பித்து குறுகியக் காலத்தில் முக்கியமான பாடங்களை எளிதில் கற்பித்திருப்பார்.

கெத்சமனே தோட்டம் இருக்கும் இடத்திற்கு செல்ல, ஒலிவ மலைக்கு செல்லும் சாலையில் செல்ல வேண்டியதாக இருந்தது. இரவில் எருசலேமின் அனைத்து வாசல்களும் அடைக்கப் பட்டிருந்த தினால், இவர்கள் "ஊசி காதின்" வழியாக தான் வெளியே சென்றிருக்கவேண்டும். இந்த "ஊசி காது" என்று அழைக்கப்படும் வாசல் வழியாக வியாபாரிகள் தங்களுடைய ஒட்டகங்களின் மேலிருக்கும் பாரங்களை கீழே இறக்கி விட்டு, அந்த ஒட்டகங்களை தங்களுடைய முழுங்காலில் நகர்ந்து அந்த வாசல் வழியாக செல்ல கட்டாயப்படுத்தி கொண்டிருந்திருப்பார்கள். இந்த வாசல் வழியாக இயேசுவும், சீஷர்களும் வெளியே வரும்பொழுது, நிச்சயமாக ஒரு ஐசுவரியவானிடம் சொன்ன உவமையை அவர் நினைத்திருப்பார். "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்." (லூக்கா 18 :25)

"இவரைக் கைது செய்யவேண்டும் என்று தேடிவரும் காவலாளிகளிடமிருந்து தப்பிக்க விரும்பியிருந்தால், இவர்கள் கிழக்கில் உள்ள இன்னோம் பள்ளத்தாக்கை கடக்காமல் எல்லையோர பகுதிகளின் வழியாக நடந்திருக்கலாம். பட்டணத்தின் குப்பைகள் கொட்டப்பட்டு, தொடர்ந்து அவைகளை எரிக்க தீ மூட்டப்பட்டிருந்த இந்த பள்ளத்தாக்கு, பொதுமக்களின் நடமாட்டத்திற்கு அப்பாலே இருந்தது. இங்கு மற்றொரு அடையாளமும் காணப்படுகிறது. கெஹன்னா, என்று அழைக்கப்படும் இந்த இன்னோம் பள்ளத்தாக்கானது, விடுதலை பெறமுடியாத இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக சொல்லப்படுகிறது. இந்த பாதையில் நடக்கும் அபாயத்தை குறித்து இயேசு அறிந்திருந்தார். அவர் பரிபூரணத்தில், பாவமற்ற நிலையில் இருந்ததால், அவரால் மேற்கொள்ள முடிந்தது. அவர் தவறியிருந்தால், இரண்டாம் மரணமாகிய கெஹன்னா அவரை மேற்கொண்டுவிட்டிருக்கும். அவரை உண்மையாக பின்பற்றும் சீஷர்களும் இதே பாதையில் செல்ல வேண்டியவர்களாயிருக்கிறார்கள்." - 1998 ஆம் வருடம் மார்ச் / ஏப்ரல் - ஹெரால்டு பிரதி.

நாங்கள் "புரிந்துகொண்டோம்" என்று சீஷர்கள் இயேசுவிடம் சொன்னாலும் (யோவான் 16:29,30) அவர் எதிர்ப்பார்த்த அளவுக்கு அவர்கள் விசுவாசத்தில் உறுதிப்படவில்லை என்பதை இயேசு அறிந்திருந்தார். சற்று முன் "யூதாஸ் தன்னை காட்டிக்கொடுப்பான்" என்று அறிவித்திருந்தார். (யோவான் 13:21, 26,27) இப்பொழுது - "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான், அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம்." (யோவான் 15:6) என்று அனைவரையும் எச்சரித்தார்.

அந்த இரவில் அவர் நிமித்தமாக அனைவரும் சிதறடிக்கப்படுவார்கள் என்று சகரியா 13:7 -ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசனத்தை இயேசு சுட்டிக் காட்டினார். "...மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின்

ஆடுகள் சிதறடிக்கப்படும்...." (மத்தேயு 26: 31) அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள். "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் .... நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் ....." (மத்தேயு 26 :33,35) என்று பேதுரு பதில் அளித்தார். ஆனால் சேவல் கூவுமுன் மூன்று முறை என்னை நீ மறுதலிப்பாய் என்று இயேசு சொன்னார். (மத்தேயு 26:34)

இதேபோல் மாம்ச இஸ்ரயேலரைக் குறித்த மற்றொரு தீர்க்கதரிசனத்தை எசேக்கியேலும் முன் அறிவித்திருந்தார் - "மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டுபோயின, சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு, பூமியின்மீதெங்கும் என் ஆடுகள் சிதறித்திரிகிறது, விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை..." (எசேக்கியேல் 34 :5,6)

மேய்ப்பன் இல்லாத ஆடுகள் அவர்களுக்கு தலைவர் இல்லாததினால் அவைகள் சிதறடிக்கப்படும். ஆடுகள் இரத்தத்தின் வாசனையால் கிளர்ச்சியடைவது போல, இயேசுவின் இரத்தம் சிந்தப்படும் காலம் நெருங்கியது. பிரதான ஆசாரியனாகிய காய்பாவும் இயேசு மரிப்பதை முன் அறிவித்தான் - "அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கபோகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்." (யோவான் 11:52)

அடுத்ததாக நடந்து செல்லும் கூட்டம், வட திசையில் அமைந்திருக்கும் காய்பாவின் வீட்டை பார்த்திருக்கவேண்டும். அங்கு வசதியானவர்கள் குடியிருந்தார்கள். லாசரு மரணத்திலிருந்து எழுப்பின நாள் துவங்கி, காய்ப்பாவும், ஆலோசனை சங்கத்தாரும் இயேசுவை கொலை செய்ய திட்டமிட்டார்கள் என்று நாம் வாசிக்கிறோம். (யோவான் 11: 45-53) இந்த காய்பா - "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கு மென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் ....." (யோவான் 11 :49,50) என்று முன் அறிவித்தவன். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தன்னுடைய தீர்க்கதரிசனமான சத்தியத்தை வெளிப்படுத்த தேவன் ஒரு கழுதையை பயன்படுத்தினார் (எண்ணாகமம் 22:20-35, 11பேதுரு 2 :15,16)என்பதை நாம் பார்க்கும்பொழுது, நிச்சயமாக இந்த காய்பாவையும் அவ்வாறாக தேவன் பயன்படுத்தியிருக்கலாம்.

மேலும், பார்வையற்ற ஒருவன் தன் கண்களை கழுவி பார்வை பெற்ற சிலோவாம் குளம் வடக்கில் இருந்தது. (யோவான் 9 : 1 -7) யோவான் சுவிசேஷத்தின் துவக்கத்தில் -" ..காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும் படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்...." (யோவான் 9:39) என்று இயேசு வலியுருத்தினார். ஆனால் இஸ்ரயேலரை பொருத்த வரையில் தேவன் அவர்களை வேண்டுமென்றே அவர்களின் கண்களை குருடாக்கியிருந்தார். "... அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான். "(யோவான் 12 :39,40) தேவனுடைய இராஜ்யத்தில் சொல்லர்த்தமான குருடர்கள் பார்வையடையும் பொழுது இவர்களுடைய ஆவிக்குரிய கண்களும், செவிகளும் திறக்கப்படும். "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.."(ஏசாயா 35 :5)

மேலும் "கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்." (ஏசாயா 42:7)

அவர்களின் பயணத்தின் கடைசி அடியாக ஆலயத்தின் உப்பரிகையை கடந்தார்கள். இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கும்படி, இங்கிருந்து கீழே குதிக்கும்படி சாத்தான் அவரை கேட்டு கொண்ட இடம், என்பதும் இயேசுவின் நினைவுக்கு வந்திருக்கவேண்டும். கடைசியாக - "...நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா...." (மத்தேயு 27:39, 40) என்று அவரை கேலி செய்தார்கள்.

**திராட்சை செடியும் கொடிகளும்**

மேல் வீட்டு அறையில், அனைவரும் பாத்திரத்தில் உள்ள திராட்சைரசத்தை ஒருமித்து குடித்தார்கள். இவர்கள் பயணம் சென்ற பாதையிலும்,

பள்ளத்தாக்கிலும் திராட்சை தோட்டங்கள் இருந்தது. இந்த பாதையானது அவர்களை ஆலயத்திற்கு வழிநடத்தியிருக்கவேண்டும்.

வாசலில் செதுக்கப்பட்ட திராட்சை செடிகள் காணப்பட்டது. பொது மக்கள் ஆலயத்திற்கு செல்ல பெரும்பாலும் பயன்படுத்தக்கூடிய வாசலாக இருந்தது. மேலும் ஆலயத்தின் கதவுகளில் பொன்னினால் செய்யப்பட்ட ஒரு பெரிய திராட்சை செடியிருந்தது. யூத வரலாற்று ஆசிரியராகிய ஜோசபஸ் - "அந்த திராட்சை செடியின் சுற்றளவு ஒரு மனிதனுடைய சுற்றளவுக்கு ஒப்பாயிருந்தது" என்று எழுதியிருக்கிறார்.

திராட்சை செடி மற்றும் கொடிகளை பற்றி இயேசு எடுத்துகாட்டாக பயன்படுத்துவதற்கு இந்த காரியங்களில், ஏதோ ஒன்று இயேசுவை தூண்டியிருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டில் தேவனால் பராமரிக்கப்பட்ட இஸ்ரயேலர் அநேக முறை திராட்சை தோட்டத்திற்கும், திராட்சை களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. (ஏசாயா 5 :1-7, சங்கீதம் 80:8), எரேமியா 2:21) ஏசேக்கியேல் 15, 19 :10 -14) மற்ற பகுதிகள் அவர்களின் அவிசுவாசத்தினால் அந்த திராட்சை செடியின் மேல் வந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. (ஓசியா 10 :1 -11) இயேசு இவ்வசனங்களை நன்கு அறிந்திருந்த படியால், அவரே மெய்யான திராட்சை செடி என்பதை சீஷர்களுக்கு அறிவித்தார். (யோவான் 15:1)

இஸ்ரயேல் அபூரணமான திராட்சை செடியாக இருந்தது. ஆனால் இயேசு பூரணப்பட்டவராகவும், அவரிலிருந்து ஜீவ ஊற்றும் புறப்பட்டது. இங்கு பொருளும், நிழலுமான பாடங்களுக்குள் இருந்த தொடர்பை இயேசு விவரித்தார். திராட்சை செடியும் அதன் கொடிகளும், ஒரே சரீரத்தில் உள்ள அனைத்து அங்கங்களுக்கும் ஒப்பிடப்பட்டது. (1கொரிந்தியர் 12 :12) செடியிலிருந்து ஒரு கொடி வெட்டப்பட்டால், அது உலர்ந்து மரித்துவிடும். ஏனெனில், அந்த கொடி செடியிலிருந்து தான் ஜீவனை பெறுகிறது, அதுபோல நாமும் கிறிஸ்துவிடமிருந்து ஜீவனை பெறுகிறோம்.

அதிகமான கனிகளை கொடுப்பதற்கு நாம் அடிக்கடி சுத்திகரிக்கப்பட்டு, களை நறுக்கப்பட வேண்டும். இதற்கான செயல்களை நம்முடைய பிதாவாகிய தேவனே நடப்பிக்கிறார். (எபிரெயர் 12:4 -11) தொடர்ந்து அதிக கனிகளை கொடுப்பதற்கு நாம் இயேசுவுக்குள் நிலைநிற்பது மிக அவசியம். (யோவான் 15 :2- 4) அப்போஸ்தலனாகிய பவுலும் இதைக் குறித்து எழுதும்பொழுது - "..நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்...." (கொலோசேயர் 1:22, 23) என்றெழுதினார்.

அவருக்குள் நாம் நிலைத்திருக்கவேண்டும் என்று இயேசு கட்டளைக் கொடுத்தார். அவரையல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதற்காக மாத்திரம் அல்ல, அவருடைய வார்த்தைகள் நமக்குள் தங்குவதால், நாம் அந்த வார்த்தைகளாக மாறிவிடவேண்டும் என்ற விருப்பத்தோடும் இந்த கட்டளையை இயேசு கொடுத்தார். (யோவான் 15 :4,7)

எந்த திராட்சை கொடியும் தானாக கனிகளை கொடுக்கமாட்டாது. தோட்டக்காரருடைய அன்பான பராமரிப்பினால் மட்டுமே அவைகளால் கனிகொடுக்கமுடியும்.

"திராட்சை செடிக்கும் கொடிகளுக்கும் இருக்கும் ஐக்கியத்தை மிக நெருங்கிய தொடர்பாக சொல்ல முடியும். கொடியின் ஜீவன், பெலன், செழுமை, வளர்ச்சி இவ்வனைத்தும் செடியில் தான் அடங்கியுள்ளது. ஒரு கொடி தாய் செடியிலிருந்து வெட்டப்பட்டால் தன்னில் தான் ஜீவன் இல்லாததினால் அவைகள் மரித்து போகும். செடியிலிருந்து கொடுக்கப்படும் தண்ணீர் மற்றும் உணவினால் மட்டுமே ஒரு கொடியின் இலைகள் செழுமையாகி, பூப்பூத்து, காய்த்து, கனிகொடுக்க முடியும். ஆனால் கொடி வெட்டப்பட்டால் அது முழுமையாக உலர்ந்துவிடும்." - *ஜான் சார்லஸ் ரையில்.*

நாமும் இப்படியாகவே இருக்கிறோம். நாம் அவருக்குள்ளும், அவருடைய அன்பிலும் நிலைத்திருந்து, தொடர்ந்து ஜெப வாழ்க்கையில் விசுவாசத்தோடு, அவருக்கு கீழ்படிந்து,அவருடைய கற்பனைகளை கைக்கொண்டால் நிச்சயமாக நாம் கிறிஸ்துவ விசுவாசத்தின் அளவுகோலின் நிலைமையை அடைந்து அவருக்குள் அதிக கனி கொடுக்கலாம். (யோவான் 15:7 -9,17)

இயேசுவின் ஆறுதலான வார்த்தைகள் - "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்." (யோவான் 15:3) இயேசு தங்களை விட்டு செல்ல போகிறார் என்பதை சீஷர்கள் உணராதிருந்தார்கள். "என்னில் நிலைத்திருங்கள், ....கொடியானது .... அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாது....என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது."(யோவான்

15: 4,5) என்று இயேசு அவர்களுக்கு தெளிவாக சொன்னார். ஆவிக்குரிய வாழ்க்கையில் நிலைத்து நிற்கவும், ஆவிக்குரிய வரங்களை பெறவும் நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருக்கவேண்டும். நாம் அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு, ஆவிக்குரிய சிந்தையில் நிலைத்திருந்தால் - "பிதாவின் அன்பில் நிலைத்திருக்கமுடியும்." (யோவான் 15:10) ஏனெனில் பிதாவாகிய தேவனே கிறிஸ்துவ சந்தோஷங்களுக்கு ஊற்றும் காரணராயுமிருக்கிறார் - "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறை..."(யோவான் 15 :11)

"நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனை யாயிருக்கிறது." (யோவான் 15:12) என்ற கற்பனையை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார். ஆனால் இப்படிப்பட்ட அன்பை ஒருவர் மட்டும் வெளிப்படுத்தவில்லை. துவக்கத்தில் இயேசு யூதாஸை அனுப்பினதை அப்போஸ்தலர்கள் கண்டார்கள். தொடர்ந்து திராட்சை செடியை பற்றி பேச துவங்கினார். "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான். அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம்." (யோவான் 15:6) ஒரு கொடி வெட்டி எறியப்பட்டால், அது தன்னுடைய பரிசை மட்டும் அல்ல, அதன் ஜீவனையே இழந்து விடும்.

"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன, நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். "(யோவான் 15:16) என்பதற்காகவே இயேசு சீஷர்களை தேர்வு செய்ததாக சொன்னார். அது மட்டும் அல்ல - "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கு, இவைகளை சொல்லு வதற்காகவும்...."(யோவான் 15:11) சீஷர்களை இயேசு தேர்வு செய்தார். மேலும் - "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:12,13) என்பதற்காகவும் அவர் சீஷர்களை தேர்வு செய்தார். தன்னுடைய பிரதிநிதிகளாக வெளியே அனுப்பும்படியும் (யோவான் 20 :21)

தேவனுடைய குடும்பத்தின் அங்கங்களாகும் படிக்கும் இயேசு சீஷர்களை தேர்வு செய்தார். வாக்களிக்கப்பட்ட தேற்றரவாளன், எப்படிப்பட்ட ஆவியின் வழிநடத்துதலை கொடுத்து எஜமானனை போல வளர்ச்சி அடைய உதவி செய்கிறது.

**நண்பருக்காக ஒருவர் மரிப்பது**

துவக்கத்தில் இயேசு தன்னுடைய சிநேகிதர்களை "சிறு பிள்ளைகளே" (யோவான் 13:33) என்று அழைத்தார். தன்னுடைய தந்தையின் சிறப்பான அன்பைக் குறித்து பேசும் பொழுது, வேதாகமத்தில் இவ்விடத்தில் மட்டுமே சொல்லப்பட்ட "சிறு பிள்ளைகளே" என்ற வார்த்தையை பயன்படுத்தினார். (யோவான் 16 :27) சீஷர்களுக்காக தான் மரிக்கபோவதாக அவர்களுக்கு இயேசு சொல்ல முயற்சித்தார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். "(யோவான் 15 :13,14) இயேசு சீஷர்களுக்காகவும், இந்த உலகத்திற்காகவும் தன்னுடைய ஜீவனை கொடுக்கபோவதாகவும், அவர் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் அவரிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றும் சொன்னார். (யோவான் 12 :32)

இதை இயேசு சொன்னபொழுது அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்..." (யோவான் 15 :12) என்ற பிரமாணத்தை ஒவ்வொருவரும் கடைபிடிக்க ஊக்குவித்தார். அதே சமயம் "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்...."(யோவான் 15 :20 ) என்றும் எச்சரித்தார்.

அதற்கு பின் இயேசு -" என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்.

வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்ததேனானால், அவர்களுக்குப் பாவமிராது, இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும் படிக்கு இப்படியாயிற்று." (யோவான் 15:23 -25) என்று வெளிப்படையாகச் சொன்னார்.

இந்த உலகம் இயேசுவின் சீஷர்களை துன்புறுத்தியது - யோவான் மற்றும் பேதுரு சிறையில் அடைக்கப்பட்டார்கள், ஸ்தேவான் கல்லெறியப் பட்டார். பவுலும் சிறையில் அடைக்கப்பட்டு, சிறைசேதம் பண்ணப்பட்டார். இதுபோல் சுவிசேஷ யுகம் முழுவதும் மில்லியன் கணக்கான ஜனங்கள் துன்புறுத்தப்படுவார்கள். ஆனால் இயேசு - ".... வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்."(யோவான் 16:8) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கான காரணத்தை அடுத்த வசனத்தில் வாசிக்கலாம் - "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேக்கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."(யோவான் 15:26,27) என்றார்.

இராஜ்யத்தைக் குறித்த நற்செய்தி முதன் முதலில் யூதர்களுக்கு கொடுக்கப்பட்டது ஆனால், அவர்கள் இராஜ்யத்தின் நீதிகள், பாவத்திற்கான நியாயத்தீர்ப்பை குறித்துக் சத்தியங்களை ஏற்றுக்கொள்வில்லை. இந்த இராஜ்யத்திற்கு வழிநடத்தக்கூடிய சட்டங்களையும் அதன் கிரியைகளையும் அவர்கள் தவறாக புரிந்துகொண்டார்கள். இந்த உலகமும், யூதர்களும் கிறிஸ்துவையும் அவருடைய பணியையும் தொடர்ந்து விசுவாசிக்கவில்லை. "உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும், இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது..." (யோவான் 14 :17, 1கொரிந்தியர் 2 :11) என்பதினால் அவர்களால் இந்நாள் வரைக்கும் அவரை ஏற்றுகொள்ளமுடியவில்லை.

இவைகளை புரிந்துகொள்ளக்கூடிய ஆவியை பெந்தெகொஸ்தே நாளின் போது சீஷர்கள் முதன்முதலில் பெற்றார்கள். வரும் யுகத்தில் யூதர்களும் இந்த உலகமும் இயேசுவை தங்களுடைய இரட்சகராகிய மேசியாவாக அடையாளம் கண்டு கொள்வார்கள். மேலும் - "...தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)

யோவான் 16:8 ஆம் வசனத்தில் "கண்டித்து உணர்த்துவார்" என்ற வார்த்தையில், அதிகாரப்பூர்வமான சுயபரிசோதனையையும், கேள்விக்கிடமில்லாத ஆதாரமும், தீர்மானிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பும், தண்டித்து சீர்ப்படுத்தும் வல்லமையும் அடங்கியுள்ளது. இவைகளை செய்யும் பொழுது சத்தியம் தெளிவான வெளிச்சமாக அவருக்கு முன் காணப்படும். அதாவது அதுவே சத்தியம் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும்படி அது நிரூபிக்கப்படுகிறது. ஒருவன் இந்த சத்தியத்தை நிராகரித்தால், அவன் திறந்த கண்களோடு, மனப்பூர்வமாக தண்டனையை கையில் வாங்குவதற்காகவே அவர் நிராகரிக்கிறான் என்பது தெளிவாகிறது. *(வெஸ்காட்ஸ் கமன்டரி )*

இது ஆயிரவருட ஆட்சியின் வேலைகளை விவரிக்கிறது. ஆனால் "கண்டித்து உணர்த்துவது" என்ற வார்த்தை சீர்பொருந்துவது என்று பொருள்ப்படுகிறதில்லை. அதேசமயம் சீர்பொருந்துவதற்கு இந்த "கண்டிப்பு" மிக அவசியமானதாக இருக்கிறது.

இன்று தேவனால் அனுமதிக்கப்பட்ட தீமைகளின் விளைவுகள், வரும் யுகத்தில் நடக்கபோகும் நியாயத்தீர்ப்பின் போது உலகத்தில் பாவத்திற்கான நீதியான நியாயத்தீர்ப்பை குறித்து ஜனங்களின் சிந்தையும், நிலையும் ஏற்றுகொள்ளும் அளவுக்கு பக்குவப்பட்டிருக்கும் - "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது. எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன், உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்." (ஏசாயா 26:9)

"இன்னும் அநேகங்காரியங்களை நாம் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்..." (யோவான் 16:12,13) என்று இயேசு சொன்னார். இயேசு யார் என்றும், சிலுவையில் மரித்து தன்னுடைய சீஷர்களுக்காகவும், இந்த உலகத்திற்காகவும் என்ன செய்யபோகிறார் என்ற சத்தியங்கள் இதில் அடங்கியிருந்தது. இந்த ஆவி அவர்களுக்கு தேவைப்படும்போதெல்லாம் உதவி செய்தது, அதுமட்டும் அல்ல அவர்களின் உபத்திரவங்களில் அவர்களுக்குள் தங்கியது. (யோவான் 16 :2,4) "அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். "(யோவான் 16 :3) அனைத்து விசுவாசிகளுக்கும், இந்த ஆவி வாக்களிக்கப் பட்டிருக்கிறது. அனைத்தையும் மேற்கொண்டு வெற்றி பெற இந்த ஆவி விசுவாசிகளை ஊக்குவிக்கிறது ஏனெனில் - "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." (ரோமர் 8:14)

முந்தி இயேசு அவருடைய சீஷர்களை "ஊழியக்காரர்" என்று அழைத்தார். கெத்சமனேவுக்கு அவர் நடந்து செல்கையில் அவர்களை " சிறு பிள்ளைகளே" என்றழைத்தார். ஆனால் இப்பொழுது அவர்களை சிநேகிதர்கள் என்று அழைக்கிறார். இயேசு இந்த உலகத்தை இரட்சிக்க வந்தார், வருங்காலத்தில் நியாயத்தீர்ப்பின் நாளின் போது இவைகளை நிறைவேற்ற இயேசுவின் சிநேகிதர்கள் அவருக்கு உதவியாக இருப்பார்கள். "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." (யோவான் 15:15)

இறுதியாக, அவர்கள் பட்டணத்திற்கு வெளியே வந்தார்கள். கிதரோன் பள்ளத்தாக்கில் இவர்கள் இறங்கும் முன் நிலா வெளிச்சத்தில் தகதகவென மின்னும் ஆலயத்தை கண்டிருப்பார்கள். இவர்கள் பாதையில் இருந்த கல்லறைகள், தோட்டங்கள், மரங்கள் அனைத்தும் நெருங்கி கொண்டிருக்கும் இயேசுவின் மரணத்தை அவருக்கு உணர்த்திருக்கும். தொடர்ந்து நடக்கையில் இயேசு சீஷர்களோடு பேசி அவர்களை ஊக்குவிக்க முயற்சித்தார். இயேசு செய்ததை அவர்களுக்கு சொன்னார் -"என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்." (யோவான் 16:33) சீஷர்கள் தங்களைப்பற்றி புரிந்துகொண்டதை விட இயேசு அவர்களைப்பற்றி நன்கு அறிந்திருந்தார். ஆகவே கெத்சமனே தோட்டத்திற்கு வந்தவுடன், "அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி - நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு....." (லூக்கா 22 : 40,41)

இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் குறித்த வெளிபாடுகளைப் பற்றி சீஷர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன்பு இயேசு தன்னுடைய மரணத்தைக் குறித்து இவ்வளவு வெளிப்படையாக பேசவில்லை. ஆனால், இப்பொழுதோ என்ன நடக்கபோகிறது என்று விவரமாகச் சொன்னார்.

கடைசி இராபோஜனத்தின் போதும், கெத்சமனே தோட்டத்திற்கு நடந்து செல்லும் போதும் இயேசு தன்னுடைய வார்த்தைகளினால் மட்டும் அல்ல, அதற்கு பின் மரணத்திற்கு சற்று முன் அவருடைய பார்வையால் மட்டுமே பேதுருவுடன் பேச முடிந்தது. (லூக்கா 22 :61) கடைசியாக, சிலுவையில் சில வார்த்தைகளை பேசினார். இதுவே சீஷர்களுக்கு அவருடைய கடைசி செய்தியாக இருக்கும் என்பதை அவர் நிச்சயமாக உணர்ந்திருக்கவேண்டும். ஆகையால், அவருடைய கடைசி வார்த்தைகள் நித்தியமாக பதிந்திருக்கும்படி அவைகளை அவர் ஜாக்கிரதையாக தேர்வு செய்திருப்பார்.

நாம் அவருடைய வாழ்க்கையை கடைபிடிக்க முயற்சிக்கையில் இந்த பாடங்களையும் நாம் உட்கொண்டு, அவருடைய கடைசி வார்த்தைகளை நம்முடைய சிந்தைகளில் அசைபோடுவோமாக.

தீர்க்கதரிசனத்தில் இன்று ...

# இஸ்ரயேல் மற்றும் ஹம்மாஸ்

"உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக்கடவீர்கள், அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூறப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள்."- எண்ணாகமம் 10: 9

கடந்த ஜனவரி மாதம் முதல் பகுதியில் நடந்த இஸ்ரயேலின் காசாபகுதியில் நில அக்கரிமிப்புக்கான பதிலடி தான் நாள்தோறும் அங்கு நடக்கும் இரானுவ ஏவுகனையின் தாக்குதல்கள். கடந்த எட்டு வருடங்களில் மாத்திரம் நெகாவ் என்ற இடத்தில் உள்ள டேரோட என்கிற இடத்தில் சுமார் 24,000 பேர்கள் வாழ்கின்ற நகரப்பகுதி ,இதின் அருகில் உள்ள காசா என்னும் இடத்திலிருந்த ஹம்மாஸ் என்னப்படும் பிரிவினரால் சுமார் ஆயிரம் முறையாவது இரானுவ ஏவுகனைகளால் தாக்கப்பட்டுவருகின்றது. இந்த தாக்குதல் துவங்குவதற்கு முன்பாக விமானம் மூலம் வேறு நகருக்கு தப்பித்துகொள்ளுவதற்கு பதினைந்து நொடிகள் தரப்படும். இதை எச்சரிப்பு ஒளி முழங்கி அறிவிப்பர். சிலர் இது அடிக்கடி அங்கு நிகழ்வதால் அதை கண்டுகொள்ளாமல் வீட்டிலேயே தூங்கி விடுகின்றனர்.

அஸ்கிலோனின் கீழ் அமைந்துள்ள 122,000 வீடுகளுக்கு கொஞ்சம் பாதுகாப்பு இருக்கின்றது. ஆனாலும் நிறைய வீடுகளுக்கு தப்பித்துக்கொள்ளுவதற்கான போக்கிடம் இல்லை. ஒரு வேளை அருகில் உள்ளவர்களின் பாதுகாப்பில் தங்குவதற்கு, ஓடுவதற்குள் முப்பது நொடிகள் கடந்து விடும். அதற்குள் குண்டு பாய்ந்து விழும். குழந்தைகள் பள்ளி படிப்பிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். கடைகள் மூடப்பட்டுள்ளது. பெரியவர்கள் தூங்கும் பொழுது மின் விளக்கு எரிய விட்டு தூங்குகின்றனர். அதிலும் முதிர்வயதினர்கள் அதிக பாதிப்புக்குள்ளாகின்றனர். கடந்த ஐந்து படை தாக்குதல்களையும் கடந்து தப்பித்துகொண்டிருக்கிற சில நகர வாசிகள் இப்பொழுது போர் எச்சரிப்பின் சத்தம் வந்தாலும் "நாங்கள் இனி ஓடுவதில்லை" என்று முழுங்குகின்றனர்.

நெட்டிவோட், ஓபாக்கியோம், அஸ்கிலோன், கிடாரா, பேர்செபா, அஸ்டோட் போன்ற பகுதிகளில் சுமர் ஒரு மில்லியன் ஜனங்கள் வசிக்கின்றனர். இந்த பகுதிகள் காசா இரானுவ ஏவுகனைகள் தாக்குதல்களுக்குட்ப்பட்ட பகுதிகள். இஸ்ரயேல் தேசம் "ஆபரேஷன் காஸ்ட் லீடு" (Operation cast Lead) என்ற ஒப்பந்தத்தை செய்து, வீதிகளின் மேல் குண்டுபோடுவதை தடைசெய்து அறிவித்தபோது அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமாவும் ஒரு வேளை என் குழந்தைகள் மீது இவ்வாறு குண்டு தாக்குதல்கள் நடந்திருந்தால் இதே நடவடிக்கையை தான் நானும் எடுத்திருப்பேன் என்று கூறினார்.

ஹம்மாஸ்

அரபு மொழியில் "ஹம்மாஸ்" என்றால் வைராக்கியம் என்று பொருள். ஆங்கிலத்தில் அரபு மொழியில் ***Harakat al-Islamiya*** ( Islamic Resistance Movement) வாக்கியத்தின் சுருக்கமாகும். இஸ்லாமிய சகோதரர் ஒன்றிணைந்து ஒரு அரசியல் அமைப்பாக இது எகிப்து தேசத்தில் உருவெடுத்தது.

1960 -ன் இறுதியில் சேக் அஹமது யாசீன் குறிப்பிடும்படியாக சில சேவைகளை மேற்கு காசா பகுதியில் செய்தார். 1973 -ல் ஒரு இஸ்லாமிய அமைப்பை நிறுவி அரசியல் செயல் பாடுகளை இயக்கும்படி செய்தார். இதை தொடர்ந்து 1987 -ல் யாசின் ஹம்மாஸ் என்ற அமைப்பை ஒரு பொது அரசியல் கரமாக நிறுவி ஹம்மாஸ் கொள்கைகளை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். இந்த கொள்கையின் மிக முக்கிய பகுதி இஸ்ரயேல் தேசத்தை முற்றிலும் அழித்து பாலஸ்தீன அதிகாரத்தை காசா பகுதியை தலைமை இடமாக ஸ்தாபித்து, இஸ்லாமிய தேசமாக அதை அறிவிக்கவும் அல்லாவின் பெயர் ஒவ்வொரு அடியிலும் தேன்றும்படி செய்யவேண்டும் என்பதே அதன் முக்கிய பகுதி. அந்த கொள்கையின் இறுதியில் அஹிம்சையுடன் போராட அர்ப்பணிக்கிறோம் என்று முடித்துள்ளனர்.

ஐந்து வருடத்திற்கு பிறகு 1993 ஆம் ஆண்டில் முதல் மனித வெடி குண்டு வெடித்து சிதறியது. அன்று முதல் இந்த ஹம்மாஸ் அமைப்பு குறைந்த பட்சம் சுமார் 350 தாக்குதல்களில் 500 பேர்களை கொன்றிருக்கின்றன.

இதை தொடர்ந்து 2006 ஜனவரியில் பாலஸ்தீன அதிகார பொது தேர்தலில் கிடைத்த வெற்றியை அடுத்து ஹம்மாஸ் பாட்டா என்கிற மஹாமுத் அப்பாஸின் தலைமையிலான மிக பெரிய பாலஸ்தீன கட்சியுடன் அதிகாரத்திற்காக இன்று வரை போராடிவருகின்றனர்.

ஹம்மாஸ் ஒரு தீவிரவாத அமைப்பாக அமெரிக்கா இஸ்ரயேல் மற்றும் ஐரோப்பா நாடுகள் பிரகடனப்படுத்தியுள்ளன. இந்த அமைப்பு எந்த ஒரு சமாதானத்திற்கும் அனுமதி அளிப்பதில்லை. பேட்டா அரசாங்கத்துடனும் எந்த உறவும் வைத்துகொள்ளுவதில்லை.

2008 டிசம்பர் மாதத்தில் ஆராய்ச்சியாளர்கள் காசா பகுதியில் எகிப்திலிருந்து திருட்டுதனமாக கடத்தப்படும் பொருட்கள் இரகசியமாக கொண்டுவர பயன்படுத்தப்படும் குகைபாதைகள் அதிகரித்துள்ளதாக கூறியிருக்கின்றனர். இந்த குகைகள் காசா பகுதியின் பலத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களாக ஹம்மாஸ் அமைப்பு இந்த பகுதிகளை ஆண்டு வருகின்றனர். பாலஸ்தீன கருத்து கணிப்பின்படி குகைகளின் எண்ணிக்கை கடந்த 2008 -ல் மட்டும் 20 லிருந்து 500 ஆக உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றனர். பெரும்பாலான அந்த குகை பாதை 0. 1 மற்றும் 0.6 மைல்கள் நீளம் உள்ளதாகவும் காசா - எகிப்து எல்லையில் தோண்டப்பட்டுள்ளது. இந்த ஒரு பாதை அமைப்பு வெளிநாட்டு சரக்குகளை சுமார் 650 மில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களை ஒருவருடத்தில் மாத்திரம் கடத்த உதவுகின்றது. இதுவே இரண்டு வருடங்களுக்கு முன்பாக 30 மில்லியன் டாலராக இருந்தது.

இத்தகும் பாதைகள் காசா பகுதியில் அதிகம் தோன்றி வருவதால் அங்கு வேலை பார்க்க அதிகமாக ஜனங்கள் ஆர்வம் காண்பிக்கின்றனர். வேலையின்மை ராபாவில் 50% லிருந்து 20% மாக குறைந்துள்ளது. அதுமாத்திரம் அல்லாது அங்கு அதிகளவில் உருவாகிவரும் கடைகள் மற்றும் உணவு விடுதிகள் இதற்கு ஒரு ஆதாரம். இந்த குகைகள் வழியாக ராக்கேட் வெடிபொருட்கள் மற்றும் இதர அறிவு பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகிறது.

அநேக, இந்த கடத்தல்கள் மூலம் வரும் பணம் பெரும்பாலும் குகை முதலாலிகளுக்கும் ஹம்மாஸ் அமைப்பிற்குமே செல்லுவதாக புலம்புகின்றனர். அங்கு குடியிருக்கும் மக்களுக்கு எந்த விதமான முன்னேற்றமும் வரவில்லை. உண்மையில் ஹம்மாஸ் அதிகாரத்திற்கு வந்தபிறகு தெருவுக்கு தெரு பிட்சைக்காரர்களின் எண்ணிக்கை மட்டும் அதிகரித்துள்ளது.

இஸ்ரயேலின் மேல் அனுதாபமும்

"Operation Cast Lead" என்ற அமைப்பு செயல்பட துவங்கியவுடன் அநேக செய்தி தாழ்கள் இஸ்ரயேல் தேசத்தை ஆதரிக்க துவங்கியுள்ளனர். இதை "***Chicago Tribune, the Wall Street Journal and Atlantic***"போன்ற பத்திரிகைகள் அடங்கும். 2005 ஆம் ஆண்டில் இஸ்ரயேல் தேசம் காசா பகுதியை நல்லன நடவடிக்கையாக விட்டபொழுது ஹம்மாஸ் அந்த தீவிரவாத அமைப்பை விரிவுப்படுத்தி பாலஸ்தீன கட்சியினுடைய கூட்டுறவையும் உடைத்துகொண்டு அநேக ஜனங்களை தங்களுடைய பாதுகாப்பிற்காக அழித்து பள்ளிகள், வீடுகள் மற்றும் மசூதிகளை வெடிமருந்து பதுக்கி வைக்கும் இடமாக மாற்றினர்.

இன்னாட்களில் நடக்கக்கூடிய சம்பவங்களில் குறிப்பாக ஒன்று மட்டும் உறுதி. இஸ்ரயேல் தேசத்தின் எதிரிகள் கரங்களை கீழே போட்டால் இனிமேல் போர் என்பது இருக்காது. ஒருவேளை இஸ்ரயேல் தேசம் தங்கள் கரங்களை கீழே போட்டால் இஸ்ரயேல் தேசமே இனி இல்லாமல் போய்விடும். வரலாற்று மாணவர்கள், இஸ்ரயேல் தேசம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதை நிலைநாட்ட அநேக போர்களை சந்தித்துள்ளது என்பதை தெரிந்துவைத்திருப்பார்கள். இறுதி போரில் தேவன் செயல்பட்டால் மட்டுமே, இதற்கு தீர்வு கிடைக்கும்.இன்று இஸ்ரயேல் தேசம் தன்னுடைய சுத்ந்தரத்திற்காக போராடும் பொழுது தம்முடைய அநேக நிலங்களை விட்டு கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. தேவன் மோசேயை நோக்கி இவ்வாறாக கூறினார் - "சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம்வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன், நான் அந்தத் தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன், நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய். அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக. அவர்கள் உன்னை எனக்கு விரோதமாகப் பாவஞ் செய்யப்பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிருக்கவேண்டும், நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது உனக்குக் கண்ணியாயிருக்கும் என்றார்." (யாத்திராகமம் 23 :31 - 33)

இஸ்ரயேல் தன் முழு நிலத்தை இந்த வசனத்தின் பிரகாரம் உரிமைபாராட்ட வில்லை. சாமாதானத்திற்காக வாக்குத்தம் பன்னப்பட்ட நிலங்களை விடவேண்டிதாக இருக்கிறது. இன்று உலகத்தில் அநேக நாடுகள் இந்த பிரச்சனைகள் முடிவுபெறவேண்டும் என்று கூறுகின்றர். அதற்கு நேர்மாறாக அநேக தீவிரவாத அமைப்புகள் இஸ்ரயேல் தேசம் அழிய வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இஸ்ரயேல் ஒரு அற்புதம் என்று இவ்வுலம் வெகு விரைவில் புரிந்துகொண்டு கண்டறியும்.